
May 2023

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

14 YEARS ANNIVERSARY




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

iதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

May 2023
சுவடி — 13
ஓலை — 3

## வணக்கம் பல

மக்கள் எல்லோருக்குமே உணவும் உறைவிடமும் போலவே, அன்பும் அமைதியும்தான் அத்தியாவசியத் தேவை! ஆனால் அதிகாரத்தில் அமர்ந்துவிட்ட சிலருக்கோ, மமதை தலைக்கேறி மக்களைப் பற்றிய நினைப்பு மறந்து போய்விடுகிறது.

பதவி, அதிகாரம், அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்தில் மதிமயங்கி நிலை தடுமாறி என்னவெல்லாமோ ஆடிப் பார்க்கிறார்கள். இதன் விளைவாக நாட்டில் குழப்பமும் கலவரமும் பெருகுகிறது. சூடானில் நடக்கும் உள்நாட்டுக் குழப்பங்களால் அந்நாடு தீப்பற்றி எரிகிறது. பொன்கொழிக்கும் பூமி, பிறர் பழிக்கும் நிலைக்கு ஆளாகியிருப்பது வேதனைக்குரியது! அதிகார மமதை தலைக்கேறியவர்களால் மக்கள் படும் வேதனை சொல்லி மாளாது. அந்நாட்டின் பிரச்சினைக்கும், மக்கள் படும் துயருக்கும் உலக நாடுகள் தானாக முன்வந்து உதவிடும் முயற்சிகளைப் போர்க்கால அடிப்படையில் உடனடியாக முன்னெடுக்க வேண்டும்!

உழைக்கும் மக்களின் கட்சியாக அறியப்படும் கம்யூனிசத்தின் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடிக்கும் நாடுகளான சீனாவும் ரஷ்யாவும், தங்களை வல்லரசுகள்தான், அவை நல்லரசுகளாக இருக்கின்றனவா கேள்வி உலகெங்கும் எழுந்துள்ளது. அந்நாட்டு மக்கள் வாய்மூடிகளாகவும், ஆள்பவர்க்கு எதிராகக் குரல் கொடுக்க இயலாதவர்களாகவும் இருக்கும்போது அந்நாடுகளில் கம்யூனிச சித்தாந்தம் கேள்விக்குறிதான் என்பதை உணர முடிகிறது. மக்களின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டால், அங்கே மனிதன் என்ற உணர்வு மறைந்து எந்திர மனிதன் உருவாகி விடமாட்டானா? இதற்கெல்லாம் உரிமை பெற்றுத் தந்த நாள்தான் மே தினம்!

ஆனால் தமிழகத்திலோ மீண்டும் மனிதனை இயந்திரமயமாக்கும் விதமாக, பல்லாண்டுகாலம் போராடிப் பெற்றுத் தந்த 8 மணிநேர வேலையினை முடக்கி 12 மணிநேர வேலையாக மாற்றும் மசோதா தற்போது நிறுத்தி வைக்கப்பட்டாலும் மீண்டும் இது தலைதூக்கக் கூடாது! இதுபோன்ற நல்ல பல ஆக்கங்களையும் கதை, கட்டுரை, கவிதைகளையும் சுமந்தபடி மலர்கின்ற 'அய் தமிழ்' இதழை வழமைபோல வரவேற்று வாசியுங்கள்!.. நேசியுங்கள்!...

உழைப்பால் உலகை உயர்த்தும் அனைவர்க்கும் மே தின நல்வாழ்த்துக்கள்!

ஆசிரியர் குழு

## உள்ளே...

அதிகார மோகம்
சித்தாந்த மோதல்
தமிழே தமிழே
தொழில் சங்கமம்
சேரமான் கனவு
தல வரலாறு
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
யோக யாகம்!
மருத்துவ தமிழ்
உதவும் மனமே தெய்வம்

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# அதிகார

எப்போது கேட்டாலும் வெடிச்சத்தம். வானில் எங்கு பார்த்தாலும் கரும்புகை, எப்போதும் மனதில் தொற்றிக்கொண்டிருக்கும் அச்சம், எங்கும் பாயும் ராக்கெட்டுகள், தோட்டாக்கள், வதந்திகள் — இதுதான் இப்போது சூடானின் காட்சி.

சூடான் தலைநகர் கார்ட்டூம் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் நடக்கும் தாக்குதல் மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

முயற்சியில் இருவரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக களம் இறங்கியிருப்பது சூடான் நாட்டை சின்னாபின்னமாக்கி வருகிறது.

இவர்கள் இருவருக்குமான உறவுகள் பல ஆண்டுகளுக்கு முன்பு உருவானவை. சூடானின் மேற்கு பகுதியில் 2003—ம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப் போரின் போது டார்ஃபூர் கிளர்ச்சியாளர்களை அடக்குவதில் இவர்கள் இருவரும் முக்கிய பங்காற்றினர்.





இதன் மையப்புள்ளியில் இரண்டு தலைவர்கள்: சூடான் நாட்டு ராணுவத்தின் ஜெனரல் மற்றும் அதிபருமான ஃபத்தா அல்—புர்ஹான் ஒரு புறமும், துணை ராணுவப் பிரிவான ஆர்.எஸ். எஃப். தலைவர் ஜெனரல் ஹம்தான் தாகலோ என்ற ஹெமெத்தி மறுபுறமும் உள்ளனர்.

ஒரு காலத்தில் இவர்கள் இருவரும் ஒன்றாகப் பணியாற்றினார்கள் — இருவரும் இணைந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். ஆனால் இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றும்

ஜெனரல் புர்ஹான் டார்ஃபூர் பகுதியில் ராணுவத்தைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு உயர்ந்தார்.ஜன்ஜாவி என அழைக்கப்படும் அரபு போராளிகளின் ஒரு படைப் பிரிவுக்கு ஹெமெத்தி தலைவரானார். டார்ஃபூர் பிராந்தியத்தைச் சேர்ந்த அரபு அல்லாத கிளர்ச்சியாளர்களை ஒடுக்க இந்த படைப்பிரிவை சூடான் அரசு பயன்படுத்திக்கொண்டது.

இதற்கிடையே 2011—ல் தெற்கு சூடான் பிரிந்து சென்றதற்கு முன் தேசிய புலனாய்வு மற்றும்

# மோகம்

பாதுகாப்புப் படையின் துணை இயக்குனராக இருந்த மஜாக் டி’அகூட் பின்னர் தெற்கு சூடானில் துணைப் பாதுகாப்பு அமைச்சரானார்.

இந்நிலையில், ஜெனரல் புர்ஹான் மற்றும் ஹெமெத்தி ஆகியோரை டார்ஃபூரில் சந்தித்த அவர், அவர்கள் இருவரும் இணைந்து சிறப்பாகப் பணியாற்றியதாகத் தெரிவித்தார். இருப்பினும் அவர்களில் யாராவது ஒருவர் நாட்டின் தலைவராக வரக்கூடும்.





கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போரிட்ட ஒரு சாதாரண போராளிகள் படைத்தலைவராகத் தான் ஹெமெத்தி இருந்தார். ஆனால் புர்ஹானோ, ஒரு தலைசிறந்த படைப்பிரிவின் தலைவராக, அந்த ராணுவத்தை நன்கு அறிந்தவராக இருந்தார்.

சூடானைப் பற்றி நன்கு அறிந்திருந்த அலெக்ஸ் டி வால் என்பவர், கிளர்ச்சியாளர்களை அடக்க ராணுவம், இனப் போராளிகள், மற்றும் விமானப் படையைப் பயன்படுத்தி சூடான் அரசு கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியது என்றும் இப்படைகள், குடிமக்கள் உயிரிழப்பதைப் பற்றி எந்தக் கவலையும் இன்றி தாக்குதல் நடத்தின என்றும் தெரிவித்தார்.


21—ம் நூற்றாண்டின் முதல் இனப்படுகொலை டார்ஃபூரில் தான் நடந்தது என்று சொல்லுமளவுக்கு டார்ஃபூர் கிளர்ச்சியாளர்கள் மீது ராணுவ தாக்குதல் மட்டுமின்றி கூட்டம் கூட்டமாக பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தது போன்ற குற்றங்களும் அரங்கேறின.

## இரு ஜெனரல்களின் கூட்டு நடவடிக்கை

இதற்கிடையே ஜன்ஜாவீத் ஒரு பிரிவின் கமாண்டராக மாறிய ஹெமெத்தி, அப்படைப் பிரிவை அந்நாட்டு ராணுவத்துக்கு இணையாகவே நடத்திவந்துள்ளார். இந்நிலையில் யேமன் போரில் சௌதி கூட்டுப் படையினருக்கு வீரர்களை அனுப்பி உதவும் அளவுக்கு ஹெமெத்தி வளர்ந்தார்.

இதைத் தொடர்ந்து, சூடானின் அப்போதைய அதிபர் ஓமர் அல்— பஷீர் ஹெமெத்தியை அதிக அளவு சார்ந்திருக்கத் தொடங்கினார். ஒருவேளை ராணுவம் ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தாலும் ஹெமெத்தி தலைமையிலான துணை ராணுவம் உதவும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணமாக அமைந்தது.

அளிக்கும் வேலைகளை ஜெனரல் புர்ஹான் தொடங்கியதால், இதன் மூலம் முன்பிருந்த அதிபர் ஓமர் அல்— பாஷர் மீண்டும் ஆட்சிக்கு வருவதை உறுதி செய்யும் நடவடிக்கையை அவர் மேற்கொண்டதாகத் தெரியவந்தது. இது தெரிந்த பின் தான் ஹெமெத்திக்கு சந்தேகம் எழத் தொடங்கியதாகத் தெரியவருகிறது.




இந்நிலையில் கடந்த 2019—ம் ஆண்டு நாடு முழுவதும் நடைபெற்ற போராட்டங்களைத் தொடர்ந்து இரு ராணுவ ஜெனரல்களும் இணைந்து பஷீர் ஆட்சியை அகற்றினர்.

அந்த ஆண்டின் இறுதியில் இரு ஜெனரல்களும் இணைந்து பொதுமக்கள் மற்றும் ராணுவத்தின் கூட்டாட்சியை அமைத்து, அந்த அரசுத் தலைவராக புர்ஹானும், துணைத் தலைவராக ஹெமெத்தியும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.அதன் பின் 2021—ம் ஆண்டில் இருபிரிவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு, மீண்டும் இருவரும் முன்பைப் போலவே பொறுப்புக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

சித்திக் டவர் கஃபி என்பவர் பொதுமக்களின் பிரதிநிதியாக இந்த கூட்டரசில் பங்கேற்று இரண்டு ஜெனரல்களையும் அடிக்கடி சந்தித்து வந்தார். 2021—ம் ஆண்டு வரை இரண்டு ஜெனரல்களுக்கும் இடையே எந்த மோதலுக்கான அறிகுறியும் தென்படவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

அதன் பின், மதவாதிகள் மற்றும் பழைய தலைவர்களுக்கு மீண்டும் பழைய பொறுப்புக்களை

சூடான் அரசியலைப் பொறுத்தவரை, தலைநகர் கார்ட்டூம் மற்றும் நைல் நதியைச் சுற்றியுள்ள இனக்குழுவினரே எப்போதும் ஆதிக்கம் செலுத்திவருகின்றனர்.ஆனால் ஹெமெத்தி டார்ஃபூர் பகுதியிலிருந்து வருவதால் அவரை பல முக்கியத் தலைவர்கள் மதிப்பதில்லை என தெரியவருகிறது.

ஆனால் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக தன்னை ஒரு தேசியத் தலைவராக அனைவரும் அங்கீகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை ஹெமெத்தி மேற்கொண்டு வருகிறார். அதே போல் மக்களாட்சியை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இதற்கான கால அவகாசம் நெருங்கிய நிலையில் தான், ஹெமெத்தி தலைமையிலான படைகளை அந்நாட்டு ராணுவத்துடன் இணைக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதுவே தற்போதைய தாக்குதல்களுக்குக் காரணமாக மாறியுள்ளது. தாக்குதல் தொடங்கிய பின் ஆர்எஸ்எஃப் மற்றும் எஸ்ஏஎஃப் படைகளுக்கு இடையே கடும் மோதல்கள் நடந்துவருகின்றன.



இதற்கிடையே, மக்கள் தலைவர்கள் மற்றும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குழுக்களிடம் இருந்து இருதரப்பிடமும் பேசும் நபர்கள், தாக்குதலின் போது நடந்த அத்துமீறல்கள் தொடர்பான விசாரணை நடத்தவேண்டும் என நிர்பந்தித்து வருகின்றனர். இருதரப்புக்கும் இடையே பகை உணர்வு மென்மேலும் அதிகரித்துள்ள நிலையில், ஒரு காலத்தில் நண்பர்களாக இருந்தவர்கள் தற்போது இப்படி எதிரெதிர் திசையில் நிற்கின்றனர் என்பது சூடான் அரசியலை கேள்விக்குறியாக்கியுள்ளது.

கார்த்தும்: சூடானில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் 72 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். மக்கள் ரம்ஜான் பண்டிகையைக் கொண்டாட ஏதுவாகவும், விரும்புவோர் வேறு இடங்களுக்கு பெயரத் தோதாகவும் 72 மணி நேர போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது. இதனை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சூடான் ராணுவமும், துணை ராணுவப்படையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், "சூடான் கலவரம் தொடர்பாக ஆப்பிரிக்க யூனியன், அரபு லீக் மற்றும் பிற அமைப்புகளுடன் ஆலோசித்துள்ளேன். அனைவருமே சூடான் உள்நாட்டுப் போரை வன்மையாகக் கண்டித்தனர். இந்த மோதலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அனைவருமே வலியுறுத்தினர்.

உடனடி நடவடிக்கையாக, சூடானில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் 72 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். மக்கள் ரம்ஜான் பண்டிகையைக் கொண்டாட ஏதுவாகவும், விரும்புவோர் வேறு இடங்களுக்கு பெயரத் தோதாகவும் 72 மணி நேர போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்" என்றார்.

இந்நிலையில் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு புர்ஹான் அளித்தப் பேட்டியில், "நாங்கள் போர் நிறுத்தத்திற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் எங்களை எதிர்த்துக் களத்தில் உள்ள ஆர்எஸ்எஃப் படையினர் மக்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்ய மறுக்கின்றனர். மேலும், இந்த சர்ச்சை தொடர்பாக அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க யாரும் ஆதரவளிக்கவில்லை. அதனாலேயே வேறு வழியின்றி ராணுவத்தைப் பயன்படுத்துகிறோம்" என்றார்.

ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படை தலைவர் முகமது ஹம்தான் டகாலோ அதே நிறுவனத்திற்கு அளித்தப் பேட்டியில், " நாங்கள் மூன்று நாட்கள் அமைதியைக் கடைபிடிக்கத் தயாராக இருக்கிறோம். வெள்ளி அல்லது சனிக்கிழமை கொண்டாடப்படும் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 72 மணி நேர போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

300க்கும் மேற்பட்டோர் பலி: சூடானில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டி ராணுவத் தளபதி அப்தல் ஃபதா அல் புர்ஹான் தரப்பும், துணை ராணுவப் படையாக ஆர்எஸ்எஃப் பிரிவும் (ரேபிட் சப்போர்ட் ஃபோர்ஸ்) கடும் மோதலில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் அங்கு இதுவரை 330க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்: இந்நிலையில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்கப் பயணத்தின் ஒருபகுதியாக நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்துக்குச் சென்றார். அங்கு அவர் ஐ.நா. தலைவர் அண்டோனியோ குத்ரேஸை சந்தித்தார்.

"பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுவரும் சூடானின் முக்கிய வருமான ஆதாரமாக தங்கச் சுரங்கங்கள் மாறியுள்ளன." என்று கூறுகிறார் சூடான் விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவரான ஷெவிட் வோல்டெமிக்கேல்



இந்த சந்திப்பு குறித்து ஜெய்சங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில், "சூடான் கலவரம், ஜி20 மாநாடு மற்றும் உக்ரைன் விவகாரம் குறித்து ஆலோசித்தேன். சூடான் பிரச்சினை மீது முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சூடானில் உடனடியாக போர் நிறுத்தத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தேன். சூடான் விவகாரத்தில் ஐ.நா. மற்றும் பிற உறுப்பு நாடுகளுடன் தொடர்பில் இருக்கிறேன்" என்று பதிவிட்டிருந்தார்.

சூடானில் இந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னால் உள்ள அனைத்து காரணங்களிலும், ஒரு காரணி மிகவும் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. ஆப்பிரிக்கக் கண்டத்தில் அதிக அளவில் தங்கம் இருப்பு உள்ள பகுதிகளில் சூடானும் ஒன்று. 2022 ஆம் ஆண்டில் மட்டும் சூடான் அரசு 2.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 20,511 கோடி) மதிப்புள்ள 41.8 டன் தங்கத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது என்று அரசு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சூடானில் அதிகளவு தங்கம் எடுக்கப்படும் சுரங்கங்கள் பலவும் துணை ராணுவத்தின் அதிகாரத்தின் கீழ் உள்ளன. சூடான் மட்டுமல்லாது அதன் அண்டை நாடுகளிலும் தங்கம் வெட்டி எடுக்கப்படுவது, விற்பனை ஆகியவற்றில் ஆர்எஸ்எஃப் முக்கிய பங்கு வகிக்கிறது.

"ஆர்.எஸ்.எஃப்—ன் வருமானத்தில் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதுதான் இங்கு மிக முக்கியமான விஷயம். ராணுவத்திற்கு இந்த விஷயத்தில் பல சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் உள்ளன," என்று அவர் கூறினார். மறுபுறம், அதிகளவு சுரங்கங்கள் காரணமாக, சுற்றியுள்ள பகுதிகளில் அழிவுகரமான விளைவுகள் நடைபெறுகின்றன. இங்கு சுரங்க மேற்கூரைகள் இடிந்து விழுந்து பலர் இறக்கின்றனர். மறுபுறம், பாதரசம், ஆர்சனிக் உலோகங்கள் போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

சாபமாக மாறிய வரம்

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் இருந்து சூடான் 1956ல் சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர், நாட்டின் பிராந்தியங்களின் எல்லைகளை சரிசெய்வதில் சர்ச்சைகள் வெடித்தன. அந்த நேரத்தில், சூடானின் முக்கிய வருமானம் எண்ணெய் எடுப்பதன் மூலம் கிடைத்து வந்தது. இருப்பினும், 1980 களில், தென் பிராந்தியங்களில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது. இது வேகமாக அதிகரித்தது. இதன் விளைவாக 2011 இல் தெற்கு சூடான் குடியரசு என்ற புதிய நாடு உருவானது.

தெற்கு சூடான் உருவான பின்னர் சூடான் தனது எண்ணெய் வருவாயில் மூன்றில் இரண்டு பங்கை இழந்தது. வருமானம் குறைந்ததால், சூடானின்



பல்வேறு இனக்குழுக்கள், போராளிகள் மற்றும் ஆயுதக் குழுக்களுக்கு இடையே பதற்றங்கள் தொடங்கின. 2012 ஆம் ஆண்டில், வடக்கு சூடானில் உள்ள ஜெபல் அமீர் என்று அழைக்கப்படும் ஒரு பகுதியில் தங்கம் இருப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இது நாட்டின் நிதி நெருக்கடிகளை சமாளிக்க உதவுக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

“கடவுள் சூடானுக்கு வழங்கிய பரிசாக இந்த தங்க வளம் பார்க்கப்பட்டது. ஏனென்றால், தெற்கு சூடான் உருவானதன் மூலம் சூடான் அவர்களின் நிறைய வருமானத்தை இழந்தனர்” என்று டஃப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் சூடான் விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவரான அலெக்ஸ் டி வால் கூறினார். ஆனால், அந்த வரம் சில காலங்களில் சாபமாக மாறியது. “ஏனென்றால், இந்த தங்க வளம் கொண்ட சுரங்கங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக பல்வேறு அமைப்புகளும் போராளிகளும் மோதிக்கொள்ள தொடங்கினர். சுரங்கங்களில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, லட்சக்கணக்கான இளைஞர்கள் அப்பகுதிக்கு இடம்பெயர்ந்ததாக உள்ளூர் பதிவுகள் காட்டுகின்றன. அப்படிச் சென்றவர்களில் சிலர் தங்கத்தால் பணக்காரர்களாக ஆனார்கள், மற்றவர்கள் சுரங்கக் கூரைகள் இடிந்து இறந்தனர். மேலும் சிலர் பாதரசம், ஆர்சனிக் மாசுபாட்டால் இறந்தனர்” என்று அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டில், மேற்கு கோர்டோஃபான் மாகாணத்தில் தங்கச் சுரங்கத்தின் கூரை இடிந்து விழுந்ததில் 31 பேர் கொல்லப்பட்டனர். இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி மற்றொரு சுரங்க கூரை இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்தனர்.

சுற்றுச்சூழல் மாசுபாடு

2020 ஆம் ஆண்டில், சூடான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் தங்கச் சுரங்கங்களுக்கு அருகில் உள்ள நீர் நிலைகளின் நீர் மாதிரிகளை பரிசோதனை செய்தது. இதில், பாதரசம் 2004 பிபிஎம் மற்றும் ஆர்சனிக் 14.23 பிபிஎம் என்ற அளவுகளில் இருப்பது தெரியவந்தது. உலக சுகாதார அமைப்பின் (கீபிளி) படி, பாதரசம் 1 ppm விட அதிகமாக இருக்கக்கூடாது, இதேபோல் ஆர்சனிக் 10 ppm ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

கார்ட்டூமில் உள்ள பஹ்ரி பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் சட்டப் பேராசிரியர் எல் ஜைலி ஹமுதா சலே கூறுகையில், “இந்த உலோகங்கள் தண்ணீரில் உள்ளதன் காரணமாக பிரச்சனை ஒரு சுகாதார பேரழிவாக மாறியுள்ளது. சூடானில் 40,000 க்கும் மேற்பட்ட தங்கச் சுரங்கங்கள் உள்ளன. இங்கு சுமார் 60 தங்க சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்குகின்றன. தெற்கு கோர்டோஃபனில் 15 நிறுவனங்கள் செயல்படுகின்றன. எனினும், இங்கு யாரும் சுற்றுச்சூழல் விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை,” என்று அவர் கூறினார்.

மறுபுறம் இங்கு இனவாத மோதல்களும் இடம்பெற்றன. அல் பஷீருக்கு விசுவாசமாக இருப்பதாக கூறிக்கொள்ளும் பழங்குடியின தலைவர் மூசா ஹலீல் தலைமையில் இங்கு வெடித்த மோதல்களில் 800க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அந்த மோதல்களுக்குப் பிறகு, ஹலீல் சில பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு அங்கு தங்கம் தோண்டத் தொடங்கினார். இந்த தங்கத்தை அவர் கார்ட்டூமில் உள்ள அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளுக்கு விற்பனை செய்து வந்தார்.

2017 இல், ஹலீல் மீது படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அவர் சூடான் அரசாங்கத்தால் சர்வதேச அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டார். அப்போது ஹலீலை




ஆதரித்த ஹெமெட்டி, அந்த தங்கச் சுரங்கங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

அப்போது, நாட்டின் மொத்த ஏற்றுமதியில், தங்கத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் மட்டும், 40 சதவீதம் வரை இருந்தது. "தங்கம் ஹமெட்டியை நாட்டின் முக்கிய தலைவர்களில் ஒருவராக்கியது. மறுபுறம், சாட் மற்றும் லிபியாவின் எல்லைகளிலும் அவர் கட்டுப்பாட்டைப் பெற்றார்," என்று தேவால் கூறினார். ஜனநாயகம் எப்போது மீண்டும் திரும்பும்?

எனினும், 2019இல் உமர் அல்— பஷிர் அரசாங்கம் ராணுவ புரட்சி மூலம் கலைக்கப்பட்டது. நாட்டின் இரு ராணுவப் படைகளையையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஹெமெட்டி மற்றும் அல் புர்ஹான் ஆகியோரின் கைகளுக்குள் நாடு சென்றது.

"ஆர்எஸ்எஃப் தங்கச் சுரங்கங்களைக் கட்டுப்படுத்தும் நிலைக்குச் சென்றது, 70,000 ஜவான்கள் மற்றும் 10,000 டிரக்குகளுடன் நாட்டை இயக்கியது. கார்டூம் மற்றும் பிற நகரங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்ஆர்எஸ்எஃப்க்கு மட்டுமே இருந்தது " என்று டி வால் கூறினார்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்து ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதாக இரு தலைவர்களும் அறிவித்தனர். " இந்த கூட்டு ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, தங்கள் வசமுள்ள தங்கச் சுரங்கங்களின் கட்டுப்பாட்டை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க இரு தலைவர்களும் முடிவு செய்தனர் "

"கூட்டணி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தங்கச் சுரங்கங்களின் கட்டுப்பாட்டை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடம் ஒப்படைக்க இரு தலைவர்களும் முடிவு செய்தனர். ஆனால், ஹமெட்டியின் அதிகாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அல் புர்ஹான் வட்டாரங்களில் ஆர்எஸ்எஃப் மீதான சந்தேகம் அதிகரித்துள்ளது," என்று வோல்டெமிக்கேல் தெரிவிக்கிறார். இதற்கிடையே, வடக்கு சூடானில் உள்ள தங்கச் சுரங்கங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பலர் முயற்சிக்கின்றனர்.

"இதைக் கொண்டு, அல் புர்ஹான் தலைமையிலான ராணுவம், ஸிஷிதி தன் வசம் வைத்துள்ள அமைதி மற்றும் பாதுகாப்பைக் கட்டுப்படுத்தும் பொறுப்புகளை ஒப்படைக்க விரும்புகிறது. ஆனால், ஹமெட்டி இதற்கு உடன்படவில்லை" என்று வோல்டெமிக்கேல் கூறுகிறார். இருப்பினும், சமீபத்திய வன்முறை மோதல்களுக்குப் பின்னால் வேறு காரணங்கள் உள்ளன.

"இங்கு யார் ஜெயிப்பார்கள் என்று தெரியவில்லை. இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் வெளிநாடுகளில் இருந்து எதிர்ப்புகள் கிளம்பக்கூடும். இதன் மூலம் இரு கோஷ்டிகளும் பேச்சு வார்த்தைக்கு வர வாய்ப்பு உள்ளது," என்று அவர் தெரிவித்தார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



*"நான் ஊழல்வாதி என்றால் உலகில் ஒருவரும் நேர்மையானவர்கள் இல்லை!"*

**தில்லி முதல்வர் அரவிந்த் கெஜரிவால்**

*(இப்படி சொல்றதுக்கே ஒரு துணிவும் நேர்மையும் வேணும்!)*



*"ரெய்டு மூலம் தி.மு.க.வை அச்சுறுத்த முடியது!"*

**உதயநிதி**

*(ரெய்டு எல்லாம் சறுக்கு மரம் மாதிரி! நாங்கல்லாம் கட்டுமரத்து ஆளுங்க!)*



*"தி.மு.க சொத்து பட்டியல் தொடர்பாக சிபிஐ—யில் புகார் அளிக்க உள்ளேன்!"*

**அண்ணாமலை**

*(கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறியும் கதையாகிடாமல் இருந்தால் சரி!)*



*"வாடகை கட்டவில்லை என நோட்டீஸ் வரும் நிலையில் இருக்கிறேன்!"*

**கே.எஸ். அழகிரி**

*(தூக்கத்தில் கண்ட கனவை எல்லாம் இப்படி வெளியே பத்திரிகைகாரங்ககிட்ட சொல்லக் கூடாது?)*

# சித்தாந்த

## கம்யூனிசம் யாருக்கு சொந்தம்:

## சீனாவும் ரஷ்யாவும் பங்காளி சண்டை போட்ட சுவாரஸ்ய வரலாறு

**மா**வோ சேதுங் முதன்முறையாக சோவியத் யூனியனுக்கு சென்றபோது, ஜோசப் ஸ்டாலின் அவரைச் சந்திப்பதற்கு முன் மாஸ்கோவின் புறநகரில் உள்ள விருந்தினர் மாளிகையில் பல வாரங்கள் காத்திருக்கச் செய்தார். ஆனால் ஷி ஜின்பிங் ரஷ்யா சென்றபோது, நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது.

1950இல் மாவோவும் ஸ்டாலினும் சீனாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான நட்பு, கூட்டணி மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 73 ஆண்டுகளுக்குப் பிறகு, ஷி ஜின்பிங், விளாதிமிர் புதின் இருவரும் இரு நாடுகளுக்கும் இடையில் 'முன்னெப்போதும் இல்லாத நட்பை' உலகுக்கு வெளிப்படுத்தினார்கள். ஆனால் இரு நாடுகளும் சித்தாந்த வேறுபாடுகள், பிரிவினைகள், நல்லிணக்கம், ஆயுத மோதல்கள் என நீண்ட தூரம் கடந்து இங்கு வந்துள்ளன.

இந்த இரண்டு அண்டை நாடுகளின் வரலாறு நீண்டது மற்றும் சுவாரஸ்யமான பல சம்பவங்கள் நிறைந்தது. பல தசாப்தங்களாக, சோவியத் யூனியனும் சீனாவும் கம்யூனிசத்தின் இரண்டு பெரிய துருவங்களாக இருந்தன. கொள்கைகள் மற்றும் அவற்றின் உலகளாவிய செல்வாக்கு குறித்துப் பலமுறை மோதல்களும் ஏற்பட்டன. ஆனால் 1950களின் ஆரம்ப ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு இருந்தது.




சீன உள்நாட்டுப் போர், 1927 முதல் 1936 வரை நீடித்தது. 1945இல் மீண்டும் தொடங்கி, 1949 வரை தொடர்ந்தது. தேசியவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாட்டைக் கட்டுப்படுத்தப் போராடினர். பனிப்போரின் பின்னணியில், சீன உள்நாட்டுப் போரில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் எடுத்த சார்பு நிலையில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

சியாங் காயீ—ஷேக்கின் அரசியல் கட்சியான குவோமிதாங், அமெரிக்காவிடமிருந்து நிதி

# மோதல்

பீ.இராமலிங்கம்

உதவி மற்றும் ஆயுதங்களைப் பெற்றது. சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க அமெரிக்கா தனது 50,000 வீரர்களை அனுப்பியது. அதே நேரத்தில், மாவோ சேதுங்கின் சீன கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் சக்திகள் வலிமையானவையாக உருவெடுத்து, தேசியவாதிகளை தைவான் தீவிற்குத் தள்ள முடிந்தது. 1949ஆம் ஆண்டு சீனக் குடியரசு பிறந்ததாக மாவோ அறிவித்தார்.



ஸ்டாலினை பொறுத்தவரை, அமெரிக்காவின் செல்வாக்கை எதிர்கொள்ளவும், ஆசியாவில் சோசலிச கூட்டணியை விரிவுபடுத்தவும் கம்யூனிஸ்ட் சீனா சரியான பங்காளியாக இருந்தது. ஜப்பானியர்களுடன் (1937—1945) பல ஆண்டுகளாகப் போராடி உள்நாட்டுப் போரால் சீரழிந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய மாவோவுக்கு சோவியத் உதவி தேவைப்பட்டது.

சீனாவை விட்டு வெளியேறாத மாவோ, நிதி உதவி கேட்க முதல் முறையாக சோவியத் யூனியனுக்குச் சென்றார். அவர் தனது வாழ்நாளில், இரண்டு முறை மட்டுமே வெளிநாடுகளுக்குச் சென்றார். இரண்டாவது பயணமும் மாஸ்கோவிற்குத் தான் செய்தார். ஆனால் ஸ்டாலின் அதை எளிமையானதாக இருக்கவிடவில்லை.

சீன அரசியல் குறித்து பேராசிரியரும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புவிசார் அரசியல் மையத்தின் துணை இயக்குநருமான வில்லியம் ஹர்ஸ்ட் பிபிசியிடம், “மாவோ, ஸ்டாலினின் அணுகுமுறையால் அதிருப்தி அடைந்தார், அவரைக் காத்திருக்கவும் வைத்து, சீனாவுக்குத் தேவையானதைக் கொடுக்கவுமில்லை,” என்றார்.

உண்மையில், புதிதாக உருவாக்கப்பட்ட சீன மக்கள் குடியரசின் தலைவரைச் சந்திக்க ஸ்டாலினுக்கு பல வாரங்கள் ஆனது. மாஸ்கோவின் புறநகரில் உள்ள விருந்தினர் மாளிகையில் அவர் மாவோவை தங்க வைத்தார். அப்போது மாவோவின் நடமாட்டத்திற்கும் சில கட்டுப்பாடுகள்

விதிக்கப்பட்டன.அந்த நேரத்தில் சோவியத் யூனியன் ஒரு வல்லரசாக இருந்ததுடன் சீனாவை ஓர் 'அடிமை நாடாக'வும் பார்த்தது, இதுபோன்ற அவமானகரமான அணுகுமுறையையும் அவர் பொறுத்துக்கொண்டார். இருப்பினும், சில வாரங்களுக்குப் பிறகு, இரு தலைவர்களும் 'சீன—சோவியத் நட்பு, கூட்டணி மற்றும் பரஸ்பர



உதவி ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டனர். இது சீனாவுக்குத் தேவையான ஆதரவை வழங்கியது. இதுவொரு வகையான கம்யூனிச 'மார்ஷல் திட்டம்' ஆகும், இது மேற்கு நாடுகளின் தடைகளை முறியடிக்கச் சீனாவுக்கு உதவியது.

மாஸ்கோ ஒரு பெரிய சக்தியாகவும் முன்னோடியாகவும் இருந்தது. மாவோ சேதுங் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்பினார். இது அவர்களின் அப்போதைய பிரசாரத்திலும் எதிரொலித்தது. "இன்றைய சோவியத் யூனியன் நமது நாளை (எதிர்காலம்) போன்றது" என்பது அந்த ஆண்டுகளில் அடிக்கடி திரும்பத் திரும்பக் கேட்கப்பட்ட முழக்கம்.

அந்த நேரத்தில் மாஸ்கோ, சீனாவிற்கு ராணுவ மற்றும் நிதி உதவியை வழங்கியது. மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்கியது. இதுதவிர, ஆயிரக்கணக்கான பொறியாளர்களை சீனாவுக்கு அனுப்பி, அந்நாட்டில் தொழில்துறை வலையமைப்பை உருவாக்கப் பெரிதும் உதவியது. இருப்பினும், 1958க்கு பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமாகத் தொடங்கின.

இதுகுறித்து ஹார்ஸ்ட் விளக்குகிறார், "அந்த நேரத்தில் சீனா தனது 'கிரேட் லீப் ஃபார்வேர்ட்' (முன்னோக்கிய பெரும்பாய்ச்சல்) உத்தியுடன் மிகவும் தீவிரமான பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைத் தொடர முடிவு செய்திருந்தது. அதே நேரத்தில் சோவியத் யூனியனின் தலைவரான க்ருஷேவ் தனது அதிகாரத்தை ஒருங்கிணைத்து, உறுதியான ஸ்டாலின் ஆதரவாளர்களை ஓரங்கட்டினார்." ஸ்டாலின் 1953இல் உயிரிழந்தார். அதன் பிறகு ஆட்சி அதிகாரம் நிகிதா க்ருஷேவின் கைகளுக்கு வந்தது. அவர் ஒரு மிதமான சீர்திருத்தவாத தலைவராகக் கருதப்பட்டார்.

'அவர் (க்ருஷேவ்) ஸ்டாலின் கொண்டு வந்த பொருளாதார மாற்றங்களைச் சீர்திருத்தி சந்தை அடிப்படையிலான சோசலிசத்தை நோக்கி இட்டுச் செல்ல விரும்பினார். மாவோ இதற்கு நேர்மாறாக இருந்தார்." என்கிறார் ஹார்ஸ்ட்.

கிரேட் லீப் ஃபார்வேர்ட் கொள்கை பின்னர் வரலாற்றாசிரியர்களாலும் சீன கம்யூனிஸ்ட் கட்சியாலும் மிகப்பெரிய தவறு என்று விமர்சிக்கப்பட்டது. இந்தக் கொள்கையால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்தக் கொள்கையானது நாட்டின் விரைவான தொழில்மயமாக்கலை முன்வைத்தாலும், நடைமுறையில் எஃகு உற்பத்தியை மட்டுமே வலியுறுத்தியது. விவசாய உற்பத்தியைப் புறக்கணித்து லட்சக்கணக்கான விவசாயிகள் திரட்டப்பட்டுத் தொழில் துறையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால், நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது.



அமெரிக்க பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜோசப் டோரிசியன் ‘சீனா பவர்’ பாட்காஸ்டில், “மூலோபாய மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கான ஆழமான காரணங்களைத் தேடும் பழக்கம் மாவோவுக்கு இருந்தது, எப்போதும் கருத்தியல் நோக்கங்களைத் தேடும் பழக்கம் மாவோவுக்கு இருந்தது. எனவே, க்ருஷேவின் நடத்தையைப் பார்த்து, சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏதோ தவறு உள்ளது என்று கருதினார் அவர்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு நாடுகளுடன் “அமைதியான சகவாழ்வு” கொள்கைக்கான புதிய சோவியத் தலைவரின் விருப்பம்,“ஏகாதிபத்திய லட்சியங்களின்” விளைவாக மாவோ கருதினார். ஒருவரையொருவர் வெறுத்த மாவோவுக்கும் க்ருஷேவுவுக்கும் இடையே வளரத் தொடங்கிய இடைவெளி, இறுதியில் சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான உறவில் முறிவு என்பதில் வந்து முடிந்தது. இதன் விளைவாக, அந்த இரு நாடுகளும் ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டன. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மேலாதிக்கத்திற்காக இரு நாடுகளுக்கும் இடையிலான போட்டியும் அதிகரித்தது.

வில்லியம் ஹர்ஸ்ட் கூறுகிறார், “1960களின் பிற்பகுதியில், சீனா சோவியத் யூனியனை குறைந்தபட்சம் அமெரிக்காவை போலவே பெரிய அச்சுறுத்தலாகக் கண்டது. அந்த நேரத்தில் மாஸ்கோவில்கூட சீனாவை பற்றி இதே கருத்துதான் நிலவியது.

1966ஆம் ஆண்டில், சீனா கலாசாரப் புரட்சியைத் தொடங்கியது. அதன் காரணமாக பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டன. இது க்ருஷெவின் வாரிசான லியோனிட் ப்ரெஷ்நேவ் —ஆல் ‘நிலையற்றது மற்றும் ஆபத்தானது” என்று கருதப்பட்டது.

ஆயுத மோதல்

இந்த பரஸ்பர அவநம்பிக்கை இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையில் பல மோதல்களுக்கு வழிவகுத்தது. 1969ஆம் ஆண்டில் இந்த மோதல்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான மிகப்பெரிய ஆயுத மோதலில் முடிந்தது. இந்த மோதல் இரு நாடுகளின் எல்லையான ஜென்பாவ் தீவின் சிறிய ஆற்றில் நடந்தது. அந்த ஆண்டு மார்ச் மாதம் சோவியத் யூனியனை சீன துருப்புகள் தாக்கியதற்குத் தெளிவான காரணம் எதுவும் இல்லை. இருப்பினும், சில வரலாற்றாசிரியர்கள் மாவோ இந்த மோதலின் மூலம் ஒரு சமூக அணிதிரட்டலை விரும்பினார் என்று கருதுகிறார்கள்.

இது கலாசாரப் புரட்சியால் பல தசாப்தங்களாக ஏற்பட்ட குழப்பங்களுக்கு மத்தியில் ஒற்றுமையை மீட்டெடுக்க முடியும் என்பது அவர்கள் நம்பிக்கையாக இருந்தது. இந்த மோதலில், இரு தரப்பிலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. சோவியத் யூனியன் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திற்குள், நாட்டின் மறுபுறம், அதாவது ஷின்ஜியாங் எல்லையில் ஒரு புதிய மோதல் எழும் என்றும் நினைக்கவில்லை.

“அணு ஆயுதத் தாக்குதல் நடக்கலாம் என்றும், அது சாத்தியமில்லையென்றாலும், அதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் சீனர்கள் நம்புவதற்கு சோவியத் ஒன்றியம் தொடர்ச்சியான சமிக்ஞைகளை அனுப்பத் தொடங்கியது,” என்கிறார் கேம்பிரிட்ஜ் பேராசிரியர்

ஜோசப் டோரேசியன். இதற்குப் பிறகு சீனாவின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது.

கேம்பிரிட்ஜ் பேராசிரியர் டோரிசியன் கூறுகிறார், “அப்போதிருந்து, சீனா ஒரு ‘மூன்றாவது முன்னணி’ கொள்கையைத் தொடங்கியது. அதில் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனின் அணு ஆயுதத் தாக்குதலுக்கு எதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதும் அடக்கம். இது தவிர, அதன் தொழில் திறனை நாட்டின் தென்மேற்குப் பகுதிக்கு மாற்றுவதுடன், அனைத்து வகையான பாதுகாப்பு அமைப்புகளையும் உருவாக்குவதும் இந்தக் கொள்கையின் ஒரு பகுதியாக இருந்தது.



ஆனால் இந்த உத்தி நீண்ட காலம் நீடிக்கவில்லை. இரண்டு வல்லரசு நாடுகளை ஒரே நேரத்தில் சமாளிப்பது சாத்தியமில்லை என்பதை சீனா உணர்ந்துள்ளது. வில்லியம் ஹர்ஸ்ட் விளக்குவது போல், “சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்திருப்பதே பொருத்தமானது என்று சீனா கண்டறிந்தது, இது 1970கள் மற்றும் 1980களில் சோவியத் யூனியனுடனான உறவுகளில் மேலும் வீழ்ச்சியை விளைவித்தது”

“அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன், மற்ற அமெரிக்க அரசியல்வாதிகளைப் போலல்லாமல், இதை ஒரு வாய்ப்பாகக் கருதினார்,” என்று ஹர்ஸ்ட் கூறுகிறார்.

சோவியத் ஒன்றியத்தின் சர்வதேச செல்வாக்கைக் கட்டுப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபையில் சீனக் குடியரசின் இருக்கையை — தைவானில் குவோமிதாங்கை உருவாக்கியதும், பல நாடுகள் சீன அரசாங்கமாகக் கருதும் சீனக் குடியரசின் இருக்கையை, மக்கள் சீனக் குடியரசுக்கு வழங்க அமெரிக்கா ஒப்புக்கொண்டது. ஓர் ஆண்டு கழித்து, 1972இல், நிக்சன் சீனாவிற்கு ஒரு வரலாற்று விஜயத்தை மேற்கொண்டார், மேலும் 1979இல் இரு நாடுகளும் ராஜ்ஜீய உறவுகளை மீண்டும் நிறுவின.

1976ஆம் ஆண்டு மாவோவின் மரணம் நாட்டிற்கு ஒரு புதிய திசையைத் திறந்தது. டெங் ஷியோபிங்கின் தலைமையின் கீழ், சந்தை முன்பைவிட அதிகமாகத் திறக்கப்பட்டது. ஷியோபிங் “சீன குணாதிசயங்களுடன்” கூடிய, சோசலிசம் பற்றிய நடைமுறையில் இருந்த கருத்தை ஊக்குவித்தார்.

சீன—சோவியத் உறவு பிரச்னையின் தாக்கம் உலகெங்கிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் காணப்பட்டது. இருப்பினும், கம்யூனிச சித்தாந்தத்தின் மீதான மேலாதிக்கத்திற்கு சோவியத்துகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான போரின் பெரும்பகுதி ஒரு கருத்தியல் முன்னணியில் நடத்தப்பட்டது. இரு சக்திகளும், கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் போர்க்குணமிக்க குழுக்கள் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் இந்தக் கட்சிகளில் இருந்து தோன்றிய கொரில்லாக்கள் மீது செல்வாக்கு செலுத்த முயன்றன.

மெக்சிகோவின் மிச்சுவோகானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மிகேல் ஏஞ்சல், தனது கட்டுரை ஒன்றில், இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் இந்த விரிசல் கம்யூனிஸ்ட் கட்சிகளின் இதயத்தில் நுழைந்து விட்டதால், பல தீவிரவாதக் குழுக்கள் அமெரிக்காவுடனான “அமைதியான உறவை” நிராகரித்துள்ளன என்று எழுதுகிறார். எடுத்துக்காட்டாக, கொலம்பியாவில், கம்யூனிஸ்ட் கட்சி நெருக்கடியில் சிக்கி, அதிலிருந்து பிரிந்து மாவோயிசத்தின் செல்வாக்கின் கீழ் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியது. இந்தக் குழு, பின்னர் தேசிய விடுதலை ராணுவம் என்ற கொரில்லா குழுவை உருவாக்கியது.

அர்ஜென்டினா, ஈக்வடார், சிலி, பிரேசில்,



வெனிசுலா மற்றும் மெக்சிகோ போன்ற பிற நாடுகளில், மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் பிரிவிலும் இந்தப் பிளவு காணப்பட்டது. பெருவில் மாவோயிசம் செந்தெரோ லூமினோசோ போன்ற குழுக்களை உருவாக்கியது.

தென்கிழக்கு ஆசியாவில் சீனாவுக்கும் சோவியத்துக்கும் இடையே கருத்தியல் மோதல்கள் காணப்பட்டன. பேராசிரியர் டோரிசியன், “சோவியத் யூனியன் மிகவும் ஆபத்தானதாகக் கருதிய கம்போடியாவில் அத்தகைய குழுவிற்கு அந்த நேரத்தில் சீனா ஆதரவாக இருந்தது.” என்கிறார்.

சோவியத் ஒன்றியத்தின் சிதறல்

“1980 களில் சோவியத் யூனியன் சீனாவிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்தது. அது அமெரிக்கா—ஜப்பானுடன் நெருக்கமாக ஒத்துழைக்க சீனாவை ஊக்கப்படுத்தியது,” என்று ஹர்ஸ்ட் கூறுகிறார். ஆனால் 1991இல், சோவியத் யூனியன் சிதைந்து சர்வதேச அளவில் மீண்டும் ஒரு மறுசீரமைப்பு ஏற்பட்டது.

ரஷ்யாவின் புதிய அதிபரான போரிஸ் யெல்ட்சின் சீனாவில் நம்பிக்கை கொள்ளவில்லை, அவருடைய தலைமையின் கீழ் பெரிய அளவிலான தனியார்மயமாக்கல் நடந்து பெரும் சக்தி வாய்ந்த வர்க்கத்தின் கைகளுக்கு அதிக அதிகாரம் வந்தது. ரஷ்யா முழு முதலாளித்துவத்திற்குள் நுழைந்தது.

ஆனால், சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உருவான கூட்டணி அப்போது அர்த்தமற்றதானது. 2001இல், ரஷ்யாவும் சீனாவும் நல்ல அண்டை நாடு மற்றும் நட்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

வில்லியம் ஹர்ஸ்ட், “அப்போதிருந்து, பல்வேறு சக்திகளுக்கு இடையில் சமநிலையைக் கண்டறியவும், அந்த இடத்தை அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் மட்டுமின்றி இந்தியா அல்லது ஐரோப்பாவிற்கும்கூட தர சீனா தொடர்ந்து முயன்று வருகிறது,” என்று கூறுகிறார்.

கடந்த 30 ஆண்டுகளில், அமெரிக்கா மற்றும் ஜப்பானுடனான சீனாவின் உறவுகள் தொடர்ந்து பலவீனமடைந்து, கடந்த பத்தாண்டுகளில் அவை மோசமடைந்து வருகின்றன. “இதனால், சீனா ரஷ்யாவின் நட்பு நாடாக இல்லாவிட்டாலும், ரஷ்யாவுடன் நேர்மறையான உறவைப் பேணுவது முக்கியமானது. சீனாவுக்கு உலகில் ஒரே ஒரு அதிகாரப்பூர்வக் கூட்டணி நாடுதான் உள்ளது. அது வட கொரியா,” என்று கூறுகிறார் ஹர்ஸ்ட்.

இருப்பினும், கூட்டாளியாக இருந்தாலும் இல்லாமல் போனாலும் “ரஷ்யா சீனாவிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது,” என்பதை நிபுணர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ரஷ்யா தற்போது சீனாவின் முக்கிய நட்பு நாடாக மாறியுள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக, விமானத் துறையை மேம்படுத்த பல முக்கிய தொழில்நுட்பங்களை சீனாவுக்கு வழங்கி வருகிறது ரஷ்யா.

எடுத்துக்காட்டாக, ரஷ்யாவில் இருந்து பெறப்படும் தடையில்லா எரிசக்தியால், சீனா, மத்திய கிழக்கு மற்றும் அமெரிக்காவிலிருந்தான் சீனா தனது இறக்குமதியைப் பல்வகைப்படுத்தவும் சமநிலைப்படுத்தவும் முடிகிறது.

சீனாவும் ரஷ்யாவும் மீண்டும் நெருக்கமாகிவிட்டன, ஆனால் இப்போது ரஷ்யாவிற்கு சீனாவின் ஆதரவு அதிகம் தேவைப்படுகிறது. சீனா நுகர்வோர் பொருட்களின் முக்கிய சப்ளையர் மற்றும் தற்போது ரஷ்யாவின் வர்த்தக பங்காளியாகவும் உள்ளது. யுக்ரேன் போருக்குப் பிறகு ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை முறியடிப்பதில் சீனா முக்கியப் பங்காற்றுகிறது.

மாவோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க ரஷ்ய பயணத்திற்கு எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இரு நாடுகளின் நிலைகளும் இன்று தலைகீழாக மாறியுள்ளன. ஷி ஜின்பிங் ரஷ்யா சென்றார். ஆனால் இப்போது விருந்தினர் மாளிகையில் நீண்ட காத்திருப்பு இல்லை. புன்னகையும் சிவப்புக் கம்பள வரவேற்பும் மட்டுமே இருந்தன.




## மாபெரும் தமிழ்க் கனவு

**த**மிழ்நாடு அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களில் ஒன்று 'மாபெரும் தமிழ்க் கனவு' என்பதாகும். தமிழ்நாடு முழுவதுமாக மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் நூறு கல்லூரிகள் தேர்வு செய்யப்பட்டன. அக்கல்லூரிகளில் ஐந்நூறு மாணவர்களும் அம்மாவட்டத்திலுள்ள பிற கல்லூரிகளிலிருந்து தலா ஐம்பது மாணவர்களும் தேர்வு செய்யப்பட்டு அரங்கில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அமர வைக்கப்பட்டனர்.

தமிழக அளவில் கருத்தாளர்களாக விளங்குகிற, ஏற்கெனவே கல்லூரிகளில் மாணவர்களிடையே உரையாற்றிய அனுபவம் மிக்க இரண்டு சொற்பொழிவாளர்கள் தனித்தனித் தலைப்புகளில் உரை நிகழ்த்த அழைக்கப்படுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் நிகழ்த்துகிற ஐந்து அல்லது பத்து நிமிட நோக்கவுரைக்குப் பின்னர் இரண்டு சொற்பொழிவாளர்களும் தலா முக்கால் மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் வரை உரையாற்றுகின்றனர்.

உரையாற்றிய பின்னர் மாணவர்கள் கருத்தாளர்களிடத்தில் கேள்விகள் கேட்கின்றனர். பதிலளிக்கிறார்கள் கருத்தாளர்கள்.

நிகழ்ச்சி முறையாகத் தொடங்குவதற்கு முன்பு வந்திருக்கிற மாணவர்களில் சிலருக்கு மேடையில் ஓரிரு நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அதற்கும் முன்னதாக அந்நிகழ்வில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் 'தமிழ்ப் பெருமிதம்' என்ற 46 பக்க சிறுநூல் ஒன்று வழங்கப்படுகிறது. அதில் செறிவான 35 குறுங்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அந்நூலே அந்நிகழ்வின் நோக்கத்தை சாறாய்ப் பிழிந்து தந்து விடுகிறது.

அந்நூலின் முன்னுரை 'தமிழர்களின் பெருமிதங்கள் நம் முன்னோர்களின் பேருழைப்பாலும் பொதுமை நலத்தாலும் விளைந்தவை. கலை, இலக்கியம், வரலாறு, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம் என பல துறைகளிலும் உயரிடத்தைப்பிடித்த பெருஞ்சமூகம் நம்முடையது' என்ற நம்பிக்கை வாசகங்களோடு தொடங்குகிறது.

'இது தரவுகளின் காலம். தரவுகள் இல்லாத எந்தத் தகவலுக்கும் முக்கியத்துவம் இல்லாத காலம். வலுவான வரலாற்று ஆவணங்களைக் கொண்டிருக்கும் சமூகம் என்பதால் இந்தக் காலத்தை எதிர்கொள்வதற்கான மொழி நமக்கு உண்டு' என்ற வரிகள் மேலும் இக்கருத்தாக்கத்திற்கு வலு சேர்க்கின்றன.

'சமத்துவம் ... தமிழ் அறத்தின் அடிப்படை', 'கீழடி நம் தாய்மடி', 'தன்னேரிலாத தமிழ்நாடு ', 'தமிழர் பெருமிதம் சங்க இலக்கியம்', 'வாழும் வள்ளுவம்', 'விடுதலைப் போரில் வீரத் தமிழகம்',






‘பசிப்பிணி போக்கிய பண்பாளர்’, ‘கோயில்களும் அரண்மனைகளும் கற்காப்பியங்கள்’, ‘நீர் மேலாண்மையில் நிபுணத்துவம்’, ‘பழம்பெரும் தமிழ் இலக்கணம்’, ‘ஷேக்ஸ்பியருக்கு முன்னரே பிறந்த தமிழ் அச்சு நூல்’, ‘தேசியக் கவியும் புரட்சிக் கவியும்’, ‘தமிழ்நாட்டில் காந்தி ’, ‘விடுதலைக்கான கருவி கல்வி’, ‘பெண்மை போற்றுதும்’, ‘தரணி போற்றும் தமிழர்கள்’, ‘முன்னேறு... எதுவும் நமக்கான களம்’ —இவை அந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைத் தலைப்புகளுள் சில.

சொற்பொழிவுகள் தொடங்குவதற்கு முன்பு சில நிமிட காணொலி ஒன்று திரையிடப்படுகிறது. அது முழுக்க முழுக்க உரைகளைக் கேட்க மாணவர்களின் கவனத்தைக் குவிமையப்படுத்துகிற முயற்சி. உரைகளை உன்னிப்பாகக் கேட்க வைக்க மேற்கொள்ளப்படும் ஈர்ப்பு நடவடிக்கை. காணொலி முடிந்தவுடன் மாணவர்கள் தன்னெழுச்சியுடன் உணர்ச்சி கலந்த கரவொலி எழுப்புகின்றனர்.

இந்நிகழ்வுகளின் தனித்தன்மைகளில் ஒன்று, இது முழுக்க முழுக்க தமிழ்நாடு அரசு நடத்துகிற விழாவாக இருப்பினும் திருவள்ளுவர் படத்தை மட்டும் மையப்படுத்தியதாகும். அழைப்பிதழ், சிறப்பு நூல், மேடைப் பின்புலம், அரங்கம் முன்பு வைக்கப்பட்டுள்ள அறிவிப்புத் தட்டிகள் உள்பட எந்த இடத்திலும் வழக்கமான அரசு விழா அலங்காரங்கள் எவையும் இல்லை. அனைத்து இடங்களிலும் வள்ளுவர் மிளிர்ந்தார். ஒரு கல்வி நிகழ்வு எவ்வாறு நடக்க வேண்டுமோ, அடுத்த தலைமுறையை வழிநடத்தும் நிகழ்ச்சி எப்படி நடத்தப்பட வேண்டுமோ அந்த இலக்கணத்தோடு இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டன. முதலமைச்சர் படம் கூட எங்கும் காணப்படவில்லை. அரசு இலட்சினை மட்டுமே இருந்தது. இத்தனைக்கும் இந்நிகழ்வு முழுக்க நேரடியாக முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு நடத்தப்பட்டதாக அறிகிறோம்.

அரசியல் கட்சிகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ நினைவுபடுத்தும் வகையில்

த.ஸ்டாலின் குணசேகரன்


இத்தகைய கல்வி சார்ந்த அரசு நிகழ்வுகளை நடத்தாமல், அதற்குரிய தனித்தன்மையோடு நடத்துவது வரவேற்கத்தக்க நல்ல முன்னுதாரணமாகும்.

இத்திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு முதலமைச்சரின் அலுவலக உயர் அதிகாரிகள் இந்நிகழ்வின் சொற்பொழிவாளர்கள் கூட்டமொன்றை இணைய வழியில் ஏற்பாடு செய்திருந்தனர். அதில் முதலமைச்சர் எந்த




அளவுக்கு இத்திட்டத்தில் ஆர்வமாக உள்ளார் என்பதை விளக்கியதோடு எந்த நிகழ்கால அரசியல் தலைவர் பற்றியும் விதந்தோதிப் பேசுவதைத் தவிர்த்தும் அரசியல் சார்பற்றும், எடுத்துக்கொண்ட தலைப்புகளில் ஆழமாகவும் , மாணவர்களிடையே நல்ல விளைவை ஏற்படுத்தும் விதத்திலும் பேச வேண்டுமென்பதையே முதல்வர் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட மையக் கருத்தோட்டத்தை பிரதிபலிக்கும் எந்தத் தலைப்பை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு பேசுகிற




வாய்ப்பை பேச்சாளர்கள் பெற்றிருந்தனர். அதன் காரணமாக அவர்கள் உள்ளத்தில் நெடுநாள் தேக்கி வைத்திருந்த உன்னத சிந்தனைகளை உயிரோட்டமாக எடுத்துரைக்கும் கருத்துக்களமாக இக்கல்லூரி மேடைகள் பரிணமித்தன.

இத்திட்டத்தின் கீழ் யாமே, பழந்தமிழ்க் கல்வெட்டுகள், சிற்பக்கலை, கட்டடக் கலை, ஓலைச் சுவடிகள், சங்கத் தமிழ் இலக்கியம், வேலூர் புரட்சி 1806, விடுதலைப் போரில் தமிழ்ப் பெண்கள் உள்ளிட்ட பொருண்மையில் பதினொரு தலைப்புகளில் பதினொரு கல்லூரிகளில் உரை நிகழ்த்தியுள்ளோம்.

இவ்வாறு வரலாற்றுப் பெருமிதத்தை அறிவியல்பூர்வமான ஆதாரங்களோடு விளக்கும் எமது உரைகளைப் போலவே அறிவியல், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, தன்னம்பிக்கை, புத்தக வாசிப்பு போன்ற பல துறைசார்ந்த விற்பன்னர்கள் — சொற்பொழிவாளர்கள் — கருத்தாளர்கள் அவரவர்க்கு ஏற்ற தலைப்புகளில் உரையாற்றியுள்ளனர்.

மொத்தத்தில் இத்திட்டத்தின்படி நூறு கல்லூரிகளில் மொத்தம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறுவதே இலக்காகும். தொண்ணூற்று ஒன்பது கல்லூரி நிகழ்வுகள் நிறைவு பெற்று விட்டன. நூறாவது நிகழ்வு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் இன்று (ஏப். 24) நடைபெறவுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் இந்நிகழ்வில் பங்கேற்கிறார். இந்நிகழ்வுகளின் சிறப்பம்சங்களில் ஒன்று மாணவர்களின் கேள்வி நேரமாகும். உரைகளைக் கேட்டு உள்வாங்கிய மாணவர்கள் தங்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களை கருத்தாளர்களிடம் கேள்விகளாக எழுப்புகின்றனர்.

'பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எழுத்தறிவிலும் கல்வியிலும் சிறந்து விளங்கியதாகத் தெரிவித்தீர்கள். அப்படியானால் இன்றளவும் நூறு சதவிகிதம் கல்வி கற்றவர்களாகத் தமிழர்கள் இல்லையே, ஏன்?', 'வாசிப்பு குறித்து அழுத்தமாகப் பேசியுள்ளீர்கள். நான் எந்தப் புத்தகத்திலிருந்து எனது தீவிர வாசிப்பைத் தொடங்குவது' போன்ற பல கேள்விகளை ஆர்வமாகக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டனர் மாணவர்கள்.

உரை முடிந்த பிறகு மாணவர்கள் கேள்வி கேட்கத் துடிப்பதிலிருந்தே அவர்கள் உரைகளைக் கவனமாகக் கேட்டுள்ளனர் என்பதையும் அவ்வுரைகள் அவர்களுக்குள் ஏதோ ஒரு சிறு கிளர்ச்சியையேனும் உண்டாக்கியிருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

கூட்டம் நடப்பதற்கு வெளியே புத்தக அரங்குகளோடு 'நான் முதல்வன்', 'மாணவர்களுக்கு வங்கிக் கடன்', 'வேலைவாய்ப்பு', 'மகளிர் மேம்பாடு' உள்ளிட்ட சமூக விழிப்புணர்வூட்டும் வேறு சில அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. தமிழ் இணையக் கல்விக் கழகம் மாநில அளவில் இந்நிகழ்வை ஒருங்கிணைக்கிறது. மாவட்ட நிர்வாகம் களப்பணியாற்றுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் நிகழ்வுகளுக்கு வருவதோடு முழு நிகழ்வையும் வழிநடத்துகிறார்.

மொத்தத்தில் 'மாபெரும் தமிழ்க் கனவு' திட்டம் மாணவர்களிடையே பாடப் புத்தகங்களைத் தாண்டிய சமூக உணர்வை, வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதோடு, தனித்திறன்களை வளர்க்கவும் அடித்தளமிடும் என்பதில் சந்தேகமில்லை. பலருக்கு இதில் புது வெளிச்சம் கிட்டியிருக்க வாய்ப்புண்டு.

மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கையேடான 'தமிழ்ப் பெருமிதம்' நூலின் கடைசிப் பக்கத்தில் இடம்பெற்றுள்ள 'இடைப்பட்ட நூற்றாண்டுகளில் வரலாற்றில் நாம் எங்கோ அழுத்தப்பட்டது புரியவரும். உலகின் முன்னேறிய சமூகங்கள் மத்தியில் நாம் இன்னும் அடைய வேண்டிய உயரமும் அதற்கு நம்முடைய சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் பெறவேண்டிய முன்னேற்றமும் புலப்படும்' என்ற வரிகள் நிச்சயம் அடுத்த தலைமுறையை சிந்திக்கத் தூண்டும்.

இத்தகைய விதவிதமான வித்தியாசமான தொடர்ந்த பலகோண முயற்சிகளால் மட்டுமே பூத்துக் குலுங்குகிற புத்தெழுச்சிமிக்க தமிழ் மண்ணை உருவாக்க முடியும்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# தொழில்

## 12 மணி நேர வேலை திட்டம் – தொழிலாளர்களுக்கு வரமா? சாபமா?

தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர் தினமும் 12 மணி நேரம் பணியாற்ற அனுமதிக்கும் சட்டத்திருத்தம் தமிழக சட்டப்பேரவையில் பெரும் எதிர்ப்புக்கு நடுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத் திருத்ததின் படி தொழிலாளர்கள் இனி வாரத்திற்கு 48 மணி நேர வேலையை தினமும் 12 மணி நேரம் என்ற அடிப்படையில் 4 நாட்கள் செய்ய வேண்டும். மீதமுள்ள 3 நாட்கள் அவர்களுக்கு விடுமுறை அளிக்கப்படும் என தமிழ்நாடு அரசு கூறுகிறது.




வாரத்தில் 4 நாட்கள் வேலை என்ற நடைமுறை அறிமுகமாவது இது முதல் முறையல்ல. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் இருக்கும் நிறுவனங்கள் இதை ஏற்கெனவே அறிமுகப்படுத்தி இருக்கின்றன. அமெரிக்காவின் சில நிறுவனங்களும், ஐரோப்பா கண்டத்தில் உள்ள இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளிலும் இந்த திட்டம் நடைமுறையில் இருக்கிறது. கடந்த சில வருடங்களாக நடைமுறையில் இருக்கும் இந்த 4 நாள் வேலைத்திட்டத்தின் மூலம் என்ன மாற்றங்கள் நடந்து இருக்கிறது? இத்திட்டத்தினால் பயனடைவது ஊழியர்களா? நிறுவனங்களா? ஊழியர்களுக்கு வேலைப்பளு அதிகமாகி இருக்கிறதா?

வாரத்திற்கு 4 நாள் வேலை எப்படி உருவானது?

ஊழியர்களின் வேலை நேரம் குறித்த விவாதம் எழுவது புதிதல்ல. 1926 ஆம் ஆண்டில், ஃபோர்டு மோட்டார் நிறுவனம் திங்கள் முதல் வெள்ளி வரை வேலை என்ற முறையை தனது நிறுவனத்தில் அறிமுகப்படுத்தியது.

அதற்கு முன்பு வரை ஆறு நாள் வேலை வாரம் என்ற நடைமுறை அங்கு இருந்தது. “ஹென்றி ஃபோர்டின் கோட்பாடு என்னவென்றால், ஐந்து நாட்கள் அதே சம்பளத்துடன் வேலை செய்தால் தொழிலாளர் மத்தியில் உற்பத்தித்திறன் அதிகரிக்கும். இதனால் குறுகிய காலத்தில் அதிக வேலையை செய்து முடிப்பார்கள்,” என்று அமெரிக்க பகுப்பாய்வு நிறுவனமான கேலப்பின் பணியிட மேலாண்மை, நலவாழ்வுக்கான தலைமை விஞ்ஞானி ஜிம் ஹார்ட்டர் கூறுகிறார். இதனால் விளைந்த நேர்மறை நன்மைகளால் அதற்குப் பிந்தைய தசாப்தங்களில், ஐந்து நாள் வேலை வாரம் என்பது உலகம் முழுவதும் பல நாடுகளில் பொதுவான நடைமுறையாகிவிட்டது.

பின்பு, 1950களில், நான்கு நாள் வாரத்தை

# சங்கமம்

அறிமுகப்படுத்துமாறு தொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை வைத்தன. ஆனால் இந்த கோரிக்கை உடனடியாக ஏற்கப்படவில்லை. ஆனால் கோவிட் தொற்று இந்த எண்ணத்தை அறிவிப்பாக்கியது. பல நிறுவனங்களில் நான்கு நாள் வேலை வாரம் என்ற திட்டம் சோதனை அடிப்படையில் பயன்பாட்டுக்கு வந்தது.

நான்கு நாள் வேலை மாடலில் என்ன சிக்கல்?

**அலெக்ஸ் கிறிஸ்டியன், மேகன் டாடும்**

வேலை நேரத்தின் வழியாக நான்கு நாட்களில் முடிப்பது என அந்த பட்டியல் இருக்கிறது.

லண்டனில் உள்ள பிரபல மக்கள் தொடர்பு நிறுவனத்தில் பணியாற்றும் கோரே காம்கோஸுக்கு, நான்கு நாள் வேலை வாரம் பயன்பாட்டுக்கு வந்த




போது பல நன்மைகள் கிடைக்கும் என நம்பினார். அண்மையில் தந்தையாகி இருந்த காம்கோஸ், தனது குழந்தையுடன் நேரத்தை செலவிட அந்த ஒரு நாள் உதவியாக இருந்தது என்றார்.

ஆனால் நாளடைவில் விடுமுறை நாட்களில் கூட அலுவலகத்தில் முடிக்க வேண்டிய வேலையின் காலக்கெடுவை எண்ணி அவரால் விடுமுறையை கொண்டாட முடியவில்லை. ஐந்து நாட்களில் முடிக்க வேண்டிய பணியை நான்கே நாட்களில் முடிக்க வேண்டிய கட்டாயத்தால் அடுத்த வாரத்திற்கான திட்டமிடலை ஞாயிற்றுக் கிழமையன்று காம்கோஸ் செய்ய வேண்டியிருந்தது.

“கோவிட் தொற்றினால் நமது பணியிடங்களின் தன்மை மாறி இருக்கிறது. ஒருவர் வேலை செய்யும் நேரம், இடம் ஆகியவற்றின் பண்புகள் மாறியிருக்கின்றன. மேலும் நிறுவனங்கள் ஊழியர்களை தக்கவைக்க பல சலுகைகளை வழங்கத் தொடங்கி இருக்கின்றனர். அவற்றில் மிக முக்கியமானது 4 நாள் வேலை வாரம்,” என்று அமெரிக்காவில் செயல்படும் 4 டே வீக் குளோபல் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் திட்ட இயக்குநர் அலெக்ஸ் கூறினார். நான்கு நாள் வேலை வாரத்தில் சில மாடல்கள் உள்ளன. வேலை நாட்களை குறைப்பது, வேலை நேரத்தைக் குறைத்து அதே ஊதியத்தை வழங்குவது, ஐந்து நாட்களில் முடிக்க வேண்டிய வேலையை நீண்ட

“இது வீட்டிற்கும் வேலைக்கும் இடையிலான இடைவெளியை மங்கலாக்கியது” என்று காம்கோஸ் கூறுகிறார். ஆனால் நேர மேலாண்மையை கடைபிடிக்க பழகிவிட்டால், நமக்கு கூடுதலாக கிடைக்கும் அந்த ஒருநாள் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

சோதனை முறையில் இயங்கிய இந்த நான்கு நாள் வேலை வாரம் திட்டத்தை சில நிறுவனங்களின் போது எனது திறமைகளை எப்படி மெருகேற்றுவது என்று விடுமுறை நாட்களில் யோசிக்க முடிகிறது,” என்றார்.ஆண்டி இல்லிங்வொர்துக்கு மீண்டும் ஐந்து நாள் வேலை வாரம் நடைமுறைக்கு வருவதில் விருப்பமில்லை. ஐந்து நாட்களுக்குப் பதிலாக நான்கு நாட்களில் அந்த வேலைகளை செய்து முடிக்க கூடுதல் நேரத்தை அலுவலகத்தில் செலவிடுவதாக ஆண்டியும், ஜெனிபரும் ஒப்புக் கொள்கின்றனர்.




தலைவர்கள் நிரந்தரமாக்கினர். ஊழியர்களும் இதற்கு நன்கு பழகியதால் நான்கு நாள் வேலை வாரத்தின் நன்மை தீமைகளை அவர்கள் அறிந்துள்ளனர்.

இங்கிலாந்தில் இருந்து இயங்கும் ‘டர்ஹாம்‘ என்ற நிறுவனம் அதன் 430 ஊழியர்களுக்கும் 2021 ஆண்டு நவம்பர் மாதம் முதல் நான்கு நாள் வேலை வாரத்தை அறிமுகப்படுத்தியது. “குறுகிய வேலை வாரத்திற்கு மாறுவது நல்ல முயற்சி” என்று அங்கு பணியாற்றும் ஜெனிபர் ஷெப்பர்ட் கூறுகிறார். “இப்போது வெள்ளிக்கிழமைகள் எனது ஒரு வயது மகளுடன் செலவிடும் ஒரு சிறப்பான நாளாகிவிட்டது,” என்று அவர் கூறுகிறார்.


இங்கிலாந்தை சேர்ந்த மற்றொரு நிறுவனமான பஞ்ச் கிரியேட்டிவிட்டி நிறுவனம் 2020ஆண்டு முதல் நான்கு நாள் வேலை வாரத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த நிறுவனத்தின் ஊழியரான ஆண்டி இல்லிங்வொர்த், “வரலாற்றில் வெள்ளிக்கிழமை மதியம் என்பது எப்போதும் செயல்திறன் குறைந்த நாளாக மட்டுமே இருந்துள்ளது. இப்போது வெள்ளிக்கிழமை விடுமுறை என்ற அறிவிப்பால், எனக்கு பிடித்தவற்றை நான் அன்று செய்கிறேன். மேலும் திங்கள் அன்று அலுவலகம் செல்லும்

நான்கு நாள் வேலையின் நன்மை, தீமைகள்

கேலப் நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியில், நான்கு நாள் வேலை வாரத்தின் நன்மை, தீமைகள் தெரிய வந்துள்ளது. நான்கு நாள் வேலை என்பதால், ஊழியர்களின் நலவாழ்வு அதிகரித்துள்ளது. குறிப்பாக குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிட முடிவதாக ஊழியர்கள் கூறுகின்றனர். அதே போல நிறுவனத்தின் மீதான வெறுப்புணர்வும் ஊழியர்கள் மத்தியில் குறைந்து இருக்கிறது.

ஆனால் நிறுவனத்தின் மீது பற்றுதல் இல்லாத ஊழியர்கள், குறைந்த நாட்கள் வேலை செய்வதால் நிறுவனத்தை விட்டு இன்னும் அதிக தூரம் விலகிச் செல்கின்றனர். வேலை நேரத்தின் போது அடிக்கடி அவர்களின் கவனம் சிதறி வேலையின் திறன் குறைகிறது என்றும் இந்த அறிக்கை மூலமாக தெரியவந்துள்ளது.

3 நாட்கள் கிடைக்கும் விடுமுறையின் போது சிலர் தங்களுக்கு பிடித்த செயல்களை செய்கின்றனர். தோட்டம் வளர்ப்பது, மலை ஏறுவது, அலை சறுக்கில் ஈடுபடுவது, தொலைதூர கிராமங்களுக்கு பயணப்படுவது என தங்களுக்கு பிடித்ததை செய்ய உதவுகிறது என்கின்றனர் ஊழியர்கள்.




இன்னும் சிலர் தங்கள் வேலையில் உயர் பதவியை அடைய, வேலையை இன்னும் திறனுடன் செய்ய தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள இந்த விடுமுறையை பயன்படுத்துகின்றனர்.

வியாழக்கிழமைகளில், வேலையை முடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நிறுவனங்களை சில இடங்களில் தொழிலாளர்கள் எதிர்க்கக்கூடும். இது அந்த நிறுவனத்தின் கூட்டு உழைப்புக்கு ஒரு எதிர்மறை தாக்கத்தை உருவாக்கும் என அலெக்ஸ் கூறுகிறார்.

"குறுகிய வாரத்தில் பணியாற்றும் ஊழியர்கள் காலக்கெடுவை மனதில் வைத்து தொடர்ந்து பணியாற்றுவதால், ஊழியர்கள் மத்தியில் அதிக அழுத்தம் ஏற்படுகிறது," என்கிறார் அலெக்ஸ். "இது தீவிரமான பிரச்னை அல்ல, நாளடைவில் இதை சரி செய்ய முடியும். எல்லா வியாழக்கிழமை மதியத்திலும் இந்த பிரச்னை எழவில்லை," என்றார் ஆண்டி இல்லிங்வொர்த்.

"காலண்டரில் ஒரு நாள் வெட்டப்பட்டாலும், பல சந்தர்ப்பங்களில் பணிச்சுமை இன்னும் குறையவில்லை. குறுகிய காலக்கெடுவை கொண்ட வேலையை முடிக்க பணிக்கப்படும் போது சில சிரமங்கள் ஏற்படுகின்றன," என்று காம்கோஸ் தெரிவித்தார்.

12 மணி நேர வேலை —தமிழக அரசு சொல்லும் காரணங்கள்

தமிழ்நாட்டில் தொழில்நிறுவனங்களில் ஊழியர்களுக்கு தினமும் 12 மணி நேர வேலை வழங்கும் வகையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆளும் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணியில் அங்கும் பெரும்பாலான கட்சிகளும் ஆட்சேபம் தெரிவித்த நிலையில், தொழிற்சங்க நிர்வாகிகளுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று மூத்த அமைச்சர்கள் மற்றும் அரசு உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் துறைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர், தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தொழிலாளர் நலத் துறை ஆணையர் ஆகியோர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

இந்த கூட்டத்தில், தொழிலாளர்களின் நலன்களில் எக்காரணத்தைக் கொண்டும் தமிழக அரசு சமரசம் செய்து கொள்ளாது என்று தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் அமைச்சர்கள் உறுதியளித்தனர். இந்த நிலையில், 12 மணி நேர வேலைக்கு வகை செய்யும் சட்டத்திருத்தம் நிறுத்தி வைக்கப்படுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.

முன்னதாக, சட்டப்பேரவையின் சமீபத்திய கூட்டத்தொடரின் கடைசி நாளான ஏப்ரல் 21ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டபோது, பேரவையில் இருந்து

முதல் முறையாக ஆளும் திமுகவின் கூட்டணி கட்சிகளான விடுதலை சிறுத்தைகள், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ், மதிமுக ஆகியவற்றின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். இதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 24—ஆம் தேதி இந்த சட்டத்திருத்தத்தை அரசு கைவிடக் கோரி கம்யூனிஸ்ட் கட்சிகள் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்தன.

அரசின் சட்டத்திருத்த நடவடிக்கை குறித்து கருத்து தெரிவித்த சிஐடியு மாநில தலைவர் அ.சவுந்திரராசன், வேலை நேரத்தை அதிகரித்தால் தொழிலாளர்களின் ஆயுட்காலம் குறையும். எனவே, தமிழ்நாடு முதல்வர் இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்த நிலையில், நடைபெற்ற இன்றைய ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து தமிழக அரசு ஐந்து பக்க செய்திக்குறிப்பை வெளியிட்டிருக்கிறது. அதன் முக்கிய அம்சங்கள்:

1) 2023ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்திருத்த முன்வடிவின் முக்கியமான பிரிவுகளில் குறிப்பாக தொழிலாளர் நலன் சார்ந்து அவர்கள் பணிபுரிவதற்கான உகந்த பணிச்சூழல், தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதி உள்ளிட்ட தொழிலாளர் நலன்கள் குறித்தும் இச்சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குறித்தும் விரிவாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் உள்ள மிகச் சில குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகளுக்கு மட்டுமே நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் அரசின் பரிசீலனைக்குப் பிறகே பணி நேரம் குறித்த விதிவிலக்கு வழங்கப்படும் என்றும் எந்த சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நலனில் சமரசம் செய்து கொள்ளப்பட மாட்டாது என்றும் அமைச்சர்கள் எடுத்துரைத்தனர்.

2) தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, இளைஞர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் பற்றியும் அரசு அக்கறை கொண்டுள்ளதால், தொழிலாளர் நலன்கள் காக்கப்பட வேண்டும் என்பதிலும் அதே அளவுக்கு அக்கறையும் கொண்டுள்ளது என்றும் அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

3) இந்த ஆலோசனை கூட்டத்தில் பேசிய தொழிற்சங்க பிரதிநிதிகள், இச்சட்ட முன்வடிவினை நடைமுறைப்படுத்தினால் தொழிலாளர்களுக்கு ஏற்படக் கூடிய சிக்கல்கள், சிரமங்கள் குறித்து விவரமாக எடுத்துரைத்தனர். இந்த விஷயத்தில் தங்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

4)இதைத்தொடர்ந்து தொழிலாளர் நலன்களுக்காக ஆளும் திமுக ஆட்சியில் இருந்தபோதெல்லாம் எவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டது என்பதை பட்டியலிட்ட அரசு, இந்த அரசு ஒரு சட்ட முன்வடிவை எந்த அளவு உறுதியுடன் கொண்டு வருகிறதோ அது குறித்து மக்களிடம் ஏதேனும் மாற்றுக் கருத்துக்கள் வரப்பெற்றால் அவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து அவர்களின் கருத்துகளுக்கு இணங்க, அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் நடந்து கொள்வதிலும் உறுதியாக இருக்கும்.


5) அந்த வகையில், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் திருச்ச சட்ட முன்வடிவு மீதான நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுகிறது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 மணி நேர வேலை உலகம் முழுவதும் சாத்தியமானது எப்படி?

தினமும் எட்டு மணி நேரம் உழைப்பு என்ற உரிமை தொழிலாளர்களுக்கு எளிதாகக் கிடைத்ததில்லை. பல நாடுகளில் பல ஆண்டுகள் நடந்த போராட்டத்தின் விளைவாகவே இந்த உரிமை கிடைத்தது. அதன் சுருக்கமான வரலாறு. தொழிலாளர்களுக்கு தினமும் எட்டு மணி நேரம் வேலை என்பது ஒரே நேரத்தில், உலகம் முழுவதும் அமல்படுத்தப்படவில்லை. அந்தந்த நாடுகளின் சூழல், அங்கு இருந்த அழுத்தங்கள், தொழிற்சூழல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இவை அமலுக்கு வந்தன.

உலகில் முதன் முதலில் எட்டு மணி நேர வேலையை அறிமுகப்படுத்திய தேசம் ஸ்பெயின். இரண்டாம் ஃபிலிப் ஸ்பெயினின் மன்னராக இருந்த காலத்தில், 1594ல் அரச சாஸனம் ஒன்றின் மூலம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார். தொழிலாளர்கள் காலை நான்கு மணி நேரம் மாலை நான்கு மணி நேரம் பணியாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இது உலகம் தழுவிய போக்காக மாறவில்லை.

உலகின் பல பகுதிகளிலும் 14 மணி நேர வேலை என்பது சர்வசாதாரணமாக இருந்தது. பிரிட்டனில் தொழிற்புரட்சி ஏற்பட்ட பிறகு வேலை நேரம் மீதான அழுத்தம் இன்னும் அதிகரித்தது. அந்தத் தருணத்தில் ஜவுளி தொழிற்சாலையின் முதலாளியும் சோஷலிசவாதியுமான ராபர்ட் அவன், தொழிலாளர் நலன் குறித்து பேச ஆரம்பித்தார். தொழிற்சாலைகளில் சூழலை மேம்படுத்துவது, குழந்தைகள் வளர்ப்பைக் கூட்டாகச் செய்வது போன்றவற்றில் அவர்



1919ல் இதற்கென ஒரு சட்டத்தை இயற்றியது ஸ்பெயின். எந்த வேலை பார்ப்பவராக இருந்தாலும் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர பணி என்பது நாடு முழுவதும் அமலுக்கு வந்தது. அந்தத் தருணத்தில்தான் சர்வதேச தொழிலாளர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் விவாதிக்கப்பட்ட முதல் விஷயமே, எட்டு மணி நேர வேலை குறித்துத்தான். 1919 நவம்பர் 28ஆம் தேதி “ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அல்லது வாரத்திற்கு 48 மணி நேரம்“ என்பதை தீர்மானமாக நிறைவேற்றியது சர்வதேச தொழிலாளர் அமைப்பு. ஒவ்வொரு நாடுகளாக இந்தத் தீர்மானத்திற்கு அங்கீகாரம் அளித்தன.

தொடர்ந்து குரல்கொடுத்துவந்தார்.1810ல் முதல் முறையாக ஒரு நாளில் எட்டு மணி நேர வேலை என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார் ராபர்ட் அவன். அதற்குப் பிறகு, 1817ல் “8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் பொழுதுபோக்கு, 8 மணி நேரம் ஓய்வு” என்ற புகழ்பெற்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார். தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்தும் விவகாரம் தொடர்ந்து பொது விவாதமாக இருந்த நிலையில், 1847ல் பிரிட்டனில் 10 மணி நேர வேலை அமல்படுத்தப்பட்டது. 1848ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு ஃப்ரான்சில் 12 மணி நேர வேலை அமலுக்கு வந்தது. 1850களில் நியூசிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் தொழிலாளர் இயக்கங்கள் எட்டு மணி நேரம் என்பதை வலியுறுத்த ஆரம்பித்தன. சில இடங்களில் அது கிடைக்கவும் செய்தது. 1866ல் ஜெனீவாவில் கூடிய சர்வதேச தொழிலாளர் அமைப்பு, எட்டு மணி நேர வேலையை கோரிக்கையாக வைத்தது.

இதற்கிடையில் 1889 ஜூலை 14ஆம் தேதி பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம் கூடியது. 18 நாடுகளைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் 8 மணி நேர வேலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு, அதாவது 1890ஆம் ஆண்டு மே 1ஆம் தேதி உலகம் முழுவதும் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதை ஒட்டியே மே ஒன்றாம் தேதி மே தினம் உலகமெங்கும் படிப்படியாக பிரபலமாக ஆரம்பித்தது.

ஒரு அரச சாஸனத்தின் மூலம் எட்டு மணி நேர வேலை என்ற கருத்தாக்கம் இருந்தாலும்,

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் 1921லேயே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது என்றாலும், இது உடனடியாக அமலுக்கு வரவில்லை. அந்த நேரத்தில் இந்தியாவில் சாதாரணமாக வேலை நேரம் என்பது 12 முதல் 14 மணி நேரமாக இருந்தது. பிரிட்டிஷ் இந்திய அரசில் தொழிலாளர் துறை 1937ல் உருவாக்கப்பட்டது.

1942ல் பி.ஆர். அம்பேத்கர் இந்திய வைசிராயின் எக்ஸிக்யூட்டிவ் கவுன்சிலில் தொழிலாளர் துறைக்குப் பொறுப்பேற்றார். 1942 நவம்பர் 27ஆம் தேதி இந்திய தொழிலாளர் மாநாட்டின் ஏழாவது அமர்வு தில்லியில் கூடியபோது, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் என்பதை அவர் அங்கே முன்மொழிந்தார். தொழிலாளர் நலனைப் பொருத்தவரை, இது மட்டுமல்லாமல் பெண் தொழிலாளர்களுக்கான மேலும் பல சீர்திருத்தங்களையும் சலுகைகளையும் பி.ஆர். அம்பேத்கரே முன்வைத்தார். அம்பேத்கர் 1942லேயே எட்டு மணி நேர வேலையை வலியுறுத்தினாலும், இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1948ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட The Industries Act மூலமாகவே இது சட்டமாக்கப்பட்டது.

1890ஆம் ஆண்டு முதலே மே தினம் மெல்ல மெல்ல உலகமெங்கும் பரவலானாலும், இந்தியாவில் முதல் முறையாக சென்னை மெரீனா கடற்கரையில்தான் மே தினம் கொண்டாடப்பட்டது. ம. சிங்காரவேலரால் துவக்கப்பட்ட இந்துஸ்தான் உழவர் உழைப்பாளர் கட்சி மே தினத்தை முதன் முதலில் கொண்டியது. இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, 8 மணி நேர வேலை என்பது நனவானது.

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

35

## 35. மாதவியின் மறுபிறப்போ?

**கொற்றவன்**

படம் விரித்து ஆடும் நாகமும் இந்த நங்கையும் ஒன்றெனப் பொருத்திப் பார்க்கும் இந்த மனநிலை ஏன் தனக்கு தோன்றுகிறதென ஒரு கணம் திடுக்கிட்டுப் போன இளங்கோ, இது தன் உள்ளுணர்வின் எச்சரிக்கையா?

இவளது மயக்கும் பேரழகின் முன் தன் தவக்கோலம் சிதறிவிடுமோ என்ற பயத்தின் விளைவா?

தான் இப்போது வடித்துக் கொண்டிருக்கும் காப்பியமான சிலப்பதிகாரத்தின் மாதவியே இவள் உருவில் வந்து நின்று தன் மனநிலையை ஆராய்கிறாளா?

எண்ணம் பலவிதம் ஓடினாலும், இளங்கோவின் உள்ளூற நினைவில் ஒன்று, வேறுவிதமாக அவளைப் பிம்பம் பிடித்தது. நடன மாது என்றாலே அவள் பிறரை மயக்கி அதன் மூலம் பிழைப்பு நடத்தத்தான் வேண்டுமா? அடியார்களின் அடியாராக இருந்து ஆண்டவன் நினைவிலேயே காலம் கழித்த முந்தைய நாட்டிய மகளிரும் உண்டே! இவள் ஏன் அவ்விதம் இருக்கலாகாது என வினா எழுந்து அலைக்கழித்தது.

இவ்வாறெல்லாம் சிந்தித்ததன் விளைவும், அதன் அதிர்வும் இளங்கோவின் அகத்தில் ஓடினாலும், அதன் விளைவு அவர் முகத்தில் ஓடவில்லை! அமைதி தவழும் முகமாகவே நின்றிருந்தார்.

"புலவரே! என்ன அமைதியாகி விட்டீர்கள்? நான் ஏதேனும் தவறாகக் கூறிவிட்டேனா?" அவளது செங்கனி அதரங்கள் அசைந்து எழுப்பிய வார்த்தைகள் அவரது செவியில் சென்று சேரவில்லை.


இளங்கோவின் மனம் ஏனோ அவளிடம் பரிவு காட்டவே சொன்னதால், அந்த எண்ணத்தின் விளைவால் அவரது இதழ்களில் இளநகை படர்ந்தது.

"இளங்கோவடிகளே! திடுமென அமைதியில் ஆழ்ந்து விட்டீர்கள்! அதன் பின் புன்னகை புரிகிறீர்கள்! இதென்ன ஏதாவது யோக நிலையா?" எனக் கேட்டு முறுவலித்தாள்.

காஞ்சனமாலா தொடுத்த இவ்வினா இளங்கோவுக்குத் தெளிவாகவே கேட்டது. இப்போது அவருக்குள் ஒரு தெளிவும் தோன்றிவிட்டதால், "ஆம்!" என்ற ஒற்றைச் சொல்லை மட்டும் பதிலாகத் தந்தார்.

"தாங்கள் யோகநிலையில் தேர்ந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! எனக்கும் யோகம் கற்க மிகுந்த ஆவல்! அதைத் தாங்கள் எனக்குப் பயிற்றுவிக்க முடியுமா?" என வினா தொடுத்த காஞ்சனமாலா, அடுத்த கணமே சுதாரித்துக் கொண்டு, "இதைக் கேட்பதற்கு இதுதான் நேரமா? இதைக் கேட்கவா நீ இங்கு வந்தது எனவும் கேட்கலாம்!

ஆனால் தங்களிடம் இதையெல்லாமும் கேட்க வேண்டும் என்ற அவா எனக்குள் இருப்பதால் கேட்டு விட்டேன்! தவறாக நினைக்க வேண்டாம்! யோக நிலையை அவ்வளவு எளிதில் கூறிவிட முடியாது என்பதையும் நான் அறிவேன். இருப்பினும் தங்களின் அமைதி என்னைச் சங்கடத்தில் ஆழ்த்துகிறது.”



காஞ்சனமாலா விறுவிறுப்புடன் கேள்வி கேட்ட விதமும், அதேநேரம் தன்னிலை விளக்கம் கொடுத்த விதமும் அவளது ஆர்வத்தை வெளிப்படுத்தியது.

“யோக நிலையானது நமது மனத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவரச் செய்யும் ஒரு பயிற்சி! அதை எல்லோரும் பயில முடியும்! அனால் அதில் கைதேர்ந்தவரகும் பெரு எல்லோருக்கும் கிட்டுவதில்லை! அதற்கு தனி பக்குவம் வேண்டும்! அந்த நிலையை அடைந்துவிட்டால் யோகத்தால் நாம் எந்த நிலைக்கும் உயரமுடியும்!” என்றார் இளங்கோ.

“நான் ஒரு கேள்வி கேட்டால் தவறாக நினைக்ககூடாது!” என்றவளை, அமைதியாகவே பார்த்தார் இளங்கோ. “யோகப் பயிற்சி பெற்றவர்களால் மோக நிலையில் விழாதிருக்க முடியுமா?” இப்படியொரு கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை! ஆனாலும், உடனடியாக பதிலளித்தார்.

“நிச்சயம் முடியும்!”

“அப்படியானால், முனிவர்களும் தவவலிமை உள்ளவர்களும் நிலை தடுமாறாமல்தானே இருக்க வேண்டும்?”

“ஆம்!”

“விசுவாமித்திரர் மேனகையால் தவம் கலைந்து கூடிக் களித்தது போலவே முனிவர்கள் பலரும் பெண்டு பிள்ளைகள் என இல்லறவாழ்வையும் தொடர்ந்தது ஏனோ?”

“எப்போதுமே யோக நிலைக்கு பெண்கள் இடையூறுதான்! முனிவர்கள் தேடிச் செல்லாவிடினும், அவர்களாகத் தேடிவந்து தொல்லைதரத்தான் செய்வார்கள்!”

“இப்போது என்னையும் அவ்வாறாக நினைத்து பேசுகிறீர்கள் போல் தெரிகிறது!” என்ற காஞ்சனமாலா ‘களுக்’கெனச் சிரித்தாள்.

“தாங்கள் ஒன்றும் மேனகையும் அல்ல, நானும் விசுவாமித்திரர் அல்ல! உடனடியாக இங்கிருந்து கிளம்பினால் நல்லது!” என்ற இளங்கோ முன்பு தான் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்த இடம் நோக்கி நடந்தார்.

“இதுதான் தமிழர் பண்பா?” என்றபடியே பின்தொடர்ந்தவளைக் கண்டு நின்று திரும்பிய இளங்கோவின் விழிகளில் வினாக்குறி!

“அடைக்கலமாக வந்து நிற்பவளை விரட்டுவதுதான் பண்பா என்றேன்!”

“என்ன?”

“ஆம்! நான் என் நாட்டியத் திறமையைக் காட்ட வந்திருப்பதாக எண்ண வேண்டாம்! காசி நகரில் இருந்து வஞ்சி நகருக்கு நான் வந்திருப்பதன்


நோக்கமே, இங்கேயே தங்கி நான் கலைகள் பலவும் பயில வேண்டும்! பயின்றதை வாழ்நாள் முழுதும் பிறர்க்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதுதான்!"

அதைக் கேட்டு முறுவலித்த இளங்கோவின் முகத்தில் ஒருவித அலட்சியம் ஓடியது. அதைக் கண்ட காஞ்சனமாலா வினவினாள்.

"நான் கூறுவதை தாங்கள் நம்பவில்லை போலும்!"

பிரயத்தனப்படாமல் விரைவில் காசிக்குப் போய்ச் சேரும் வழியை பாருங்கள்!" எவ்விதச் சலனமும் கொள்ளாமல் அமைதியாக அவளை ஊடுருவிப் பார்த்தபடி இளங்கோ கூறியதும், அவள் சற்றே நிலைதடுமாறிப் போனாள்.

"என்ன?... ஏன்... இப்படி... எனக்கொன்றும் விளங்கவில்லையே!... நான் ஒன்று கேட்க... தாங்கள் ஏதேதோ சம்பந்தமே இல்லாமல் பேசுகிறீர்களே?..."



"அப்படியா? நான் சம்பந்தமே இல்லாமலா பேசுகிறேன்?" என்றவர் அவள் மீதான பார்வையை விலக்காமலே கேட்டார்.

அந்தப் பார்வையின் தாக்கம் தாளாமல் மேலும் தடுமாறியவள், தரை பார்த்தபடியே "ஆ...ம்!.." என்ற அந்த ஒற்றை வார்த்தையையே மிகவும் தடுமாறித்தான் அவளால் சொல்ல முடிந்தது.

"சரி, போகட்டும்! தாங்கள் வந்தது என்னை நாட்டிய விழாவுக்கு அழைக்கத்தானே!.."

"ஆம்!.. ஆனால்ஞ்"

"ஆனால் என்ன?"

"அது மட்டுமே நான் வந்ததற்கான நோக்கம் அல்ல..."


"வந்த நோக்கம் என்ன என்பதை நானே உங்களுக்கு விரைவில் தெரிவிக்கிறேன்! இப்போது தாங்கள் கிளம்பலாம்!"

புருவங்களை நெருக்கியபடி சற்றே தன் சங்கடத்தைக் காட்டிய இளங்கோவைக் கண்டு இளநகை புரிந்தாள் காஞ்சனமாலா. அவளது குறுமுறுவலில் தெரிந்த விகற்பத்தைக் கண்டு மீண்டும் புருவங்களை நெருக்கிய இளங்கோ, "இதென்ன ஏளனச் சிரிப்பா?" என்றார்.

"நான் நம்புவதும் நம்பாததும் இருக்கட்டும்! இடம் பொருள் தெரியாமல் இங்கே வந்து அத்துமீறி நேரத்தைக் கடத்துவதன் விளைவைத் தாங்கள் அறியாமல் இருக்கும் அறியாமையை எண்ணி வருந்துகிறேன்! என்ன காரணத்துக்காகவோ, யாருக்காகவோ ஒரு பெரிய காரியத்துக்கு தயாராகி இருக்கிறீர்கள் போலத் தெரிகிறது! நடக்காத அந்தக் காரியத்துக்காக வீண்

"தங்களை ஏளனம் செய்வதா? செய்யத்தான் என்னால் முடியுமா? என்னை நினைத்தே எனக்குள் சிரிப்பு பொங்குகிறது!" என்றவள், மீண்டும் அதே குறுநகை புரிந்தாள்.

எங்கு வந்து என்ன உளறிக் கொண்டிருக்கிறாள்? இவள் என்ன செய்தாலும், அதில் ஒரு நளினமும்,



குறும்பும், மனத்தைக் கொள்ளை கொள்ளும் அழகும் மிளிர்கிறதே!.. அரச போகத்தைத் துறந்து தனித்து நிற்கும் தன்னிடம் வந்து ஏன் இந்த நாட்டிய மயில் தோகைவிரித்தடுகிறது என்ற எண்ணம் ஓட, அவள் மீதே பார்வையை ஓட்டினார் இளங்கோ.

காஞ்சனமாலா தொடர்ந்தாள்.

“என்னை விரட்டி விரட்டி காதலிக்கவும், மணம் முடிக்கவும் பல அரசகுமாரர்கள் தேடி வந்தனர்... ஆனால் என் மனம் ஒருவரையும் நாடவில்லை! அவர்களை ஏறெடுத்தும் பார்த்ததில்லை! அவர்களின் சாபம்தான் இங்கே என்னை விரட்டுகிறதென நினைக்கிறேன். அதனால்தான் என்னை தாங்கள் விரட்டியக்கிறீர்கள் போலிருக்கிறது.” சற்றே விரக்தியுடன் கூறியவளுக்கு மறுமொழி ஏதுங்கூறாமல் திரும்பியவர், வாயிலை நோக்கினார்.

“என்னை விரட்டியடிப்பதிலேயே குறியாக இருக்கிறீர்கள் எனத் தெரிகிறது. இவ்வளவுதூரம் நான் வந்ததே தங்களைக் காணத்தான்! ஆனால் என் வருகையைத் தாங்கள் விரும்பவில்லை எனப் புரிகிறது. ஆனால் மீண்டும் நான் இங்கே நிச்சயம் வருவேன்!”

“அதற்கு அவசியம் இல்லை!”

“அவசரமும் அவசியமும் அவரவர் விருப்பத்தையும் தேவையையும் பொருத்தது! அதைப் பிறர் கணிப்பது சரியாக இருக்காது! சரி, எனக்கான பதிலை இன்னமும் தாங்கள் தரக் காணோமே!”

“என்ன பதில்?”

“என் நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்து தாங்கள் வாழ்த்த வேண்டும்! வருவீர்கள் அல்லவா?”

“நாட்டியத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?”

“தற்போது இயற்றிக் கொண்டிருக்கிறீர்களே!... அந்தச் சிலம்பு காப்பியதுக்கும் தங்களுக்கும் என்ன சம்பந்தமோ அந்த சம்பந்தம்தான்!” என்றவள் செம்பவள இதழ் மலர்ந்து முத்துப் பல் தெரிய முகமலர்ந்தாள்.

இந்தச் சிரிப்பின் அழகுக்கு அரசகுமாரர்கள் என்ன அந்த தேவகுமரரகள் கூட ஓடித்தான் வருவார்கள் போலிருக்கிறது எனப் பறைசாற்றியது அவளது கவர்ந்திழுக்கும் காந்தச் சிரிப்பு!

இவள் தன்னைப் பற்றி அதிகம்தான் தெரிந்து வைத்திருக்கிறாள் என வியந்தார் இளங்கோ.

“நாட்டியக் காப்பியம் வடிக்கும் தாங்கள் நாட்டியத் திறமையையும், பெருமையையும், அதை ஆடும் அழகையும் காண வேண்டாமா? மாதவி எப்படி ஆடியிருப்பாள் எனத் தாங்கள் நேரில் காண வேண்டாமா?” என்றவளின் வார்த்தைகளில் ஒருவித மயக்கம் தொனித்தது.


அதைக் கேட்டுத் துணுக்குற்றார் இளங்கோ, “அம்மணி! தங்களுக்கு மாதவியைப் பற்றி என்ன தெரியும்? அவள் பொன்னுக்கும் பொருளுக்கும் மட்டுமே ஆடும் நாட்டியத் தாரகையல்ல! அவள் ஒரு தேவமகள்!”

“நான் இல்லை என்று மறுக்கவில்லையே! மாதவியின் ஆட்டத்தில் பத்தில் ஒரு பங்காவது நான் ஆட மாட்டேனா? அதை தாங்கள் நேரில் கண்டால் ஒத்துக் கொள்வீர்களல்லவா? நாளை மறுநாள் அரசவையில் ஆடவிருக்கிறேன். தாங்கள் நிச்சயம் வந்து... இருந்து... என் ஆட்டத்தை ரசிக்க வேண்டும்! அதன்பின்...”

“அதன்பின்...”

“அதன்பின்... தாங்களே என்னை இங்கே அழைப்பீர்கள்!..”

“என்ன?” இளங்கோவின் வார்த்தை அனலாய் தெறித்தது.



“நான் ஒன்றும் தவறாகக் கூறவில்லை! மாதவியின் நாட்டியத்தை முழுதுமாய் தெரிந்தால்தானே தாங்கள் காப்பியம் வடிக்க ஏதுவாய் இருக்கும்! எனவே நாட்டியம் தொடர்பான ஐயம் எழுந்தால் நான் அருகிருந்து விளக்கம் தருவேன் அல்லவா? அதைச் சொல்ல வந்தேன்.”

“ஏன்? இந்த சேர நாட்டில் நாட்டியத் தாரகைகளே இல்லையென்ற எண்ணமா?”

“இருக்கலாம்! ஆனால் அவர்கள் எல்லோரும் மாதவியைப் போல் சிறந்தவர்களாக இருக்க முடியாதே!...”

அதைக் கேட்ட இளங்கோ புன்னகையுடன், “மாதவியே மறுபிறவி எடுத்து வந்தாற்போலல்லவா பேசுகிறீர்கள்?” எனக் கூறிச் சிரித்தார்.

“அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!... அந்தப் பிறவியில் கோவலன் முன் ஆடினேன். இந்தப் பிறவியில் தங்கள் முன் நாட்டியம் ஆட வந்திருக்கிறேன்!” என்றவள் சிரிப்பை அடக்கமாட்டாமல், குயிலின் கீதமும் யாழிசையும் சேர்ந்தாற்போல சிரித்தபடியே அவரைப் பார்வையால் அளந்தாள்.

அவளது விழிகள் நாட்டிய பாவனை காட்ட, அந்த விழிகளைக் கூர்ந்து நோக்கிய இளங்கோவுக்கோ காலச்சக்கரம் சுழல்வது போலத் தோன்றியது.

இவள் இங்கு வந்தது முதலே தனது இதயத்தில் இன்ப யாழ் மீட்டுவதென்ற முடிவுடன்தான் இருக்கிறாள் போலிருக்கிறதே!..

இதென்ன விட்ட குறையோ தொட்டகுறையோ? எனப் பலவாறு எண்ணினார்.

“நாளை மறுநாள் சந்திப்போம்! என் ஆடலைக் கண்டு மகிழுங்கள்! தங்களிடம் நான் கற்கவேண்டிய யோகக்கலைக்கு நாள் குறித்துச் சொல்லுங்கள்! இப்போது நான் விடைபெறுகிறேன்!” என இருகரம் குவித்து வணங்கிய அந்த நேர்த்திகூட மிகவும் ஒயிலாகவே இருந்தது. அத்துடன் அவருக்கு ஒரு பேரரசி கட்டளையிடுவது போலவும் இருந்தது.

பின்னழகைக் காட்டிய வண்ணம் அன்னநடை நடந்து வாயிலின் நிலைப்படியில் வந்து நின்றவள், திரும்பி இளங்கோவைப் பார்த்தாள். அவளது பார்வையில் ஏதோ மற்றம் தெரிவதைக் கண்டார்.

மீண்டும் இருகரம் குவித்து வணங்கியவள் நிலையைக் கடந்து மறைந்தாள்.

சில கணங்களுக்கு முன்பு பீடத்தில் அமர்ந்தபடி, சிந்தனையை ஒருமுகப்படுத்தி மாதவியின் நடனக் காட்சியை வடிக்க நினைத்திருந்த தனக்கு முன்பாக, திடீரெனத் தோன்றிய இவள், மாதவி எவ்விதம் இருந்திருப்பாள் என்பதை அல்லவா தன் முன் காட்டிவிட்டுப் போயிருக்கிறாள் என வியந்தவாறே சிலையாக நின்றார் இளங்கோ.

சற்றுமுன்புவரை இந்தக் குணவாயில் கோட்டத்தில் நடந்ததெல்லாம் கனவா நினைவா?

இளந்துறவி இளங்கோ சிலையாகவே நின்றிருந்தார்!...

(கனவு தொடரும்...)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# வெயில் மறைவுப் பிரதேசம்

காதல் சுகம்தான்...
வாழ்க்கையை வென்றவர்க்கு
காதல் சுகம்தான்.

ஆனால் இங்கே வயதையும்
வாழ்க்கையையும்
காதலுக்கென்று விற்று விட்ட
ஒரு கூட்டம்
காதல் சுகமென்றும், மற்றொரு கூட்டம்
காதல் சுடுமென்றும் சொல்லித் திரிகிறது

குடும்பத்தையும் நாட்டையும் தாங்கி
நிற்க வேண்டிய வலிமைத் தூண்கள்
முதுகெலும்புகளை களவு கொடுத்துவிட்டு
முகத்தில் முள் முளைக்க
விட்டிருக்கிறார்கள்
காதல் தோல்வியாம்...

பூகம்பம் நிகழ்த்தப் பிறந்த இளைஞர்கள்
பூக்கள் மோதி உடைந்து போகிறார்கள்
கல்யாணத்திற்கு எதிராகவே பலர்
காதலிக்க ஆரம்பித்துவிட்டதால்
அந்த உள்ளங்களின் எதார்த்தம்
வெறும் இனக்கவர்ச்சியின்
இன்னொரு முகமாகிப் போனது

வாழ்க்கையின் அந்த வெயில் மறைவுப்
பிரதேசம் நமக்கு வேண்டாம் நண்பா!
உன் கனவுகளை கையெறி குண்டுகளால்
காயப்படுத்திய என்னைக் கண்டிக்கும் முன்
காதலித்துப் பார் என்று கத்திக்
கொண்டிருக்கும்
கவிஞர்களை நகர்ந்து நிற்கச் சொல்.

இப்படி வா...
நாம் முதலில் வாழ்க்கையை
வாழ்ந்துப் பார்ப்போம்!

**எட்வின் பிரிட்டோ**

# யார் இவர்கள்?

எம்முட்சிலரை எப்படித்தான்
சொல்வேன்?
மாற்றானோ மாசறக்கலந்த
மனிதமுகங்களா இவர்கள்?
இல்லையில்லை இல்லவேயில்லை!
சோற்றுக்காகவும் சுகத்திற்காகவும்
தேசவிடுதலையை சேற்றில்
புதைக்கும் புல்லுருவிகள்!

பெற்றமண்ணை விற்று
பெயர்பெறத்துடிக்கும் பேய்கள்
மாற்றான் மண்ணிலே
மானமிழந்தும் மதிப்புடன்
வாழ்வதாய் மகுடியூதி
பட்டமும் பதவியும்
பெற்றதாய் பறைசாற்றி
கற்றதால் உயர்ந்ததாய!
கதைகள்பேசி காலங்கழிக்கும்
கயவர்கள்?!

கண்டதும் காதல் கொண்டதாய் கூறி
கலவிக்கூடும் காமப்பேய்கள்
ஊரிலுள்ள உடன்பிறப்பை
உதாசீனஞ்செய்து உணர்விழந்து
முன்பின் தெரியா
மனிதமுகங்கங்களை
முதுகிலே தாங்கும்
தன்னிலை மறந்த தறுதலைகள்?!
தமிழர்களா இவர்கள்?
யார் இவர்கள்?

**கலாநிதி தனபாலன்**

# மே தின வாழ்த்து!

நாளெல்லாம் வெய்யிலில்
ஐஸ்வண்டி தள்ளுபவனுக்கோ
தெருவோரம் அமர்ந்து உச்சி பிளந்து
ஒரு கத்தை கீரை வாங்கக் கூவி விற்கும்
வயதான தள்ளாத கிழவிக்கோ
பத்துப்பாத்திரம் தேய்த்து தேய்த்து
கையில் ரேகை மறைந்து போன
என் குடிசை வீட்டு சகோதரிக்கோ

ஊரெல்லாம் சுற்றி கால் வீங்கிய
காய்கறி காரனுக்கோ..
கையெல்லாம் காரத்தால் வெந்துபோன
சுண்ணாம்பு அடிப்பவனுக்கோ..
மீன் விற்பவனுக்கோ
மூலைத்தெரு பெட்டிக் கடை
அண்ணாச்சிக்கோ
காலையில் பேப்பர் போடும்
சிறுவனிலிருந்து
மாலையில் நடந்து
பால் கொண்டு வரும் தாத்தா முதல்
மேதினக் கொண்டாட்டம்
இருக்குமெனில்...

தெருவெல்லாம் பெருக்கி
நச்சு கால்வாயில் தூர் வாரும்
தொழிலாளிக்கு ஓர்தினம்
வாழ்வு மலருமெனில்
நம் வாழ்வின் முன்னேற்றத்தால்
அவர்களின் நிலையை மாற்ற
முடியுமெனில்
ஏழைகளின் சுமையை குறைக்க
நீயும் நானும் காரணமாவோமெனில்
அன்று
உனக்கு நீயும் எனக்கு நானும்
மேதின வாழ்த்து சொல்வோம்
அதுவரை இதை ஒரு
அதிகாரம் எதிர்க்கக் குறித்த
போராட்ட நாளென்றே கொள்வோம்!

**வித்யாசாகர்**

# மென்சிவப்பு உலகம்

குதிகாலை ஊன்றி
மென்சிவப்பு முழுநீளச் சுருக்குப் பாவாடை
சுழலச் சுழன்றுகொண்டேயிருக்கிறாள் சிறுமி
பாவாடை ஒரு வட்டக் கூம்பாகச் சுழல்கிறது
அவள் கண்களின் முன்
வீடு சுழல்கிறது
மரங்கள் சுழல்கிறது
வானம் சுழல்கிறது
மென்சிவப்பு நிறத்தில்
அவள் உலகம் சுற்றிக் கொண்டிருப்பதை
அணுவணுவாய் ரசித்துக் கண்மூடி
விகசித்துச் சிரிக்கிறாள்

ஒரு கணம் நின்று
அவள் கண் மூடிக் குனியும் அத்தருணம்
அவளுள்
அவள் வீடும், மரங்களும்
நீலவானமும்
இன்னமும் மென்சிவப்பில்
சுழன்று கொண்டேயிருக்கின்றன

**தாட்சாயிணி**

## குட்மார்னிங் சொல்லியிருக்கும் ‘குட் நைட்’ டீசர்!

அறிமுக இயக்குநர் விநாயக் சந்திரசேகரன் இயக்கும் ‘குட் நைட்’ படத்தில் ‘ஜெய் பீம்‘ பட பிரபலம் மணிகண்டன் கதாநாயகனாகவும், ‘முதல் நீ முடியும் நீ’ பிரபலம் மேத்தி ரகுநாத் கதாநாயகியாகவும் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில், தற்போது டீசரை வெளியிட்டுள்ளனர். இந்த டீசரில், குறட்டை மற்றவரது வாழ்வில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது தெரிவித்துள்ளனர்.



குட் நைட் குறட்டைக்கா?

## ‘காசேதான் கடவுளடா’ ரீமேக்!



பழசேதான் புதுசா?

மிர்ச்சி சிவா நடிப்பில் உருவாகியுள்ள ‘காசேதான் கடவுளடா’ படத்தின் வெளியீட்டுத் தேதி பலமுறை அறிவிக்கப்பட்டும், படம் இன்னும் வெளியாகாமல் உள்ள நிலையில், தற்போது வரும் மே 12 ஆம் தேதி இப்படம் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்.கண்ணன் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் மிர்ச்சி சிவா, பிரியா ஆனந்த், யோகி பாபு, சிவாங்கி, ஊர்வசி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். எம்.கே. ஆர்.பி புரொடக்ஷன்ஸுடன் இணைந்து தனது சொந்த பேனரான மசாலா பிக்ஸ் மூலம் கண்ணன் இப்படத்தையும் தயாரிக்கிறார்.

## வெளியானது ‘சூர்யா 42’ படத்தலைப்பு!

‘அண்ணாத்த’ படத்திற்கு பிறகு சிறுத்தை சிவா இயக்கும் படத்தில் சூர்யா நடிக்கிறார். ‘கங்குவா’ எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை ஞானவேல் ராஜா தயாரிக்க, தேவி ஸ்ரீபிரசாத் இசையமைக்கிறார். இதில் சூர்யாவுக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை திஷா பட்டானி நடிக்கிறார். படத்தின் படப்பிடிப்பு பிஜு தீவில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நிகழ்காலம் கலந்து வரலாற்று பின்னணியில் 3டி தொழில் நுட்பத்தில் வெளியாகவுள்ள இப்படத்தை 10 மொழிகளில் இரண்டு பாகமாக வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. இதுதான் சூர்யாவின் அதிகபட்ச பட்ஜெட் படமென்பதும் குறிப்பிடத்தக்கது.



## ‘கங்குவா’ பத்து மொழிகளில் பங்குவா?

## விஜய் சேதுபதியின் அரைசதம்!



## விரைவில் சதமும் விரைவில் அடிக்கட்டும்!

நடிகர் விஜய் சேதுபதியின் 50—வது படம், ‘குரங்கு பொம்மை’ இயக்குநர் நிதிலன் இயக்கத்தில் உருவாகி வருகிறது. பழிவாங்கும் கதையாக உருவாகி வரும் இப்படத்தில் இரண்டு புதிய தோற்றத்தில் விஜய் சேதுபதி நடித்து வருகிறார். 85 நாள்கள் படப்பிடிப்பில், 50நாள்கள் முடிந்து விட்டது. இவ்வாண்டு இறுதியில் படம் வெளியாகவுள்ளது.

ஆன்மிகம்

# தல வலம்

## திருநெல்வாயில்

புலனகிரி செயபாலன்

*திருநெல்வாயில் 'மறையினார் மடுவாளினார் மல்கு*

*பிறையினார் பிறையோடி லங்கிய*

*கிறையினார் நெல்வாயிலார் தொழும் அரை*


*இறைவ னாவரம் துச்சியாரே!' —திருஞானசம்பந்தர்*

சிவபுரி உச்சிநாதர் கோயில் தேவாரப் பாடல் பெற்ற 276 சிவத் தலங்களில் சோழநாடு காவிரி வடக்கரையில் அமைந்துள்ள மூன்றாவது தலம். பாடல் பெற்ற நடுநாட்டு சிவத் தலங்களில் முதலாவது திருநெல்வாயில்

இத்தலத்தின் வரலாற்றுப் பெயர் திருநெல்வாயில். சிதம்பரம் நகருக்கு உட்பட்ட ஒரு பகுதியில் நெல்வயல் அதிகம். திரு என்பது மரியாதையை குறிக்கும் ஒரு சொல்! நெல் வாயில் என்றால் கிராமத்தில் நுழைவு வாயிலில் பரந்த நெல் வயல். அதனால் திருநெல்வாயில் என்று அழைக்கப்பட்டது, தற்போது சிவபுரி என்று பெயர்.

இக்கோயில் ஆயிரம் முதல் 2000 வருடத்திற்குள் இடைப்பட்டது. கோயிலை அமைத்தவர் சோழர்கள். கோயில் ஒரு ஏக்கர் பரப்பளவில் உள்ளது. கோயிலைச் சுற்றிலும் செங்குத்தான செவ்வகச் சுவர்கள். கிழக்குப் பகுதியில் ஐந்து நிலை ராஜகோபுரம் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

மகா மண்டபம், அர்த்தமண்டபத்து வழியே கருவறைக்குச் செல்லலாம். கருவறையில் லிங்க



வடிவில் சுயமாக வெளிப்படுகிற, கிழக்கு முகமாக உள்ளார். மகா அர்த்தமண்டப தூண்களில் இருந்து இதிகாசங்களைக் குறிக்கும் வகையில் சிற்பங்கள் உள்ளன.

உச்சநாதர், மத்யானீஸ்வரர், உச்சநாதர் சாமி.அம்பாள், கனகாம்பிகை.

தீர்த்தம் கிருபா சமுத்திரம் ஆகும்.

தலவிருட்சம் நெல்லி மரமாகும்.

மூலவர் பின்னால் பார்வதி தேவியுடன் திருமண கோலத்தில் அருள் பாலிக்கும் சிற்பம் உள்ளது.

கருவறைக்கு வெளியே துவாரக பாலகர்கள், எதிரே நந்தி உள்ளனர்.

அம்பாள், கனகாம்பிகை என்ற பெயரில் கருவறைக்கு வடக்கே தனி சன்னதியில் தெற்கு நோக்கி அருள் பாலிக்கிறாள்

கோஷ்டத்தில் ரத்தின விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, எட்டுகை துர்க்கை, காசிலிங்கம், கருவறை வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகர், வடகிழக்கில் சுப்பிரமணியர் சுவாமி சன்னதி, கோமுகம் அருகே சண்டிகேஸ்வரரும், அம்பாள் கோமுகம் அருகே காசி விஸ்வநாதரும் உள்ளனர்.

பிரகாரத்தின் வடகிழக்கில் மதில் சுவரை ஒட்டி பைரவர், பஞ்சலிங்கம், சனீஸ்வரர், சந்திரனும் உள்ளனர்.தென்கிழக்கு மூலையில் சூரியன், ஒருமுகம், நான்கு கரங்களுடன் முருகன், மற்றும் மடப்பள்ளியும் உள்ளன.

புராணம்

சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தருக்கு 12 வயதில் திருமணம் ஆச்சாள்புரத்தில் நடக்க ஏற்பாடானது. மணமகள், மணமகன், உறவினர் மற்றும் சிவனடியார்கள் 63 பேருடன் சிதம்பரத்திலிருந்து ஆச்சாள்புரம் செல்லும் வழியில் இத்தலத்திற்கு வந்தனர்.

மதிய வேளை என்பதால் அனைவரும் பசியுடன் இருந்தனர். இதை உணர்ந்த இத்தலத்து ஈசன் அர்ச்சகர் உருவில் வந்து அனைவருக்கும் உணவு தந்து உபசரித்ததுடன் வந்த அனைவருக்கும் காட்சி தந்து அருளினார் என்கிறது தலபுராணம். உச்சி (நண்பகல்) நாதர் (ஈஸ்வர்) வடமொழியில் மரியாதைக்குரிய ஸ்ரீ சேர்த்து உச்சிநாதர் எனப் போற்றப்படுகிறார். சமஸ்கிருதத்தில் ஸ்ரீ மத்தியானேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.




அகஸ்தியர்

சிவபெருமான் அகஸ்தியர் வேண்ட இத்தலத்தில் தன் திருமணக் கோலத்தைக் காட்சி தந்து



ஊட்டுதல் நிகழ்ச்சி முக்கியமானது. இக்கோவிலில் முதன்முதல் அன்னம் ஊட்டும் நிகழ்ச்சி நடத்தினால் அக்குழந்தை தன் வாழ்க்கையில் அன்னத்திற்கு எப்பொழுதும் கஷ்டம் வராது என்பது ஐதீகம்! தமிழ்நாட்டில் வேறு எந்த சிவன் கோவில்களிலும் அன்னம் ஊட்டும் நிகழ்ச்சி நடப்பதில்லை!

திருவிழாக்கள்

வைகாசி (மார்ச், ஏப்ரல்) விசாகம், நவராத்திரி புரட்டாசி (செப்டம்பர், அக்டோபர்) கார்த்திகை (நவம்பர், டிசம்பர்) திருவிழாக்கள் நடைபெறும்.

பூஜைகள்

தினமும் ஐந்து கால பூஜைகளுடன்



அருளினார். கன்வ மகரிஷி இங்கு வந்து ஈசனை வழிபட்டார். பதினோராம் நூற்றாண்டின் பெரியபுராணத்தில் தில்லை நடராஜர், திருவேற்களம் வழியாக இத்தளத்துக்கு வந்ததாகக் கூறுகிறது

அருணகிரிநாதர்

திருப்புகழில் அருணகிரிநாதர் இத்தலத்தில் உள்ள முருகப்பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் இத்தலம் பற்றி 11 பதிகங்கள் பாடியுள்ளார்.

இத்தலத்தில் குழந்தைகளுக்கு அன்னம் சோமாவாரம், பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி நாட்களில் ஆகம விசாக முறைப்படி பூஜைகள் நடக்கிறது.

தோஷப் பரிகாரம்

சனி, செவ்வாய், தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து பூஜை செய்தால் தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்!

நேர்த்திக்கடன்

ஈசனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்து



SAKTHI CASH & CARRY
245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
इडली/ दोसा आटा
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648



புது வஸ்திரம் சாற்றி நேர்த்திக்கடன் செய்கின்றனர்.

கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் 24.05.1928 முதல் 16.06.1957, 01.09.1982 மற்றும் 11.09.2008 நடந்துள்ளது. நகரத்தார் நிர்வாகத்தில் நடக்கும் இக்கோயில் கும்பாபிஷேகம் விரைவில் நடத்த ஏற்பாடு செய்வார்கள் என்று சிவத் தொண்டர்களும் பொதுமக்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பது அவர்களது பேச்சில் தெரிந்தது. சம்பந்தப்பட்ட நகரத்தார் அதற்கான முயற்சியை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்!

கோயில் திறப்பு

கோயில் திறக்கும் நேரம் காலை 6:00 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

சிதம்பரத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பஸ் ஆட்டோ வசதிகள் உண்டு!

பால்வண்ண நாதர்

சிவபுரி உச்சிநாதர் கோயிலுக்கு அருகில் சுமார் ஒன்றரை கி.மீ. தூரத்தில் பால்வண்ண நாதர் கோவில் உள்ளது. பால்வண்ண நாதர் கோயில் என்பதை விட பைரவர் கோவில் என்றால் அனைவர்க்கும் தெரியும்.

கொள்ளிடம் வடக்கரையில் காரை மேடு கழிப்பாலை என்ற இடத்தில் இத்தலம் இருந்தது. வெள்ளத்தால் அக்கோயில் அழிந்து விட, மக்கள் சிவபுரிக்கு அருகே இக்கோயிலைக் கட்டியதாகவும் கூறுவர்.

இத்தலத்தில் உள்ள இறைவன் வெண்ணிறமுடையவராக விளங்குவதால் பால்வண்ண நாதர் என்றழைக்கப்படுகிறார். இறைவி வேதநாயகி, தல விருட்சம் —வில்வம், தீர்த்தம் — கொள்ளிடம். இறைவன் இங்கு சுயம்புவாக அருள் பாலிக்கிறார்.

குதிரையின் கால்குளம்பு பட்டு பிளந்து போன வெண்ணிற லிங்கத்துக்கு பூஜைகள் நடக்கின்றன. திருஞானசம்பந்தர் 22, அப்பர் 42, சுந்தரர் 10 பதிகங்களைப் பாடியுள்ளனர்.

பைரவர்

இங்குள்ள பைரவர் காசியில் உள்ளதுபோல் நாய் வாகனம் இல்லாமல், பூநூல் அணிந்து 27 மண்டை ஓடுகளுடன் இடையில் அரைஞாண்கயிறாக சர்ப்பமும், ஜடாமுடியுடன் சிங்கப்பல்லுடன் தனிச் சந்நிதியில் மேற்கு நோக்கி நின்ற நிலையில் அருளுகிறார். அகஸ்தியர் மற்றும் கபில முனிவர் தரிசனம் செய்துள்ளனர்.

அஷ்டமி அன்று அதிக மக்கள் பைரவரைத் தரிசிக்க வருகிறார்கள்.

(தொடரும் வலம்.....)




# ‘இரு புறமும் சுழலும் கடிகாரம்’
## (சிறுகதைகள்)




**ஆசிரியர்:**

**மாலதி சிவராமகிருஷ்ணன்**

**விலை : ரூ. 250**

**வெளியீடு:**

**தடம் பதிப்பகம்,**
**098842 79211**
thadampathippagam@gmail.com

*கவித்துவமான தலைப்பைக்கொண்ட இத்தொகுப்பின் கதைகளிலும் நினைவுகள் ஒரு முள்ளாக காலத்திலும், பயணங்கள் ஒரு முள்ளாக அனுபவங்களிலும் சுழல்கின்றன. 17 கதைகள் கொண்ட இத்தொகுப்பின் ஒவ்வொரு கதையும், முத்தாய்ப்பாக கவித்துவமான தலைப்புகள் கொண்டிருக்கின்றன.*

*புதிய யத்தனிப்புகள், பரிசோதனைகள், சிறு வயது நினைவுகள், கச்சிதமான கதாபாத்திர பதிவுகள் என எல்லாவிதமான கதைகளும் ஆசிரியரின் நுண் விவரிப்புகள்கூடிய கதை சொல்லலில் உயிர் பெற்று எழுகின்றன.*

*ஒவ்வொரு கதையும், தன் கதாபாத்திரங்களையும் அக்கதை களத்தின் சப்தங்களையும் நம்முடன் விட்டு செல்கின்றன. கடிகாரங்களின் சுழற்சிக்கு அப்பால், தன் இயல்பில் இயங்குவதுதான் புனைவுலகு. அவ்வுலகிற்கு ஒரு உல்லாச பயணமாக அழைத்துச் செல்கிறது, மாலதி சிவராமகிருஷ்ணனின் முதல் சிறுகதை தொகுப்பு.*



சிறுகதை

# கணக்கு

புவனகிரி செயபாலன்

“தாத்தா யாரோ நடராஜன்னு உங்கக்கிட்ட பேசனுமின்னு சொல்றார், என்று சொல்லி போனை ரகுபதியிடம் நீட்டினாள் பேத்தி.”

‘நடராஜனாஞ் யாரா இருக்கும் என நினைத்தபடியே போனை வாங்கி ‘ஹலோ’ என்றார்.

“நான்தாண்டா உன் கிளாஸ்மெட் நடராஜன் பேசுறேன். எங்க அப்பாவுக்கு தொன்னூறு வயசு புர்த்தியாகப் போறது. அதுக்காக வர்ற இருபதாம் தேதி சதாபிஷேகம் செய்யப் போறோம். நீ குடும்பத்தோடு இரண்டு நாள் முன்னாடியே கண்டிப்பா வந்துடு.” நடராஜன் சொல்ல கண்டிப்பா வந்துடுறோம், சொன்ன ரகுபதியின் மனம் பின்னோக்கி சென்றது.

“இந்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி காமன் எக்ஸாம் எப்படி எழுத போறோம் என்று பயமா இருக்குடா” என்றான் ரகுபதி. மாலையில் பள்ளியிலிருந்து திரும்பும் போதுஞ்

“கையால்தான்டா எழுதணும்ஞ்” நடராஜன்.

“கிண்டலுக்கு ஒன்றும் குறைச்சலில்லைஞ் நாளைக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. அதுக்கு வரணும். இந்த பரிட்சையில் கணக்குலதான் பெயில் ஆவேன் போலிருக்கு” ரகுபதி விரக்தியாக.

“இங்கே மட்டும் என்ன! எனக்கு சயின்ஸ் வீக் இருந்தாலும் பாஸாயிடுவேன்னு நம்பிக்கை இருக்கு. அப்படியே பெயிலான என்னஞ் அக்டோபர் இருக்கு” என்றவனிடம்

ஒரு சப்ஜெக்ட்டில் பெயினாலும் அடுத்த தடவை எழுதுறப்ப எல்லா சப்ஜெக்ட்டையும் சேர்த்து தான் எழுதனும். அப்பவும் வேற ஒன்னுல பெயிலானா அடுத்த மார்ச்ல எல்லாத்தையும் எழுதனும்.

எப்படி எழுதினாலும் நாலு தடவைதான் எழுத முடியும். நாலுலேயும் பெயிலான அவ்வளவுதான். படிப்பை மூடடைக்கட்டி பரண்ல ஏத்திவைச்சிட்டு கூலி வேலக்கோ, இல்ல கடையில பொட்டலம் மடிக்கவோ போவ வேண்டியதுதான்.

பேசிக்கொண்டே நடந்தவர்கள் நடராஜன் அப்பா கடையில் கூட்டமாக இருப்பதை பார்த்ததும் இருவரும் வேகமாக நடக்க ஆரம்பித்தனர் கடையை நோக்கி.


இருவரும் குடும்பமும் ஒரே தெருவில் எதிர் எதிர் வீட்டில் வசிப்பவர்கள். ரகுபதியின் அப்பா அரசு வேலையின் காரணமாக இங்கு வந்து குடியேறியவர். நடராஜன் அப்பா பரமசிவத்துக்கு இதுதான் பூர்வீகம். நடுத்தரமான டவுன் கடை வீதியில் சின்ன ஜவுளி கடை வைத்திருக்கிறார். நடராஜன் படித்த பள்ளியில் ரகுபதி ஆறாம் வகுப்பில் சேர்ந்தான். இருவரும் ஒரே வகுப்பு. தற்போது பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி)

படிக்கிறார்கள். இவர்கள் வீட்டிலிருந்து மேற்கே இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பள்ளிக்கு காலையில் நடந்தே சென்று மாலையில் திரும்புவர். மதியத்திற்கு இருவரும் சாதமோ, டிபனோ எடுத்துச் செல்வர்.

கடையில் கண்ணாடி பீரோக்களில் துணிகள் சிலது ரோலாகவும் சிலது மடிப்பாகவும் இருந்தன. கடை தரையில் போடப்பட்டிருந்த கோரைப்பாயில் பரமசிவம் உட்கார்ந்திருக்க ஓரத்தில் தையல் மெஷின் துணியால் மூடப்பட்டிருந்தது.

பரமசிவம் எதிரில் சிலர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு பின்னால் சிலர் நின்று கொண்டிருந்தனர். “பணத்தையும், கணக்கை எடுத்துகிட்டு வந்து காட்டு.” தையல்க்காரன்ங்க காசையெல்லம் எடுத்துக்கிட்டு ஏமாத்தப் பார்க்கிறாயா? “ஒவ்வொரு நூலையும் சேர்த்து தச்சி கொடுத்த பணம். ஏமாத்த நினைச்ச நாசமா போயிடுவேஞ்” மாறி மாறி பேசினர்.

“திடீர்னு வந்து கேட்டா எப்படி காட்டுறது?” நாலு நாள் முன்னாடியே சொல்லி இருந்தா அதுக்கு தகுந்தபடி எடுத்து வந்திருப்பேன்” பரமசிவம் மெதுவான குரலில்.



“நாங்க அப்பப்ப கொடுத்த பணத்தையெல்லாம் மொத்தமா வட்டிக்கு கொடுத்து இருக்க, முன்னாடியே சொன்னாதான் வாங்கிட்டு வர வசதியாய் இருக்கும்னு சொல்ல வரியாஞ்”

“தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்கிறாரேன்னு இவர்கிட்ட ஒப்படைச்சோம் பாரு எங்களை சொல்லணும்” ஆளுக்கு ஆள் கண்டபடி பேசினர்.

‘இந்த ஊர்ல தையல் கடைக்காரர்கள் சங்கம் ஆரம்பிச்சு மாச மாசம் சந்தா வசூல் செய்வாங்க. அந்த பணத்துல வருஷத்துக்கு ஒரு தடவை விழா நடத்துவாங்க. செலவு போக மீதி இருந்தால் பொறுப்பில் இருக்கிற ஒருத்தர் கிட்ட கொடுத்து வச்சுக்க சொல்வதுடன், அந்த வருஷத்துக்கான மாத சந்தாவை வசூல் செய்ய சொல்லிடுவாங்க. இந்த தடவை நடராஜன் அப்பா கிட்ட பொறுப்பை ஒப்படைச்சிருக்காங்கன்னு இவன் அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. ஆனால் எதுக்கு அப்பா கிட்ட சண்டை போடுறாங்கன்னு சரியா புரிஞ்சுக்க முடியல..’ நினைத்தவன் பேசியவர்கள் மீது கோபமும்; ஆத்திரமும் வந்தது.

நின்றவர்கள் பின்னால் நின்றவனைப் பார்த்ததும் கிட்ட வரச் சொல்லி சைகை காட்டினார். நடராஜன் அருகே செல்ல, பேசியவர்கள் அமைதியாயினார். “வீட்டுக்குப் போய் உள் வாராண்டா வடக்கு மூலையில் காக்கி கலர்ல தச்ச துணி பையை ஆணியில் மாட்டி வச்சிருக்கேன் அதைப் போய் எடுத்துவா” என்றார்.

“கணக்கை காட்டுன்னா பையனை வூட்டுக்கு அனுப்புற..” என்றான் கூட்டத்தில் ஒருவன். “வீட்டுக்கு போய்த் தான் எடுத்து வரட்டுமே” சமாதப்படுத்தினான் வேறு ஒருவன்.

“பையன் வுட்டுக்கு போய்த்தான் எடுத்து வரட்டுமே” என்று சமாதானப்படுத்தினான் வேறு

ஒருவன்.

"நீயும் வா" என்றான் நடராஜன் ரகுபதியைப் பார்த்து. "இல்லடா நான் இப்படியே வூட்டுக்கு போய்டுறேன், நீ பையை எடுத்துக்கிட்டு வந்து குடுத்துட்டு வா" என்றவனை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றான்.

புத்தகப்பையை வைத்துவிட்டு அப்பா சொன்ன இடத்திலிருந்த பையை எடுக்க ஆரம்பித்தான்.

"டேய் இந்த பையை யாரும் தொடக்கூடாதுன்னு உங்க அப்பா சொல்லி இருக்கார். இதுவரை நானே தொட்டது இல்ல, இதை ஏன் எடுக்குற?" என்றாள் அம்மா கோபமாக.

கடையில் நடந்ததை மூச்சிறைக்க சொன்னான்.

காக்கிப் பையில், கட்டப்பட்ட நிலையில் சின்ன



சின்ன சுருக்கு பைகள் அதன் மேல் பெயிண்டால் நம்பர் எழுதப்பட்டிருந்தது. அவற்றில் பணம் சில்லறை நாணயங்கள் இருப்பது போல் தெரிந்தது.

கனத்த பையை எடுத்துக் கொண்டனர். போகும் வழியில் பையின் கணம் தாங்காமல் அறுத்துக் கொண்டு கீழே விழுந்து கொட்டி விட்டால் என்னாவது என்ற பயத்தில் பையின் காதுகளை முடித்து போட்டு தோளில் ஒரு பக்கத்தில் தூக்கி வைத்துக்கொண்டு ரகுபதியுடன் நடக்க ஆரம்பித்தான்.

தனக்கு கால் சட்டை, மேல் சட்டை என துணி எடுக்க ரகுபதி தன் அப்பாவுடன் நடராஜன் அப்பா கடைக்கு முதல் தடவை சென்றான்.

"உனக்கு பிடித்த சட்டை துணியை காட்டு எடுத்துத் தருகிறேன்" என்றார். இவன் கண்ணாடி பீரோவின் உள்ளே இருந்த பச்சை நிற பூப்போட்ட துணியை காட்டினான்."

அதையே எடுங்க முழுக்கைக்கு எவ்வளவு வேணும்னு கேட்டு கிழிங்க மீட்டர் என்ன விலை? என்றார் அப்பா.

"படிக்கிற பையனுக்கு இவ்வளவு உயர்ந்த விலையில் துணி எடுக்கணுமா? குறைந்த விலையில் இருக்கிற துணியை எடுத்து அரைக்கைச் சட்டை தைத்து கொடுங்க என்றார் பரமசிவம். "பையன் இஷ்டப்படுறான். அவன் காட்டின துணியை எடுத்து கிழிச்சிடுங்க" என்றார்.

ஆனால் பரமசிவம் இவ்வளவு விலை போட்டு வாங்கணுமா தைய கூலி வேற இருக்கு அதனால நான் சொல்ற துணியை எடுத்துக் கொடுங்கன்னு சொல்லி அவர் குறைந்த விலை துணியை அரைக்கை சட்டைக்கு கிழித்தார். அதேபோல் அரைக்கால் சட்டைக்கும் கிழித்தார்.

அவர் மீது ரகுபதிக்கு கோபம்! அதிலிருந்து அவர் கடைக்கு அப்பாவுடன் துணி எடுக்க போவதை விட்டு விட்டான். அதை நினைத்து நடராஜனை பரிதாபமாக பார்த்தபடி நடந்தான். இவர்கள் வருகையை எல்லோரும் எதிர்பார்த்து காத்திருந்தது அவர்கள் பார்வையில் தெரிந்தது.

பையை அப்பாவிடம் கொடுத்தான்.

"நீங்க கேட்டீங்களே பணம், கணக்கு எல்லாம் இதுல இருக்கு" என்று சொல்லி பை முடிச்சை அவிழ்த்து தலைகீழாகக் கொட்டினார். முடிச்சுகளுடன் கூடிய சின்னச் சின்ன துணி பைகள் விழுந்தன.

ஒவ்வொரு பையிலும் 3, 2, 9 என எண்கள் எழுதப்பட்டு இருந்தது. அத்துடன் ஒரு நோட்டும் இருந்தது.

கூட்டத்தினரைப் பார்த்து, "நம்ம சங்கத்தில் எத்தனை பேர் உள்ளனர் என்பதையும், ஒவ்வொருவருக்கும் தனித்தனி பக்கம் ஒதுக்கி அதில் எந்தெந்த மாசத்துக்கு எவ்வளவு சந்தா கொடுத்தனர் என்பதையும், சிலர் சந்தா சில மாதம் கொடுக்கவில்லை அதையும் எழுதி வைத்துள்ளேன். ஒவ்வொருவருக்கும் உள்ள பையில் அவர்கள் கொடுத்த பணத்தைப் போட்டு கட்டி வைத்துள்ளேன். நீங்களே நோட்டை பார்த்து பணம் சரியாக இருக்காங்கிறதை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

ஒருவன் "அஞ்சாம் நெம்பர் யாருடையது?" என்று கேட்க, "நோட்டில் அஞ்சாம் நம்பர் யார் பெயர் இருக்கிறது என்று பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

பக்கத்திலிருந்தவன் ஒருவன் நோட்டை எடுத்து பிரித்து 5 ஆம் நெம்பர் எண்ணுள்ள பக்கத்தை பார்த்தான்.

அந்த பக்கத்தில் சங்கத்தில் உள்ள ஒருவன் பெயர் அவன் கடை முகவரி, வீட்டு முகவரி என எல்லாம் எழுதி ஒவ்வொரு மாதம் சந்தா கொடுத்த தேதி பணம் என எல்லாம் எழுதியிருந்தது.



மொத்த பணம் எவ்வளவு என்பதை மட்டும் பென்சிலால் குறிக்கப்பட்டிருந்தது. மாதா மாதம் கூட்டுத்தொகை மாறும் என்பதால் தான் பென்சிலால் எழுதியுள்ளார் என்பது புரிந்தது.

ஐந்தாம் நம்பருக்கு உரிய துணிப்பை பிரித்து பார்த்து எண்ண அதில் உள்ள தொகையும், நோட்டில் உள்ள தொகையும் சரியாக இருந்து. வேறு ஒருவன் சில பைகளை எடுத்து பிரித்து எண்ணினான்.

அதிலிருந்த தொகையும் நோட்டில் உள்ள தொகையும் சரியாக இருக்க, யாரும் எதுவும் பேசவில்லை.

சிறிது நேரத்திற்கு பிறகு பொறுப்பாளர் ஒருவர் “நீங்க இந்த பணத்தை எடுத்து வட்டிக்கு விடுவதாக சொன்னாங்க. நான் நம்புல! மேலும் சிலர் சொன்னதால்தான் இப்படி கேட்க வேண்டியதா போச்சு. ஏதோ ஆர்வக் கோளாறில் பேசிட்டோம்! எங்களை மன்னிச்சிடுங்க எல்லார் சார்பிலும் மன்னிப்பு கேட்டுக்கிறேன்” என்றார்.

“எனக்கு இந்த பொருளாளர் பதவி வேண்டாம் என்று பல தடவை மறுத்தேன். அப்ப என்ன சொன்னீங்க? சங்கத்தில் கடந்த சில வருடமாக வசூலிக்கும் சங்கப் பணம் பல வழிகளில் விரையமாக்கப்படுகிறது. முறையான கணக்கு வழக்கு காட்டறதில்ல. ஒரு வருஷத்துக்குத்தானே! இந்த பதவியில் நீங்க இருந்தா ஒழுங்கு படுத்துவீங்க என்று கட்டாயப்படுத்தியதால்தான் நான் ஏத்துக்கிட்டேன்.

மேலும் இந்த பகுதியில் வேறு எந்த ஊரிலும் தையல்காரர்கள் சங்கம் வைத்திருக்கவில்லை. நான் என் உறவினர் நண்பர்களிடம் இந்த சங்கத்தை பற்றி பெருமையாக சொன்னேன், முடிந்தால் நம்மால் முடிந்த அளவு மேம்படுத்த வேண்டும் என்பதற்காக பதவி ஏற்று கொண்டேன். பதவியை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தியவர்களே வந்து கணக்கு கேட்டு கூச்சல் போட்டது எனக்கு பெரிய அவமானம்”

“எதையும் மனசுல வச்சுக்காதீங்க! நடந்ததுக்காக ரொம்ப வருத்தப்படுகிறோம். மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். எல்லத்தையும் எடுத்து உள்ளே வையுங்க. கணக்குக் கேட்டு உங்க கடை வாசப்படிக்கூட வரமாட்டோம்” என்றார் ஒருவர்.

“ஒருத்தர் கிட்ட பொறுப்பை ஒப்படைக்கும் போதே அவர் நல்லவரா, கெட்டவரா என தீர ஆராய்ந்து கொடுக்கணும். கொடுத்தபின் அவர் மேல் சந்தேகப்படுறது அவ்வளவு சரியில்லை என்று சொல்வேன். இப்ப என் மீது சந்தேகம் வந்துவிட்டது இனிமேல் நான் எது பேசினாலும் செய்தாலும் சந்தேக பார்வை இருக்கும். எனவே இந்த பை, நோட்டு பணத்தை எல்லாம் எடுத்துக்கிட்டு போய் சங்கத்தில் இருக்கிற வேற யார் கிட்டயாவது பொறுப்பு கொடுத்து நடத்த சொல்லுங்க.”

“இனி யாரும் சந்தேகப்பட மாட்டோம் இதையெல்லாம் எடுத்து வையுங்க!” என்று கோரஸாக சொல்லி வருத்தத்துடன் சென்றனர்.

ஒரு நேர்மையானவரை அநியாயத்திற்கும் பேசி விட்டோம் என்ற மன வருத்தத்துடன் வெளியேறினர்.

60 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியை கடையில் வைத்திருந்த பையை தன் மனதுக்குள் பூட்டி வைத்திருந்த ரகுபதி, சதாபிஷேகத்திற்கு கண்டிப்பாக செல்ல வேண்டும் என நினைத்தான்.

# தமிழர்

## தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி

இவரை பற்றிய சில வியக்க வைக்கும் உண்மைகள்

தேவதாசி முறையை ஒழிக்கப் பெரும்பாடு பட்டவரும், அன்றைய மதராஸ் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினருமான மருத்துவர். பல்வேறு துறைகளில் சாதித்து வரலாற்றுப் பக்கங்களில் இடம் பிடித்தவர் . தமிழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி, மதராஸ் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினர் என்ற பெருமைகளுக்குரியவர்.

சென்னையில் இன்றைக்கும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அடையாறு புற்றுநோய் மையத்தையும் 1954ல் தொடங்கி மக்களுக்காகவே வாழ்ந்த அவரது வரலாறு போற்றுதலுக்குரியது. கடும் எதிர்ப்புகளுக்கு இடையே தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்.

பள்ளி படிப்பு மாற்றம் கல்லூரி:

1886 ஜூலை 30ஆம் தேதி பிறந்த முத்துலட்சுமியின், தந்தை நாராயணசாமி, தாயார் சந்திரம்மாள் ஆவார். சிறுவயதில் இருந்தே கல்வியில் அதிக ஆர்வம் கொண்ட முத்துலட்சுமி 1902—ல் மெட்ரிகுலேசன் தேர்வில் முதல் மாணவியாக வந்தார் .தொடர்ந்து, உயர்நிலைப் பள்ளி படிப்பை புதுக்கோட்டை மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமானின் உதவித் தொகையுடன் படித்து முடித்தார். அந்த காலக்கட்டத்தில் பள்ளிக்கூடத்தில் முத்துலட்சுமி மட்டும்தான் ஒரேயொரு மாணவி ஆவார்.

புதுக்கோட்டை மன்னர்தான் உதவியுடன் சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சைத் துறையில், முத்துலட்சுமி சேர்ந்தார். கல்லூரி படிப்பின் போது பார்வைக் குறைபாடு ஏற்பட்டுக் கண்ணாடி அணிந்து கொண்டே படித்து முடித்தார். இருப்பினும், அறுவை சிகிச்சைப் பிரிவின் தேர்விலும் முதல் மாணவியாக வெற்றி பெற்று தங்கப்பதக்கம் வென்றார்.

அன்னிபெசன்ட் அம்மையார்:

மருத்துவ துறையில் மட்டுமின்றி முத்துலட்சுமி ரெட்டி, அன்னிபெசன்ட் அம்மையாரின் வழிகாட்டுதலின் கீழ் பெண்களுக்கான மீட்சி இயக்கங்களில் மகத்தான பங்களிப்பை அளித்துள்ளார். 1914இல் அன்னிபெசன்ட் அம்மையாரின் பிரம்மஞான சபை வழக்கப்படி, நிபந்தனைகளுடன் எளிய முறையில் சுந்தரரெட்டி என்பவரை முத்துலட்சுமி திருமணம் செய்து கொண்டார்.

உலக பெண்கள் மாநாடு:



# பெருமை

## கே.மகேஷ்

1925இல் கணவர் சுந்தரரெட்டி மற்றும் குழந்தைகளுடன் மேல் படிப்புக்காக லண்டன் சென்றார் முத்துலட்சுமி. அங்கிருந்தபடியே, இந்திய மகளிர் சங்கத்தின் சார்பில் 1926ல் பாரிஸில் நடைபெற்ற அகில உலக பெண்கள் மாநாட்டில் பங்கேற்றார். அம்மாநாட்டில் முத்துலட்சுமி, இளவயது திருமணம், விதவை மறுமணம் போன்றவை குறித்து எடுத்துரைத்தார். 1926—30 காலத்தில் அவர் கவுன்சில் உறுப்பினராக பணியாற்றினார்.

தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்:



முதல் பெண்கள் இயக்கமான 'இந்திய மாதர் சங்கத்தை' தொடங்கி பெண்களை முன்னேற்ற பாதையில் அழைத்து சென்றார். முத்துலட்சுமி அம்மையாரின் முயற்சியில்தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கக் கூடிய தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், விபசார ஒழிப்புச் சட்டம், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம், பெண்களின் திருமண வயதை உயர்த்தும் சட்டம் போன்றவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியம் குறித்து இங்கிலாந்தில் நடைபெற்ற பயிற்சிக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார். இங்கிலாந்துக்கு அனுப்ப அவருடைய பெற்றோர் மறுப்பு தெரிவித்த நிலையில், அவருக்கு ஓராண்டுக்கு நிதியுதவி அளிக்க வேண்டும் என்று நீதிக்கட்சித் தலைவரான தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் பனகல் அரசர் உத்தரவு பிறப்பித்தார்.

மருத்துவம் மட்டும் போதாது என்று நினைத்த முத்துலட்சுமி ரெட்டி, அன்னிபெசன்ட் அம்மையாரின் வழிகாட்டுதலின் கீழ் பெண்களுக்கான இயக்கங்களில் பங்கேற்றார். இந்திய மகளிர் சங்கத்தின் சார்பில் 1926ல் சென்னை சட்டமன்ற கவுன்சிலுக்கு அவர் நியமிக்கப்பட்டார். 1926—30 காலத்தில் அவர் கவுன்சில் உறுப்பினராக பணியாற்றினார்.

மருத்துவப் பணிக்கு இடையூறாக இருக்கும் என்ற அச்சத்தின் காரணமாக, ஆரம்பத்தில் கவுன்சில் உறுப்பினர் பொறுப்பை ஏற்க அவர் தயக்கம் காட்டினார். இருந்தபோதிலும் பெண்கள் தங்களது வீட்டைக் கட்டிக் காப்பாற்றும் திறனை நாட்டை கட்டமைப்பு செய்வதிலும் காட்ட வேண்டுமென அவர் கருதினார்.



குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம், கோவில்களில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், விபசார தடுப்பு சட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகளை விபச்சார தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுக்கும் சட்டம் போன்றவற்றை உருவாக்குவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

பெண்களின் திருமண வயதை 14 ஆக உயர்த்தக் கோரும் மசோதா குறித்து சட்டமன்றக் கவுன்சிலில் விவாதம் நடந்தபோது, ``உடன்கட்டை ஏறும் பழக்கத்தால் ஏற்படும் துயரம் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் குழந்தைகளுக்கு திருமணம் செய்யும் பழக்கத்தால், பெண் குழந்தைகள் பிறப்பு முதல் மரணம் வரையில் தொடர்ந்து துயரமான வாழ்வுக்கு அடிமைப்பட்டுப் போகும் நிலை உள்ளது, குழந்தைப் பருவ மனைவி, குழந்தைப் பருவ தாய், பல சமயங்களில் குழந்தை பருவத்திலேயே விதவை என துயரங்கள் தொடர்கின்றன" என்று பேசினார். ``சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவங்கள்" என்ற தனது புத்தகத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார் அவர்.

குழந்தைத் திருமண நடைமுறையை ஒழிக்கக் கோரும் மசோதா குறித்து பத்திரிகைகளில் செய்தி வெளியானபோது, பழமைவாதிகள் பொதுவெளியிலும், பத்திரிகைகள் மூலமும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பல்கலைக்கழக பட்டதாரிகளும்கூட அதை எதிர்த்தனர் என்று முத்துலட்சுமி ரெட்டி குறிப்பிடுகிறார்.

சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கக் கூடிய தேவதாசி நடைமுறையை ஒழிக்கும் சட்டத்தை நிறைவேற்றியதில் முத்துலட்சுமி ரெட்டி முன்னோடியாக இருந்தார். அடிப்படைவாத சிந்தனையாளர்கள் பலரின் எதிர்ப்பை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. அந்த மசோதா சென்னை சட்டமன்ற கவுன்சிலில் ஒருமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 1947ல் தான் அது சட்டமாக அமலுக்கு வந்தது.


தேவதாசி நடைமுறைக்கு எதிரான தனது முன்மொழிவை சட்டமன்றத்தில் வைத்துப் பேசிய அவர், ``தேவதாசி நடைமுறையானது உடன்கட்டை ஏறுதலைவிட மிக மோசமானது என்றும், "மதத்தின் பெயரால் நடைபெறும் குற்றச் செயல்" என்றும் கூறினார்.

அன்னிபெசன்ட் அம்மையார் மற்றும் மகாத்மா காந்தியின் சித்தாந்தங்களால் அவர் தீவிரமாக ஈர்க்கப்பட்டிருந்தார். முத்துலட்சுமி ரெட்டி: ஒரு சமூகப் புரட்சியாளர்" என்ற தலைப்பில் திருச்சியைச் சேர்ந்த வரலாற்றுத் துறை ஆய்வாளர் எம்.எஸ். ஸ்னேகலதா எழுதிய புத்தகத்தில், ``உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டபோது, சென்னை சட்டமன்ற கவுன்சில் உறுப்பினர் பதவியில் இருந்து முத்துலட்சுமி ரெட்டி விலகினார்" என்று பதிவுசெய்துள்ளார்.

தேவதாசிகளைப் பாதுகாப்பதற்காக, அடையாறில் தனது இல்லத்தில் 1931ல் அவ்வை இல்லத்தைத் தொடங்கினார் முத்துலட்சுமி ரெட்டி. தங்கை புற்றுநோயால் மரணம்

அடைந்ததால் முத்துலட்சுமி ரெட்டி பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார். அதைத் தொடர்ந்து 1954ல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையைத் தொடங்கினார். நாடு முழுவதிலும் இருந்து வரும் புற்றுநோயாளிகளுக்கு இப்போதும் இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சபதம் மேற்கொண்டார்.எனவே 1949—ம் ஆண்டு புற்றுநோய் மருத்துவ நிவாரண மருத்துவமனையை தொடங்கினார். இவரது சீறிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்த மருத்துவமனைக்கான




மருத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் சிறந்த பங்களிப்புகளுக்காக 1956ல் அவருக்கு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. 1947ல் தில்லி செங்கோட்டையில் சுதந்திர இந்தியாவின் முதலாவது கொடி ஏற்றம் நடந்தபோது அதில் சேர்ப்பதற்கு இவருடைய பெயர் தேர்வு செய்யப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் விடுதலைக்கு பங்காற்றியதற்காக அந்த கௌரவம் அளிக்கப்பட்டது.

பெண் விடுதலைக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் போராடிய இவருக்கு 1956ல் அவருக்கு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. மருத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் சிறந்த பங்காற்றிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1968—ம் ஆண்டு ஜூலை 22—ம் தேதி தனது 82—வது வயதில் உயிரிழந்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஜூலை 30, 1886ம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்தார். இவரே இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார்.

1923ம் ஆண்டு இவரது தங்கை புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். இதனால் புற்று நோயை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று

அடிக்கலை நாட்டினார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அரசியல், மருத்துவம் மட்டுமின்றி சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டிருந்தார்.

தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

தேவதாசி முறை ஒழிப்பில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக, 1929ம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

இவரது முயற்சியில் விளைவாக நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

• 1930ஆம் ஆண்டு பூனாவில் அனைத்திந்திய பெண்கள் மாநாட்டை நடத்தினார். 1933 முதல் 1947வரை, இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத் தலைவியாக இருந்தார். ஆதரவற்றவர்களுக்கு — மறுவாழ்வு தரும் பொருட்டு அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார்.

தமிழ்ப் பணிகள்

- இந்தி மொழிக் கிளர்ச்சியில் பங்குபெற்றார்.



தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வுப் போராட்டம் எனத் தமிழ்ப் பணிகள் செய்தார்.

- மாதர் இந்திய சங்கம் நடத்திய பெண்களுக்கான 'ஸ்திரீ தருமம்' என்னும் மாத இதழின் ஆசிரியராக விளங்கினார்.

அவர் வெறும் முதல் மருத்துவர் மட்டுமல்ல. பெண்களின் முன்னேற்றம், சாதி மறுப்பு, சமூக சீர்திருத்தம், விடுதலைப் போராட்டம் போன்ற பல துறைகளில் பங்களிப்பு செய்தவர்.

பழம்பெரும் நடிகர் ஜெமினி கணேசனின் சின்ன தாத்தா (தாத்தாவின் தம்பி) முத்துலட்சுமியின் அப்பா. ஆக, ஜெமினி கணேசனுக்கு முத்துலட்சுமி அத்தை முறை. ஜெமினி கணேசன் மீது அன்பு கொண்ட முத்துலட்சுமியின் அப்பா, இறக்கும் முன்பு ஜெமினி கணேசனுக்கும் சில சொத்துகளை எழுதி வைத்து கார்டியனாக முத்துலட்சுமியை நியமித்தார் என்று ஜெமினி கணேசன் தமது சுயசரிதையில் எழுதியிருப்பார்.

பெண்கள் கல்விக்கு எதிர்ப்பு இருந்த காலகட்டத்தில், வீட்டில் இருந்தபடியே படித்து தனித்தேர்வராக எழுதி மெட்ரிக் தேர்வில் தேறிய முத்துலட்சுமி இன்டர்மீடியட் படிக்க புதுக்கோட்டை மகாராஜா கல்லூரிக்கு விண்ணப்பித்தார். அந்த விண்ணப்பமே சலசலப்பை உருவாக்கியது. ஏனெனில் அதுவரை மகாராஜா கல்லூரியில் ஒரு பெண் படித்ததில்லை. அவர் பிற ஆண் மாணவர்களின் படிப்பு கெட காரணமாக இருப்பார் என்று கல்லூரி முதல்வர் கருதினார். ஆனால் மகாராஜா பைரவத் தொண்டைமான் தலையிட்டு அவர் படிக்க அனுமதித்ததோடு, கல்வி உதவித் தொகையும் வழங்கினார். 1912ல் அவர் மருத்துவர் ஆனார்.

மருத்துவம் படித்த பகுத்தறிவாளரான சுந்தரரெட்டியை தனது 28—வது வயதில் சாதி மறுத்துத் திருமணம் செய்துகொண்டார் முத்துலட்சுமி. தம்மை சமமாக நடத்தவேண்டும், தனது விருப்பங்களில் தலையிடக்கூடாது என்ற நிபந்தனைகளின் பேரிலேயே திருமணத்துக்கு அவர் ஒப்புக்கொண்டார்.

சட்ட மேலவை துணைத் தலைவர் : 1927 முதல் 1930 வரை அவர் சென்னை மாகாணத்தின் சட்டமேலவை உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் இருந்தார். அப்போது, கோயில்களில் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்குப் பொட்டு கட்டி இறைவனுக்கு மனைவியாக்கும் தேவதாசி முறையை ஒழிப்பதற்கான சட்டமசோதாவை முன்மொழிந்து, அதற்கென வாதிட்டார். இந்த மசோதாவே 1947 சென்னை தேவதாசிச் சட்டம் என்ற பெயரில் சட்டமானது. இதன் மூலம் தேவதாசிகள் திருமணம்

செய்து கொள்ள சட்ட உரிமை கிடைத்தது.

தேவதாசி முறையில் இருந்து விடுவிக்கப்பட்ட

ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அடிக்கல் நாட்டினார்.

1925—ஆம் ஆண்டு சட்டசபைத்



பெண்கள் தங்கிப் படிப்பதற்கு தமது வீட்டில் அவ்வை விடுதி என்ற பெயரில் 1930ல் ஒரு விடுதி தொடங்கினார் முத்துலட்சுமி. 1936ல் இந்த இல்லம் மயிலாப்பூரில் ஒரு வாடகை இடத்துக்கு மாற்றப்பட்டு, பிறகு அடையாறுக்கு மாற்றப்பட்டது. முதலில் தேவதாசி முறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பெண்களுக்கு மட்டுமே என்று தொடங்கப்பட்ட இந்த விடுதி பிறகு அடைக்கலமும், கல்வியும் தேவைப்படும் எல்லாப் பெண்களுக்கும் என்று மாற்றப்பட்டது.

புற்றுநோயால் இறந்த தமது சகோதரி மூலம் அந்த நோய் தரும் துன்பம், வலி, வேதனை ஆகியவற்றை நேருக்கு நேர் பார்த்திருந்த டாக்டர் முத்துலட்சுமி, புற்றுநோய்க்கு என்று ஒரு மருத்துவமனை கட்ட உறுதி எடுத்தார். நல்லுள்ளம் கொண்டவர்களிடம் நிதி திரட்டியும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் உதவியோடும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவினார். மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனைக்குப் பிறகு இந்தியாவிலேயே புற்றுநோய்க்காக உருவாக்கப்பட்ட இரண்டாவது சிறப்பு மருத்துவமனை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை. சென்னையில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்க பலவிதங்களிலும் நிதி திரட்டினார். இன்று புற்று நோயாளிகளுக்குப் புகலிடமாக விளங்கும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குப் பிரதமர் நேரு 1952—

துணைத்தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியில் இருந்த ஐந்தாண்டுகளில் சில புரட்சி சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.அவற்றில், தேவதாசி முறை ஒழிப்பு, இருதார தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், பால்ய விவாகங்களை தடை செய்யும் சட்டம் போன்ற சில குறிப்பிடத்தக்கவை.

அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க உருவானதே அவ்வை இல்லம் அடையாறில் அமைந்துள்ள இதனை அமைத்தவர் முத்துலட்சுமி ரெட்டி.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய மகத்தான பணிக்காக, 1956—ஆம் ஆண்டு அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது.

22, ஜூலை, 1968 அன்று முத்துலட்சுமி ரெட்டி உயிரிழந்தார். அப்போது வானொலியில் பேசிய இந்திரா காந்தி, முத்துலட்சுமி ரெட்டி, சரோஜினி நாயுடு போன்ற பெண்கள் இல்லாமல் போயிருந்தால் நாம் இன்று உயர்ந்த இடங்களைப் பிடித்திருக்க முடியாது என்று புகழாரம் சூட்டினார்.

புதினம்




# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### அட்டூழியம் 24

ஆயனரின் உள்ளம் சிந்தனா சக்தியை அடியோடு இழந்திருந்தது. தன் கண்ணால் பார்த்தது, காதால் கேட்டது ஒன்றையுமே அவரால் நம்ப முடியவில்லை. இவையெல்லாம் கனவிலே நடக்கும் நிகழ்ச்சிகளா, உண்மையில் நடக்கும் சம்பவங்களா என்பதையும் அவரால் நிர்ணயிக்கக் கூடவில்லை!

உலகத்தில் மாநிலத்தை ஆளும் மன்னர்கள் யுத்தம் செய்வது இயற்கைதான், அதில் நம்பமுடியாதது ஒன்றுமில்லை. அப்படி யுத்தம் செய்யும் அரசர்கள் போருக்கு அனுப்பும் வீரர்களுக்கு, “ஸ்திரீகளையும், குழந்தைகளையும், வயோதிகர்களையும் பசுக்களையும், கலைஞர்களையும் ஹிம்சிக்கக்கூடாது” என்று கட்டளையிடுவதுண்டு. அரசர்கள் பொல்லாத மூர்க்கர்களாயும் கருணையற்றவர்களாயுமிருந்தால், அவ்வளவு சிரத்தை எடுத்துக் கட்டளையிட மாட்டார்கள்.




ஆனால், சாம்ராஜ்யம் ஆளும் சக்கரவர்த்தி ஒருவர் தம் படை வீரர்களுக்கு, ‘சிற்பிகளையெல்லாம் காலையும் கையையும் வெட்டிப் போட்டுவிடு!’ என்று ஆக்ஞை இடுவது நடக்கக்கூடிய சம்பவமா? அம்மாதிரிக் கட்டளையிடக்கூடிய ராட்சதர்கள் இராஜ்ய சிம்மாசனத்தில் ஏறி வீற்றிருக்க முடியுமா? அந்த நாட்டின் பிரஜைகள் அதைப் பொறுத்துக் கொண்டிருப்பார்களா?”

அதிலும், புலிகேசிச் சக்கரவர்த்தியா அப்படிப்பட்ட கட்டளை பிறப்பித்திருப்பார்? எவருடைய இராஜ்யத்தில் உலகத்திலேயே இல்லாத கலை அதிசயங்கள் என்றும் அழியாத வர்ணங்களில் தீட்டப்பட்ட அற்புத ஜீவ சித்திரங்கள் உள்ளனவோ, அந்த இராஜ்யத்தின் மன்னரா அப்படிப்பட்ட கொடூரமான கட்டளையை இட்டிருப்பார்? அப்படி அவர் கட்டளையிட்டிருப்பதாக அந்தக் குரூர முகம் படைத்த தளபதி கூறியது உண்மையாயிருக்க முடியுமா? அவன் சொன்னதாகத் தம் காதில் விழுந்தது மெய்தானா?

அவனுடைய கொடூர மொழிகளைக் கேட்டுச் சிவகாமி உணர்விழந்து தரையில் விழுந்தது உண்மையா? அவளைத் தாங்கிக் கொள்ளத் தாம் ஓடியபோது வாதாபி வீரர்கள் தங்களுடைய இரும்புக் கரங்களினால் தம்மைப் பிடித்துக் கொண்டதும் உண்மையாக நடந்ததுதானா? பிறகு அந்தப் படைத் தலைவன் இட்ட கட்டளை மெய்தானா? ‘அதோ அந்தப் பாறை முனைக்கு அழைத்துப் போய்க் கோட்டையிலுள்ளவர்களுக்குத் தெரியும்படி காலையும் கையையும் வெட்டிக் கீழே உருட்டி விடுங்கள்!’ என்ற மொழிகள் தாம் உண்மையாகக் கேட்டவைதானா? அல்லது இவ்வளவும் ஒரு பயங்கரக் கனவில் நடந்த சம்பவங்களா? இந்தப் பாறைமீது தாம் ஏறுவதும், தம் கால்கள் களைத்துத் தள்ளாடுவதும் நிஜமா? அல்லது வெறும் சித்தப் பிரமையா?

இவையெல்லாம் வெறும் பிரமை தான்! அல்லது கனவுதான். ஒருநாளும்

# சபதம் 24

கல்கி


உண்மையாக இருக்க முடியாது. ஆனால், அதோ தெரிகிறதே, காஞ்சிக் கோட்டை, அதுகூடவா சித்தப்பிரமையில் தோன்றும் காட்சி? இல்லை, இல்லை! காஞ்சிக்கோட்டை உண்மைதான். தம்மைப் பாறை முனையில் கொண்டுவந்து நிறுத்தியிருப்பதும் உண்மைதான். இதோ இந்த ராட்சதர்கள் தம் கைகளைப் பிடித்துக் கொண்டிருப்பதும், கைகளை வெட்டுவதற்காகக் கத்தியை ஓங்குவதும் நிச்சயமாக நடக்கும் சம்பவங்கள்தான். ஆ! சிவகாமி! என் அருமை மகளே! இந்தப் பாவி உன்னை என்ன கதிக்கு உள்ளாக்கிவிட்டேன்! என் அஜந்தா வர்ணப் பைத்தியத்துக்கு உன்னைப் பலிகொடுத்தவிட்டேனே, ஐயோ! என் மகளே! மகளே!

வீரர்களில் ஒருவன் கத்தியை ஓங்கியபோது ஆயனர் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார். ஆனால், ஓங்கிய கத்தி அவர் எதிர்பார்த்தபடி அடுத்தகணம் அவருடைய கையை வெட்டவில்லை. "நிறுத்து!" என்று அதிகாரக் குரலில் ஓர் ஒலி கேட்டது. ஆயனர் கண்ணைத் திறந்து பார்த்தபோது... ஆஹா! இதென்ன? புலிகேசிச் சக்கரவர்த்தியல்லவா இவர்? இங்கு எப்படி வந்து சேர்ந்தார்?

சக்கரவர்த்தியைப் பார்த்த வியப்பினால் ஆயனரைப் பிடித்துக் கொண்டிருந்த வீரர்கள் திடீரென்று கைப்பிடியை விட்டார்கள். பக்கத்திலிருந்த பள்ளத்தில் ஆயனருடைய கால் நழுவிற்று. கீழே பூமி வரையில் சென்று எட்டிய அந்த மலைச் சரிவில் ஆயனர் உருண்டு உருண்டு போய்க் கொண்டிருந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் தம் உணர்வை இழந்தார்.

ஆயனருக்குச் சுய உணர்வு வந்தபோது, அருகில்





ஏதோ பெருங் கலவரம் நடப்பதாகத் தோன்றியது. பல மனிதர்களின் கூச்சலும் கற்கள் மோதும் சத்தமும் கலந்து கேட்டன. முன்னம் கேட்ட அதே அதிகாரக் குரலில், “நிறுத்து!” என்ற கட்டளை எழுந்தது.

ஆயனர் கண்களைத் திறந்து பார்த்தார். அரண்ய மத்தியில் இருந்த தமது பழைய சிற்பக் கிருஹத்துக்குள் தாம் இருப்பதைக் கண்டார். சுற்றுமுற்றும் பார்த்தார்; வாதாபிச் சக்கரவர்த்தி கம்பீரமாய் நின்று கையினால், “வெளியே போங்கள்!” என்று சமிக்ஞை செய்ய, மூர்க்க வாதாபி வீரர்கள் கும்பலாக வாசற் பக்கம் போய் கொண்டிருப்பதைப் பார்த்தார்.



வீட்டுக்குள்ளே தாம் அரும்பாடு பட்டுச் சமைத்த அற்புதச் சிலைகள் — அழகிய நடன வடிவங்கள் தாறுமாறாய் ஒன்றோடொன்று மோதப்பட்டு அங்கஹீனம் அடைந்து கிடப்பதைக் கண்டார். அப்போது அவருடைய உடம்பின்மேல் யாரோ ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் இருந்தது. பழுதடைந்த சிலைகளை அருகில் போய்ப் பார்க்கலாமென்று எழுந்தார். அவருடைய வலது காலில் ஒரு பயங்கரமான வேதனை உண்டாயிற்று, எழுந்திருக்க முடியவில்லை. தமது வலது கால் எலும்பு முறிந்து போய்விட்டது என்பது அப்போதுதான் ஆயனருக்குத் தெரிந்தது.

அச்சமயம் பின்கட்டிலிருந்து ஆயனருடைய சகோதரி உடல் நடுங்க, கண்களில் நீர் பெருக, ஓடிவந்து ஆயனர் அருகில் விழுந்தாள். பாவம் சற்று முன்னால் அந்தச் சிற்பக் கிருஹத்தில் வாதாபி வீரர்கள் செய்த அட்டகாசங்களைப் பார்த்து அவள் சொல்ல முடியாத பீதிக்கு ஆளாகியிருந்தாள்.

எல்லா வீரர்களும் வீட்டுக்கு வெளியே போன பிறகு, வாதாபிச் சக்கரவர்த்தி சாந்தமாக நடந்து ஆயனர் கிடந்த இடத்துக்கு அருகில் வந்தார். ஆயனர், “பிரபு! தங்களுடைய வீரர்கள் இம்மாதிரி அட்டூழியங்களைச் செய்யலாமா?” என்று கதறினார்.

(சபதம் தொடரும்)



படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



# யோக

## யோகாவின் வழிமுறைகள்:யோகா வகைகள் மற்றும் பயன்கள்..!

யோகாசனம் செய்வதால் நமது உடல் மிகவும் ஆரோக்கியமாக இருக்கும். அதுமட்டும் இல்லாமல் உடல் எப்போதும் சோர்வு தன்மை இல்லாமல் சுறுசுறுப்பாகவும் இருக்க உதவும். யோகா வகைகளில் எண்ணற்ற யோகாசனம் இருக்கிறது.

யோகாசனத்தை ஒரு நாள் மட்டும் செய்யாமல் தினமும் தவறாது பின்பற்றுதல் அவசியம். யோகா பயிற்சியை செய்வதால் உடல் ஃபிட்டாகவும், வயதானாலும் எளிமையான தோற்றத்தை அளிக்கும் ஆற்றல் யோகாசனத்திற்கு உள்ளது.

உத்தித ஹஸ்த பாதாங்குஸ்தாசனம்

இதனைச் செய்வதால் கால்கள் மற்றும் கணுக்கால் பகுதிகளை பலப்படுத்த செய்கிறது. இது கால்களின் பின்புறத்தையும் நீட்டி சம நிலையை மேம்படுத்துகிறது.

சசங்காசனம்

கைகள், தோள்கள் மற்றும் மேல் முதுகில் நீட்டவும் பலப்படுத்தவும் சசகசனா உதவுகிறது. இந்த ஆசனத்தை வழக்கமாக செய்து வந்தால் பல முதுகெலும்பு சிக்கல்களைத் தணிக்க முடியும்.

சர்வங்காசனா யோகாசனம்

இந்த ஆசனம் செய்வதால் தைராய்டு பிரச்சனைகளிலிருந்து தப்பிக்கலாம். மேலும் இதயத்திற்கு எந்தவித அழுத்தமும் இல்லாமல் மென்மையான இரத்த ஓட்டத்தை கொடுக்கிறது. இதனால் இதயத்தின் இரத்த ஓட்டமானது சரியான செயல்பாட்டுடன் இருக்கும். குறிப்பாக இதயத்தில் படபடப்பு தன்மை ஏற்படாமல் பாதுகாக்கும்.

விராபத்ராசனா

கவனம், சமநிலை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது. இந்த யோகாசனம் செய்வதால் உடலில் நல்ல சுழற்சி மற்றும் சுவாசத்தை ஊக்குவிக்க செய்யும். மேலும் இதன் விளைவாக உடல் முழுவதையும் உற்சாகபடுத்தும்.

மகரசனா

ஆஸ்துமா, முழங்கால் வலி மற்றும் நுரையீரல் தொடர்பான அனைத்து வித பிரச்சினையையும் குணப்படுத்தும். இந்த ஆசனம் உடலுறுப்புகளை குணப்படுத்த உதவுகிறது. உடலை தளர்த்தி எப்போதும் புத்துணர்ச்சியாக வைத்திருக்கும்.

உத்தன்படசனா

உடலில் உள்ள செரிமான உறுப்புகளின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. செரிமான உறுப்புகளை சரி செய்வதோடு மட்டுமல்லாமல் மலச்சிக்கல் பிரச்சனையை நீக்குகிறது. இந்த ஆசனத்தின் சிறப்பு கணையம் மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு இந்த ஆசனம் மிகவும் நல்லது.

தடாசனா யோகா

தடாசனா செய்வதால் தொடை, முழங்கால்,





# யோகம்

ஸிந்துஜா

கணுக்கால் பகுதிகளை பலப்படுத்துகிறது. அதோடு இடுப்பு, கால் பாதங்களுக்கு வலிமையை அதிகரித்து உடலை புத்துணர்ச்சியாக வைத்திருக்கும்

திரிகோனசனா

உடலில் அஜீரண பகுதியை குணப்படுத்தும். குறிப்பாக இடுப்பு, தொடை பகுதிக்கு நெகிழ்வு தன்மையை அளிக்கிறது. இந்த ஆசனம் செய்வதால் இடுப்பு மற்றும் தொடைகளில் இருக்கும் கொழுப்புகளை நீக்கிவிடும். சிறுநீரக செயல்பாட்டை அதிகமாக தூண்ட செய்யும்.

கோமுகசனா

சிறுநீரக பகுதியை தூண்ட செய்யும். அதுமட்டும் இல்லாமல் நீரழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பாலியல் செயலிழப்பு போன்ற பிரச்சனைகளை நீக்கும் தன்மை இந்த கோமுகசனா ஆசனத்திற்கு உள்ளது.

பவனமுக்தாசனா

பாவனமுக்தாசனா செய்வதால் வயிற்று



தசைகளை வலுப்படுத்தும். செரிமான பகுதிகள் மற்றும் குடல் உறுப்புகளை மசாஜ் செய்யும் ஆற்றல் வாய்ந்தது பாவனமுக்தாசனா. அதோடு வாய்வு பிரச்சனை இல்லாமல் செரிமான பகுதியை மேம்படுத்துகிறது.

சுகாஸனா

இந்த ஆசனம் காலர்போன்கள் மற்றும் மார்பு பகுதிகளை விரிவுபடுத்தக்கூடிய சிறந்த ஆசனம். முக்கியமாக இந்த சுகாஸனா யோகாசனம் மனதை அமைதி நிலைபடுத்தவும் மனதை மேம்படுத்தவும் செய்கிறது. மனதில் இருக்கக்கூடிய கவலைகள், மன அழுத்தம், உடல் சோர்வு பிரச்சனைகள் நீங்கும்.

சலபாசனா

உடலில் இருக்கும் பின்புற தசைகளை வலுப்படுத்துவதில் மிகவும் சிறந்த யோகாசனம் இந்த ஷலபாசனா யோகாசனம். குறிப்பாக அதிகமாக முதுகு வலி உள்ளவர்கள் இந்த ஷலபாசனா ஆசனத்தை தினமும் பொறுமையாக செய்யலாம்.

பாலசனா

இடுப்பு பகுதிகள், தொடை, கணுக்கால் தசைகளை நீட்டி பலப்படுத்தும் தன்மை இந்த பாலசனா யோகாவிற்கு இருக்கிறது. இந்த ஆசனம் செய்வதினால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். அதுமட்டும் இல்லாமல் மன அழுத்தம், உடல் சோர்வை குறைத்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும்

உஸ்ட்ராசனா



கை, கால் தசைகள், கழுத்து பகுதிகள் நன்கு சீராக இருக்கும். இதனால் தோல்கள் வயிற்று தசைகளை பலப்படுத்தும்.

புஜங்கசனா

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் பிரச்சனையை சரிசெய்யும் ஆற்றல் வாய்ந்தது. அதோடு மனநிலை பிரச்சனையை சரி செய்கிறது. இந்த ஆசனம் சிறுநீரகம், இதய உறுப்புகளைத் தூண்டச் செய்கிறது.

பெண்கள் இந்த யோகாசனத்தை தினமும் செய்து வந்தால் உடலில் இருக்கும் மன அழுத்த பிரச்சனை குறைந்துவிடும். உடல் சோர்வுத்தன்மையை அகற்றி உடலை எப்போதும் புத்துணர்ச்சியாக வைத்திருக்கும்.

கூர்மாசனா

கால், முதுகு பகுதி, தோல் பகுதிகள், மற்றும் மார்பு தசைகளை நீட்டிக்க செய்கிறது. சுவாச பிரச்சனை வராமலும் மற்றும் செரிமான பகுதிகளை சீராக வைத்திருக்க உதவுவதால் இந்த கூர்மாசனத்தை தினமும் செய்து வந்தால் உடல் வலிமையாக இருக்கும்.

தொடைகளில் இருக்கும் கொழுப்புகளை குறைத்துவிடும். அதோடு இந்த ஆசனம் தோள்களை பலப்படுத்தும் சக்தியை பெற்றுள்ளது. உஸ்ட்ராசனா வயிற்றுப் பகுதியை விரிவுபடுத்துகிறது. அடுத்து முதுகில் ஏற்படும் வலியை குறைத்து, செரிமான பிரச்சனைகளை மேம்படுத்துகிறது.

கதிசக்ராசனா

உடலில் இருக்கும் மலச்சிக்கலை நீக்கும். அதுமட்டும் இல்லாமல் கதிசக்ராசனா யோகாவால் முதுகெலும்பு மற்றும் இடுப்பின் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்தும் சக்தியை பெற்றுள்ளது இந்த ஆசனம்.

சேதுபந்த சர்வாங்காசனம்

மார்பு பகுதி, கழுத்து, முதுகெலும்பு, மற்றும் இடுப்பு பகுதிகளை நீட்ட செய்கிறது. உடலில் இரத்த ஓட்டம் சீராக அமையும். அதுமட்டும் இல்லாமல் இந்த ஆசனத்தின் நன்மை முதுகு பின்புறம், உடல் பிட்டம் மற்றும் தொடை பகுதிகளை மேம்படுத்த இந்த ஆசனம் உதவுகிறது.



இந்த யோகாவின் மூலம் உடலில் சிலருக்கு தமனி அடைப்பு பிரச்சனை உள்ளவர்கள் இந்த ஆசனம் செய்தால் குணமாகும். அதோடு இதய பிரச்சனை உள்ளவர்களுக்கும் இந்த ஆசனம் சிறந்தது.

மத்ஸ்யாசனா

சுவாச கோளாறு பிரச்சனை நீங்கும். பிட்யூட்டரி, பாராதைராய்டு, மற்றும் பினியல் சுரப்பிகளையும் சீராக வைத்திருக்க இந்த ஆசனம் மிகவும் உதவியாக உள்ளது. கழுத்து பின்புறத்தில் இருக்கும் தசை பகுதிகளையும் வலிமையாக்குகிறது.




BOLD
Freedom
shine








## வித்தை காட்டும் நத்தை சூரி !

தொற்றா நோய்க்கூட்டத்தில் உலக அளவில் முக்கிய இடம் பிடிப்பது உடல் பருமன் தான். இந்த உடல் பருமன் சர்க்கரை வியாதிக்கும், இருதய நோய்க்கும், புற்றுநோய்க்கும் ஆதாரமாக உள்ளது நாம் அறிந்ததே. அதில் முக்கியமாக இருதய நோய்கள் உண்டாகக் காரணம் ரத்த குழாய்களில் படியும் அதிகப்படியான கொழுப்பு தான். இது நாளடைவில் ரத்த குழாயில் அடைப்பை உண்டாக்கி, ரத்தம் சீராக பாய்வதைத் தடுத்து, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். ஆக ரத்தத்தில் சர்க்கரை அளவைப்போல் கொழுப்பின் அளவை சரியாக பராமரிப்பதும் அவசியமான ஒன்று.

சர்க்கரை வியாதி, உடல் பருமன் என்று மருத்துவரை அணுகும் போது மருத்துவர்கள் முதலில் வலியுறுத்துவது 'கூடவே இந்த லிப்பிட் ப்ரொபைல் பரிசோதனையும் பண்ணிடுங்க' என்பது தான். அதாவது கொலஸ்டிரால், ட்ரைகிளிசிரைட், எச்டிஎல் எனும் நல்ல கொழுப்பும், எல்டிஎல் எனும் கெட்ட கொழுப்பு ஆகிய அனைத்தும் இதில் அடங்கும்.

இவற்றில் கொலஸ்டிரால், ட்ரைகிளிசிரைட், எல்டிஎல் எனும் கெட்ட கொழுப்பு ஆகிய மூன்றும் இயல்பாக இருக்க வேண்டிய அளவை விட கூடுதலாகவும், நல்ல கொழுப்பு இயல்பை விட குறைவாகவும் இருப்பது 'ஹைப்பர்லிபிடிமியா' எனப்படும். இது இருதய நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒன்று.

சித்த மருத்துவ தத்துவப்படி, 'ஏழு உடல் தாதுக்கள்' தான் நம் உடலுக்கு அத்தியாவசியம். மேலும் இவை உடலில் கூடினாலும், குறைந்தாலும் நோயை உண்டாக்குவதாக உள்ளன. அதனை 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்ற வள்ளுவனின் எளிமையான வரிகளால் அறியலாம்.

அவையாவன சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மூளை, சுக்கிலம் அல்லது சுரோணிதம். இவற்றில் 'கொழுப்பு' எனும் நான்காவது உடல் தாது அதிகரிப்பதன் விளைவாக உடல் பருமன் உண்டாகிறது. அதாவது நான்காவது உடல் தாதுவான கொழுப்பில் இன்னும் கூடுதலாக கபம் சேர்ந்து நோயினை உண்டாக்குவதாக சித்த மருத்துவம் கூறுகின்றது. ஆக, கபத்தை குறைத்து, கொழுப்பினைக் குறைக்கும் மூலிகைப் பொருட்கள் உடல் பருமனை குறைக்கும்.

பொதுவாக கொழுப்பினை குறைக்கும் மருந்துகளை தொடர்ந்து எடுப்பதனால் பல்வேறு உடல் உபாதைகள் பின் விளைவுகளாக உண்டாவதாக நவீன அறிவியலே எச்சரிக்கின்றது. அதில் முக்கியமாக இருப்பது தசை வலி தான். அதுமட்டுமல்லாது ஏற்கனவே கல்லீரல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும், ரத்தத்தில் கல்லீரல் சார்ந்த நொதிகள் அதிகரித்த நபர்களுக்கும், குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கும் ஏற்புடையதும் அல்ல. குடிப்பழக்கம் உள்ளவர்களுக்குத் தானே எல்லா பிரச்சனையும் வருகிறது.






சோ.ஜெயந்தி

அந்த பிரச்னைகளைத் தடுத்து, கல்லீரலையும் பாதுகாத்துக்கொள்ள எளிய மூலிகை மருந்து இருந்தால் நிச்சயம் அவர்களுக்கு வெகுமதி தான். அந்த வகையில் பயன்தரக்கூடியது ‘குழிமீட்டான்’.

கொழுப்பின் அளவைக் குறைத்து, இருதயம் காத்து ஆரோக்கியத்தை நீட்டும் வகையில் பயன் தர பல சித்த மருத்துவ மூலிகைகள் உள்ளன. அதில் முக்கிய இடத்தில் இருக்கும் எளிய மூலிகை ‘குழிமீட்டான்’ எனும் ‘நத்தைசூரி’. அதன் பெயர்க்காரணத்தால் அறியப்படுவது என்னவெனில், அதிகரித்த கொழுப்பாலும், அதிகரித்த கபத்தாலும், இறக்கும் தருவாயில் உள்ளவர்களையும் மீட்டுக் காக்கும் தன்மை உடையதாக தெரிகிறது.

நத்தை சூரி தாவரத்தில் டானின்கள், ஃபிளாவனாய்டுகள், பீனால்கள், டெர்பீனாய்டுகள், அல்கலாய்டுகள், சபோனின்கள், ஸ்டீராய்டுகள் மற்றும் கார்டியாக் கிளைகோசைடுகள் ஆகிய பல மருத்துவ குணமிக்க வேதிப்பொருட்கள் உள்ளன. மேலும் முக்கிய உயிரி வேதிக்கூறுகளில் —சிட்டோஸ்டெரால், உர்சோலிக் அமிலம், குர்செடின், ருடின், கேம்ப்ஃபெரால், டானிக் அமிலம் மற்றும் எபிகல்லோகேடசின் ஆகியவையும் அதில் அடங்கும்.

நத்தை சூரி மூலிகையானது மருத்துவக் குணமுள்ள பல்வேறு வேதிப்பொருள்களை கொண்டுள்ளதால் வலி நிவாரணியாகவும், பாக்டீரியா வைரஸ் போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பியாகவும், புற்றுநோய் தடுக்கும் தன்மையும், இரத்தச் சர்க்கரை அளவைக் குறைக்கும் தன்மையும், உயர் இரத்த அழுத்தத்தை தடுப்பதாகவும், கல்லீரல், சிறுநீரகம், இருதயம் ஆகிய உள்ளுறுப்புகளை பாதுகாப்பதாகவும், மன பதட்டத்தை குறைப்பதாகவும், ரத்தத்தில் கொழுப்பின் அளவைக் குறைத்து உடல் பருமனை குறைப்பதாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.



‘எத்தைத சொன்னாலும் கேட்கும் நத்தைசூரி’ என்பது வழக்கு மொழி. அந்த வகையில் உடலில் நோய்களுக்கு காரணமாகும் முக்குற்றத்தில் கபத்தை குறைத்து நோயில் இருந்து காத்து ஆரோக்கியத்தை தரக்கூடியது. நத்தை சூரி மூலிகையில் அனைத்து பகுதிகளும் மருத்துவ குணமுடையதாக உள்ளது. இருப்பினும், அதன் விதை

கொழுப்பை குறைத்து ஆயுளை நீட்டக்கூடியது. இதனை லேசாக வறுத்து பொடித்து காபி பொடிக்கு



பதிலாக பயன்படுத்தலாம். இதன் விதைகளுக்கு உடல் உரமாக்கி தன்மையும், ஆண்மைப்பெருக்கி தன்மையும் உள்ளது கூடுதல் சிறப்பு.

உடல் எடையைக் குறைக்க ஆயிரக்கணக்கில் செலவு செய்து, மருந்து மாத்திரைகளை உண்டு சலித்துப்போன பலரும், நத்தைசூரியை பொடித்து பாலில் கலந்து தொடர்ந்து எடுத்துக்கொள்ள கபத்தினைக் குறைக்கும். இந்த ஐயம் என்ற கபம் தான் உயிர்கொல்லி என்கிறது சித்த மருத்துவம். இதனை 'பித்தம் அடங்கிடின் பேசாதே போய்விடு, எத்திய ஐயம்(கபம்) எழுந்திடின் கிட்டாதே' என்ற திருமூலர் திருமந்திர வரிகளால் அறியலாம்.

இரத்தத்தில் அதிகரித்த கொழுப்பின் அளவைக் குறைத்து உடல் பருமனை குறைக்க விரும்பும் பலரும், அவசியம் பயன்படுத்த வேண்டிய, சித்த மருத்துவ மூலிகை நத்தைசூரித் தான். பயன்படுத்தி பலன் அடைவோம். நம் முன்னோர்கள் நமக்களித்த நன்கொடையில் நலம் காண்போம்.

நத்தை சூரி என்றவுடன், இது ஏதோ ஒரு உயிரினத்தின் பெயர் என்று நினைக்க வேண்டாம். இது அரிய வகை மூலிகைளில் ஒன்றாகும். இதன் வித்தியாசமான பெயருக்கு ஏற்ப, பல வித நோய்களை போக்கும் தன்மை உடையது. இம்மூலிகை, சித்து வேலைகள் உட்பட பல்வேறு நோய்களை குணமாக்க பயன்பட்டதால், சித்தர்கள் இதை மாகமூலிகை என, அழைத்தனர்.

இயற்கையாக கிடைத்த மூலிகைகளைக் கொண்டு, பல நோய்களை குணப்படுத்தி வந்த சித்தர்கள், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியையும், வலுவையும் தரும், கற்ப மூலிகைகளைப் பற்றியும் கூறியுள்ளனர். அதில், நத்தைச் சூரி மிக முக்கியமான மூலிகையாக உள்ளது. இதில்

கால்சியம், பாஸ்பரஸ் உள்ளன. அதனால், சித்த மருத்துவத்தில், எலும்பு தொடர்பான நோய்களைப் போக்கும் மருந்தாக இதை பயன்படுத்தியுள்ளனர்.

மருத்துவ குணம்

இது, பூண்டு வகையைச் சேர்ந்த தாவரமாகும். இதன் விதை, வேர், மருத்துவக் குணம் உடையது. இதனை குழி மீட்டான், தாருணி, கடுகம், நத்தைச்சுண்டி, தொலியாகரம்பை என பல பெயர்களில் அழைக்கின்றனர்.

உடல் சூடு தணிக்கும்

நத்தை சூரியின் விதையை, லேசாக வறுத்து பொடியாக்கி, ஒரு ஸ்பூன் அளவு எடுத்து பாலில் கொதிக்க வைத்து, அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து, காலை, மாலை அருந்தினால், உடல் சூடு தணிவதுடன், உடலில் உள்ள, தேவையற்ற, ரசாயன வேதிப் பொருட்களை வெளியேற்றி, சிறுநீரகக் கல்லடைப்பை தடுக்கும். மேலும், ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். நத்தைச்சூரியின் விதையை பொடித்து, தினமும் 1 ஸ்பூன் அளவு எடுத்து, தேனில் குழைத்து சாப்பிட்டால், சீதபேதி மற்றும் வயிற்றோட்டம் போக்கும்.

உடல்பருமன் குறையும்

நத்தைச் சூரியின் விதைகளை, சட்டியில் போட்டு, பொன் வறுவலாக வறுத்து, பொடி செய்து, நீரில் கலந்து சுண்டவைத்து, அத்துடன், ஒரு டம்ளர் பசும்பால் கலந்து, இரண்டு வேளை தொடர்ந்து குடித்து வந்தால், உடம்பில் பற்றியுள்ள ஊளைச் சதை குறையும். ஆண், பெண் இருவருக்குமுள்ள,



வெள்ளை நோய், வெட்டை நோய் குணமாகும்.

தாய்ப்பால் அதிகரிக்கும்

பெண்களுக்கு மாதவிலக்கு காலங்களில் உண்டாகும், அதிக உதிரப் போக்கைத் தடுக்கும். வெள்ளைப் படுதலை குணமாக்கும். 10 கிராம் நத்தை சூரி வேரை, காயவைத்து, பொடியாக்கி, பசும்பாலில் கலந்து, கொதிக்க வைத்து அருந்தி வந்தால், தாய்ப்பால் பெருகும்.

ஆண்மை பலம் அதிகரிக்கும்

இதன் வேர் நோய் நீக்கும் தன்மை கொண்டது. உடலைத் தேற்றவும், விந்து பலத்தை அதிகரிக்கவும், விதை தாதுக்களின் எரிச்சலைத் தவிர்க்கவும், தாது வெப்பத்தைத் தணிக்கவும் பயன்படுகின்றது. நத்தைச் சூரி விதையை அரைத்து, நெல்லிக்காயளவு எடுத்து,

ஒரு டம்ளர் பாலுடன் கலந்து, 2 வேளை சாப்பிட்டு வர, உடல் பலமடையும்; ஆண்மை பலம் அதிகரிக்கும்.

நத்தைச் சூரி பூண்டு வகையைச் சார்ந்தது. இதன் வேர் மற்றும் விதை மருத்துவப் பயன் கொண்டவை. வேர் நோய் நீக்கும் தன்மை கொண்டது.

நத்தைச் சூரியின் விதையைப் பொடித்து தினமும் 1 ஸ்பூன் அளவு எடுத்து தேனில் குழைத்து சாப்பிட்டு வரவேண்டும். இதனால் நோயின் தாக்கம் குறைவதுடன் உடலும் வலுப்பெறும்.

நத்தைச்சூரியின் விதையை லேசாக வறுத்து பொடியாக்கி வைத்துக்கொண்டு 1 ஸ்பூன் அளவு எடுத்து பாலில் கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து காலை, மாலை சாப்பிட, உடல் சூடு தணிவதுடன் உடலில் உள்ள தேவையற்ற இரசாயன வேதிப் பொருட்கள் வெளியேறும்.

நத்தைச்சூரி சிறுநீரகக் கல்லடைப்பு ஏற்படாமல் தடுப்பதோடு இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். விதை, உடல் சூட்டைப் போக்கி உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். சீதபேதி, பெருங் கழிச்சலைப் போக்கும்.

பெண்களுக்கு மாதவிலக்குக் காலங்களில் உண்டாகும் அதிக உதிரப் போக்கைத் தடுக்கும் வெள்ளைப் படுதலைக் குணமாக்கும்.

நத்தைச் சூரி வேரை பொடியாக்கி 10 கிராம் அளவு பசும்பாலில் கலந்து கொதிக்க வைத்து அருந்தி வந்தால் தாய்ப்பால் பெருகும். நத்தை சூரி மூலிகை ஒரு மகா மூலிகை ஆகும். நத்தைசூரி மூலிகை ஒரு வசிய மூலிகை ஆகும். நத்தை சூரி மூலிகைக்கு சாபம் என்பது கிடையாது.

நத்தை சூரி மூலிகை உண்டு வந்தால் உடலுக்கு எந்தவித நோயும் ஏற்படாது. உடல் அழியாமலும் நீண்ட நாட்கள் உயிர் வாழலாம். மேலும் விந்து கெட்டிப்படும். நத்தைசூரி மூலிகை ஒரு காயகற்ப மூலிகை ஆகும்.

நத்தை சூரி விதைப்பொடி மர்றும் அனுக்கரா கிழங்கு பொடி இரண்டையும் சம அளவு எடுத்து பாலில் கலந்து உண்டு வர விந்து கட்டும்.

நத்தை சூரி செடியின் இலையை பொடியாக்கி, பால் சேர்த்து உண்டு வந்தால் உடல் பலம் பெறும்.

தினமும் காலை நத்தை சூரி விதைப்பொடி மற்றும் பனைவெல்லம் சேர்த்து தேனீராக அருந்தி வந்தால், கல்லடைப்பு ஏற்படாது. உடல் இறுகும்.

நத்தை சூரி விதை, பசும்பால் மற்றும் தண்ணீர்விட்டான் கிழங்கு சாறு இவற்றை கொதிக்க வைத்து பின்பு நத்தை சூரி விதையை பொடியாக்கி தினமும் உண்டு வந்தால் நெடுங்காலம் வாழலாம். நத்தை சூரி விதையை பொடியாக்கி பால் கலந்து காலை, மாலை உண்டு வர உடல் வலிமை பெறும். விந்து கட்டும் ஆண்மை கோளாறு விலகும்.



# உதவும்

## உதவியால் வரும் பெருமிதம்

அண்மையில் ஒருநாள் நான் நகரப் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். பேருந்தில் ஒரு காலை ஊன்றி இன்னொரு காலை ஊன்ற முடியாத அளவுக்கு கூட்ட நெரிசல் இருந்தது. அப்போது ஒரு நிறுத்தத்தில் இளைஞர் ஒருவர் தன்னுடைய வயது முதிர்ந்த தாயுடன் பேருந்தில் ஏறினார். அந்த இளைஞனின் தாயார் நிற்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார் என்பது தெரிந்தது.

அந்த அம்மாவைச் சுற்றி இருந்த அத்தனை பேரும், அவரின் நிலையறிந்தும் அதனைக் கண்டும் காணாதது போல் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் இளைஞர்களும் இளம் பெண்களும் கூட அடங்குவர். அப்போது திடீரென ஒரு இளைஞர் எழுந்து “இங்க உக்காருங்கம்மா’ என்று வாஞ்சையுடன் தன் இருக்கையை அந்த அம்மாவுக்காக விட்டுக்கொடுத்தார். அந்த அம்மா அந்த இளைஞரை நன்றியோடு பார்த்துவிட்டு அந்த இருக்கையில் அமர்ந்தார். அந்த அம்மாவின் மகன் பேருந்தின் பின்பகுதியில் நின்றுகொண்டார்.

சிறிது நேரத்தில் பேருந்தின் பின்பகுதியில் ஒரு இருக்கை காலியானது. அந்த இருக்கையை யாருக்கும் விட்டுத் தராமல் தனது அம்மாவுக்காக விட்டுக் கொடுத்த அந்த இளைஞரை அழைத்து மரியாதையோடு அமரச் செய்தார் அந்த அம்மாவின் மகன். ஓர் இளைஞனின் மனித நேயமும் அந்த மனித நேயத்துக்கு மரியாதை செலுத்தும் விதமாக இன்னொரு இளைஞன் தனது நன்றியுணர்வை வெளிப்படுத்திய விதமும் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. தனது இருக்கையை விட்டு கொடுத்த அந்த இளைஞன் என் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்தான்.

இதே போல், மற்றொரு முறை ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணிக்காக அவர் கணவர் ஒரு இளைஞனிடம் அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கீழ் படுக்கையை விட்டுத்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்தப் பெண்மணிக்கு முழங்கால் வலி உள்ளதால் அவரால் மேலே ஏற முடியாது என்று எவ்வளவோ எடுத்துரைத்தார். ஆனால் அந்த இளைஞனோ, “அதெல்லாம் தர முடியாது” என்று முகத்தில் அறைந்தது போல் சொல்லிவிட்டான். வேறு வழியின்றி, அந்தப் பெண்மணி தரையில் துணியை விரித்து தூங்க ஆயத்தமானார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றொருகீழ் படுக்கை இளைஞன், தனது கீழ் படுக்கையில் தூங்குமாறு அந்தப் பெண்மணியைக் கேட்டுக் கொண்டான். பெரியவர்கள் இருவரும் மனதார அந்த இளைஞருக்கு நன்றி கூறினார்கள். அப்போது தன்னால் முடிந்த ஓர் உதவியை ஒருவருக்கு செய்தோம் என்ற மனநிறைவால் அந்த இளைஞனின் முகத்தில் ஒரு பெருமிதம் தெரிந்தது. சட்டென்று, பேருந்தில் ஓர் அம்மாவுக்கு உதவி செய்த அந்த இளைஞனின் முகம் என் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அவரின் முகத்திலும் அதே பெருமிதம்! அதே பிரகாசம்!

இந்தப் பெருமிதமும் மனநிறைவும் ஒருவருக்கு





# மனமே தெய்வம்

## கே. சௌந்தர்யா

உதவி செய்யும் போது மட்டுமே கிடைக்கிறது. குறிப்பாக, முகம் தெரியாதவர்களுக்கு உதவி செய்யும் போது சற்று கூடுதலாகவே கிடைக்கிறது. பேருந்திலும் ரயிலிலும் முதியவர்களுக்கு உதவி செய்த அந்த இளைஞர்களுக்கு வேண்டுமானால் அந்த முதியவர்களின் முகம் மறக்கலாம். ஆனால் தகுந்த நேரத்தில் உதவிய அந்த இளைஞர்களின் முகம் அந்த முதியவர்களுக்கு நிச்சயம் மறக்காது.

பேருந்திலும் ரயிலிலும் நடந்த இந்த இரண்டு நிகழ்வுகளையும் என் நண்பனிடம் சொன்ன போது பதிலுக்கு அவன் ஒரு உருக்கமான நிகழ்வை விவரித்தான். என் நண்பனின் குடும்பம் அவனுடைய சிறு வயதில் வறுமையில் வாடியிருக்கிறது. அவன் தந்தை ஒரு குவாரியில் கல்லுடைக்கும் வேலை செய்து வந்தார். தீபாவளிக்கு அவனுக்குப் புத்தாடை வாங்கிக் கொடுக்க கூடப் பணமில்லாமல் அவன் தந்தை தீபாவளிக்கு முதல் நாளன்று தனியாக அமர்ந்து கண்கலங்கி கொண்டிருந்தாராம்.


இதைப் பார்த்த அவன் தந்தையுடன் பணிபுரியும் சக தொழிலாளி ஒருவர், நூறு ரூபாய்க்கு ஒரு புதுச் சட்டை வாங்கிக் கொடுத்துவிட்டு, “அடுத்த வருஷம் இதே போல என் மகனுக்கு நீங்க வாங்கிக் கொடுத்திறனும்“ என்று விளையாட்டாக சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாராம். உணர்ச்சி தாளாமல் அவர் பின்னால் ஓடி வந்து கட்டி அணைத்து கண்கள் நிறைய நன்றி சொன்னாராம் அவன் தந்தை.

ஏனென்றால், அந்த காலகட்டத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால் மட்டும்தான் நூறு ரூபாய் சம்பாதிக்க முடியும். அந்த சக தொழிலாளியின் மனிதநேயத்தைப் பற்றி, தான் இறக்கும்வரை தந்தை சொல்லிக் கொண்டிருந்தார் என்று என் நண்பன் கூறிய போது என் கண்கள் கலங்கின.




எனது பக்கத்து வீட்டுக்காரர் ஒரு தனியார் நிறுவனத்தில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்து வருகிறார்.ஆனாலும் செலவைப் பொருட்படுத்தாமல், தினமும் காலை எழுந்தவுடன் ஐம்பது ரூபாய்க்கு வடை வாங்கி வருவார். அவற்றை பிய்த்துப் போட்டு மாடியில் உள்ள காக்கைகளுக்கு உணவு படைப்பார்.

அதனால், தினமும் காலை ஏழு மணிக்கு அவர் வீட்டு மாடியில் வடைக்காக காத்திருக்கும் காக்கைகளின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டும். “எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்’ என்று நான் அவரிடம் கேட்ட போது, “காலை எழுந்தவுடன் இப்படிச் செய்வதால் ஒரு மன நிறைவு கிடைக்கிறது. அந்த மன நிறைவுடன் அந்த நாள் முழுவதும் என்னால் சந்தோஷமாக பிற செயல்களில் ஈடுபட முடிகிறது’ என்று கூறினார். எனக்கு அவர் மீதிருந்த மரியாதை பன்மடங்காக உயர்ந்தது.




வங்கியில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு பணம் எடுப்பதற்கான படிவத்தை நிரப்புவதில் இருந்து, நடு வழியில் பெட்ரோல் தீர்ந்து பைக்கை தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருப்பவருக்கு பெட்ரோல் வாங்கிக் கொடுப்பது வரை எல்லாமே மனிதநேயம்தான். உதவியில் பெரிது, சிறிது என்கிற வேறுபாடு இல்லை. மனதார செய்கிற எல்லா உதவியுமே விலை மதிப்பு மிக்கவைதான்.

இப்படி நாம் மனிதர்களை உற்று நோக்கும்போதுதான் மனிதநேயம் மிக்கவர்கள் இன்னும் ஆங்காங்கே இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. முகம் தெரியாதவர்களுக்கு காலம் கருதி உதவி செய்பவர்களால்தான் இன்னும் மனிதநேயம் பூமியில் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

`நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் உதவவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார் அமெரிக்க நடிகை வர்ஜினியா வில்லியம்ஸ். பிறருக்காக இரக்கப்படும் சுபாவம், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை மனிதர்களுக்கு அமைவது மாபெரும் வரம்.

பிறரின் கனவுகளை அடைய நாம் உதவினால், நம் இலக்கை நாம் எளிதாக அடைந்துவிட முடியும் என்பது இயற்கை விதி. ஏதோ ஒரு வழியில் அதற்கான உதவி நமக்குக் கிடைத்தே தீரும். நம்மால் பிறருக்கு புது வாழ்க்கை அமையலாம், செல்வம் சேரலாம், தைரியம் தரலாம், புது நம்பிக்கையளிக்கலாம். இவையெல்லாம் இரக்கத்தின் மூலமாகத்தான் சாத்தியமாகும். பிரதிபலன் எதிர்பாராமல் உதவி செய்வதுசிலரின்குணமாகவேகூட இருக்கும் அப்படிப்பட்ட, வணக்கத்துக்குரிய மனிதர்கள் நம்மைச்சுற்றி இருக்கத்தான் செய்கிறார்கள்.

உலகம் அழியாமல் உயிரோடும், உயிர்ப்போடும் இருக்க வேண்டுமானால், அறிவாற்றல், ஆளுமை, அதிகாரம் கொண்ட மனிதர்களைவிட அன்பு, கருணை, இரக்கம் கொண்ட மனிதர்களே தேவை. ஒரு மனிதன் அறிவாளியாக இருக்கலாம். ஆளுமை உடையவனாக இருக்கலாம். அதிகாரம் படைத்தவனாக இருக்கலாம். எல்லாம் இருந்தும் அவனிடம் மனித நேயம் இல்லாவிட்டால் தான் நினைத்த எதையும் அவனால் சாதிக்க இயலாது.

மனித நேயத்தின் மூலமே இறைவனை காண முடியும். பல ஆயிரம் ஆண்டுகளாக மனித நேய மாண்புடன் வாழ்ந்த புனிதர்கள் நிறைந்த பூமி







நமது பூமி. உயர்வான ஒழுக்கம், உன்னதமான பண்பாடு, அவலக்குரல் கேட்டால் துடித்து எழும் மனித நேயம், ஆன்ம நேயம், அத்தனை நற்பண்புகளோடும் உலகம் வியக்கும் வாழ்க்கை வாழ்ந்து மனித குலம் செழிக்க வழிகாட்டினார்கள் நம் முன்னோர்கள்.

ஈ, எறும்பு, புழு, பூச்சி, வண்டு, பறவை, விலங்குகள் கூட துன்பப்படக் கூடாது என்ற எண்ணம் அவர்களது மனதில் மேலோங்கி இருந்தது. கிறீஷஷ் ஸிமீணீபீ — ஏற்காடு தங்கமலை ரகசியம் சங்க காலத்து கடையெழு வள்ளல்கள் தங்களது கொடைமடைச் செயல்களால், மனித நேயத்தின் சிகரங்களாக புகழப்பட்டார்கள். குளிரால் நடுங்கிய காட்டு மயிலுக்கு இரக்கமுற்று தனது போர்வையைக் கொடுத்தான் பேகன். வாடிய முல்லைக்கொடி படர தனது தேரினை ஈந்தான் பாரி. வலிமைமிக்க குதிரைகளை இரவலர்களுக்கு கொடையாக வழங்கினான் காரி.

ஒளி மிக்க நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் இரவலர்களுக்கு கொடுத்தான் ஆய். நீண்ட நாட்கள் உயிர் வாழ வைக்கும் அமிர்தமான நெல்லிக்கனியை தான் உண்ணாமல் தனது புலவர் நீண்ட நாள் வாழ்ந்தால் தமிழ் சிறப்புறும் என சிந்தித்து, அதை அவ்வையாருக்கு கொடுத்தான் அதியமான். பசியோடு வாடி வந்த இரவலர்களுக்கு வேண்டிய பொருள் வழங்கி, மன நிறைவு கண்டு மகிழ்ந்தான் நள்ளி. கூத்தாடுபவர்களுக்கு வளமான நாடுகளை வழங்கி மகிழ்ந்தான் ஓரி. இந்திரர் அமிர்தம் கிடைத்தாலும் அது இனிமையானது என தனித்து உண்ணாத தகைமையாளர்களாலும், தமக்கென வாழாமல் பிறருக்கென வாழ்கின்ற சான்றோர்களாலும்தான் இந்த உலகம் அழியாமல் இருக்கிறது என நமது முன்னோர் களின் மனித நேயம் குறித்துக் கூறுகிறது புறநானூறு.




நாம் உலகில் வாழ்வது ஒரு முறை. அவ்வாழ்வு பிறருக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும். சக மனிதனிடம் அன்பு காட்டுவது, அவனைத் தன்னைப்போல மதிப்பது, எல்லைகள் கடந்து ஏழைகளுக்கு இரங்குவது, பசிப்பிணி நீக்கி அவர்களை வாழ வைப்பது போன்ற சமுதாய கடமைகளில் நாம் ஒவ்வொருவரும் நம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. "உதவுவதற்காக அன்புடன் ஓடுங்கள், அமைதி உங்களை பின் தொடரும்".



# தமிழ்

## 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு


### JANUARY




### FEBRUARY




### MARCH




### APRIL




### MAY




### JUNE

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### JULY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

### NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |


### DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat the Best!
Eat Fresh!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers